உ

சிவமயம்.

பராபரவித்யா விவரண

சிவாகம வேததாரதம்யம்,

வேதாகம தாரதம்யம்.

இஃது

திருசிரபுரத்திற் கடுத்த

திருவானைக்காவலி லிருக்கும்

சிவாகம பாடசாலை உபன்யாஸகராகிய

பச்சாம்பேட்டை

ஸத்யோஜாத சிவாசாரியரால்

இயற்றப்பட்டு

திருசிரபுரம்

லக்ஷ்மீ விலாச முத்திராக்ஷர சாலையில்

வெளியிடப்பட்டது.

1908

உ

சிவமயம்.

வேதாகம தாரதம்ய முகவுரை.

சிவபக்த சிகாமணிகளாகிய நம்மனோர் பலர்க்குந் தெரிவித்துக் கொள்வதாவது. மதுரை சிவதர்ம பரிபாலன சபையாரால் பிரசுரித்த சைவ தூஷண நிராகரண மென்னுந் தலைப்பேர் புனைந்த புத்தகத்திற் வேதஸாரஞ் சிவாகம மென நிரூபத்திருத்தலை சிற்சிலர் ஆக்ஷேபித்து வேத முயர்ந்ததா? சிவாகமமுயர்ந்ததா? அல்லது இரண்டுஞ்சமமா? என ஆசங்கிக்க புகு முன்னிலையில் வேதசாரஞ் சிவாகம மென்பது விடையாக தெனவும் இவர்கள் கூறிய சமாதானம் வேதத்திற்கே மகிமை சார்ந்துள்ளதெனவும் இஃதன்றி வாயுஸம்ஹிதா வாக்கியத்தில் ஸ்ரௌதா ஸ்ரௌத விசாரங் கூறியவிடத்தில் சுருதிஸாரம் ஸ்ரௌதமெனவும் ஸ்வதந்திரம் இதரமெனக் குறித்துள்ளது அச்ரௌத மெனவும் கூறப்பட்டிருத்தலின் காமிகாதிகளான அஸ்ரௌதசிவாகமங்களை ஸ்ரௌதமென வலிந்திட்டுப்பொருள் கொண்டது குற்றமாமெனவும் சுருதி சூத்திரர் முதலினோர்க்கு அத்யயன விலக்காய் நிற்றலின் சூத்திரரும் படிக்க விதித்துள்ள சிவாகமம் வேதஸார மாதல் பாங்கல மெனவும் வேதத்தை நோக்க ஸாரம் விசேஷமாதல் பற்றி இங்ஙனம் சூத்திரர்க்கு அத்யயன ஹேதுவுண்டாகாதெனவும் இவ்வாறுள்ள பல்வகையாம் ஆசங்கைகளை எம்பால் சிற்சிலர் ஆசங்கிக்கப் புகுந்ததால் அவ்வாசங்கை நிராகரித்து உண்மை யுபகரிக்க வேதாகம தாரதம்மிய மென்னும் இம்மெய் நூல் வெளிப்படுத்த துணிந்தோம்.

இந்நூல் வெளியிட எம்மை பன்முறை வர்ப்புருத்தி பொருள் நலம் உபகரித்து சைவாபிமான மேற்கொண்டு நிற்கும் பூதலூர் பிரும்மஸ்ரீ சுப்பிரமணிய சிவாச்சாரியா ரவர்களுக்கு எப்பொழுதும் நன்றி பாராட்டக் தக்கவராயிருக்கின்றோம அவர் வேதசிவாகமங்களில் வைத்திருக்கும அன்பும் அவ்வன்புதடித்து நம் சிவ பெருமானிடத்து அந்தரங்க விசுவாசமும் வைத்தது. மென்மேல் அபிவிர்த்தி யடையு மென்பதில் தடையில்லை.

சுபம்:—இப்புத்தகம் வேண்டுபவர் எமக்காவது பூதலூர் சுப்பிரமணிய சிவாச் சாரியாரவர்களுக்காவது தெரிவித்துக் கொண்டால் விலாஸதாரர்களுக்கு வி. பி. மூலியமாய் அனுப்பப்படும்.

ஸத்யோஜாத சிவாச்சாரியார்.

ஆகம பாடசாலை உபன்யாஸகர்

திருவானைக்காவல், திருச்சி.

உ

திருச்சிற்றம்பலம்.

சைவதூஷண நிராகரணம்.

வேதாகமதாரதம்யம்.

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥ சைவதூஷணநிராகரணமென்னும்

இத்தலைப் பெயரிட்ட புத்தகமொன்று மதுரை பிரும்மஸ்ரீ கல்யாண சுந்தரபட்டரவர்களால் கிடைக்கப்பெற்றவை நோக்கியானந்தமுற்றேம்—அவற்றுள்? தியஸாபிகல் ஸொஸைட்டியாரது ஒரு குறிப்பு வருமாறு? எனத்தொடங்கி மூன்று வைதிக மதங்களில்? ஒன்றாகிய விசிஷ்டாத்வைத தத்தைப்பற்றி? இஃது எழுதப்பட்டதாகையால் இதில் சைவமதமானது அடங்கவில்லை எனவும்? சிவஞானமுனிவர் முதலியவர்கள்சைவத்தை வேதாந்தத்தைவிட்டு முற்றும் விலக்கி? வேதாந்திற்கு புறம்பான ஆகமசாஸ்திரங்களையே ஆதரவாக்கி சிலவேறுபாடுள்ள தாத்பரியங்களுட

னும். சித்தாந்தம் என்கிற நாமதேயத்துடனும் சைவமதத்தை ஸ்தாபித்து? அது அவருக்குப் பின்வந்தவர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது எனவும்? அதை வைதிக விசிஷ்டாத்வைதத்துடன் சேர்க்காமல் பிரத்தியேகமாக விவரித்துப்பேசுவதுதான் உசிதமென்றெண்ணி இப்பத்திரிகையில் பிரஸ்தாபப் படுத்தவில்லை என்பது ஸொஸைட்டியாரது அபிமதமென்பதைக்காட்டப்பட்டிருந்தது- வைதிகமதமென இதுகாருஞ்செவியுற்றதில்லையாதலின் உபயரட்டைக் கெருடனென்பதுபோல் மூன்று வைதிகமதமென வரைந்துள்ளது யாதென உற்றுநோக்கப் புகுவோமாக - த்வைதம் -அத்வைதம்-விசிஷ்டாத்வைதம்-இம்மூன்றும் மூன்றுவைதிகமத மென்பதவர் கொள்கையாதலால் இவை முயற்கோடுபோல் முடிந்துள்ள மதங்களேயாகும் - த்வைதம்-அத்வைதம்-விசிஸ்டாத்வைதமென பாட்டி கதையாய் வழங்கற்பாலதன்றி உலகினருள் இம்மதத்தவருளரென்பதெங்கெனுங் காணேம் உளரேல் ஈண்டெடுத்து விளக்குவாராக. ராணுவத்தார்ஜனகணிதக்குறிப்பில் பிராமணஜாதிசிவமதமென தம்மதத்தை வெளியாக்கியுள்ளதோடும்,ஒத்தி பந்தகம் சாஸனம் கடன்பத்திரம் முதலியவற்றிலும் இவ்வாறே குறிக்கப்பட்டிருக்கின்றதை இவர்கள் இன்றுமறியார்கள்-த்வைதம்-அத்வைதம்- விசிஷ்டாத்வைதம் முதலியமதங்களுளதாயின் அவற்றை யேன்வரிவித்துக்காட்டாதொழிந்தனர். இவற்றால் மதத்தொகையில்கணக்கிடா வைதிகமதமெனபுதிதாய்ப்புதுக்கிய இம்மதங்களைவேத விஹிததர்மங்களன்றென்பதா யொதுக்கப்படும்.வேதங்களிலோ- ஶிவஏகோத்யேய: ஶிவங்கர: ஸர்வமந்யத்பரித்யஜ்ய -என்னுஞ்சுருதிவாக்கியத்தால் சிவ பெருமானை அத்வைதராகவும் துரீயராகவும் சுருதிகளினுத்கோஷிக்கின்றபடியால் அத்வைதம் அங்கமும்சிவமங்கியுமாய் முடிபுற்றிருத்தல் பற்றி அங்கிரூபமான சிவத்தை முன்னற்கொண்ட சைவமதமே அத்வைத மென்பது தெற்றென விளங்கும். இவற்றை நீற்று அத்வைதமெனத் தனிமதம்புதுக்குதல் யெதுநிமித்தம்-அத்வைதமென்பது தனித்துள்ளபதார்த்த மன்றாதலால் அத்வைதப்பட்டு நிற்கும் பதார்த்தம் யாது-சிவபெருமானை யன்றோ-இவற்றால் பரம வைதிக சிகாமணிகளும்சைவஸமயத்தவராய் வெளிவரத்துணிவுற்றனர் இவற்றில் சிறிதுன்னோக்காது மூன்று வைதிக மதமென வறுவித்துணர்த்தியதும் விந்தையே இம்மும்மதங்களும் ஒரு

ங்கே வைதிகமதமாயின் ஒன்றையொன்று கண்டிக்கக்காரணமில்
லை - த்வைதம் அத்வைதத்தைக்கண்டித்தும்-அத்வைதம் த்வைத
த்தைக் கண்டித்தும்- விசிஷ்டாத்வைதம் த்வைதாத்வைதங்க
ளைக் கண்டித்துமிருப்பதால் இம்மூன்று மொன்றிலொன்று முற
ணியவேறுவேறு விஷயங்களை நிலைநாட்டியுளதாதலின் மூன்று
வைதிகமதமென ஒருங்கு சேர்க்க முயன்றது சரியாகா-இம்மூன்
று மதமும் வைதிகமதமா- இதிலொன்றிற்கொன்று தாரதம்மிய
முளதா- எது வைதிகம்-எது அவைதிகம்-எண்டெடுத்து விளக்
குவாருக - மதமென்பது தெய்வத்தை முன்னாகக்கொண்டுவரும்
நற்பேராதலால் அத்வைத மதத்தவர்க்குத் தெய்வம் யாது-அவர
ணியும் புண்டிரங்களெவை-அவர்கொள்ளும் பிரமாண நூலெது
பிர்ம்மமே தெய்வம்- பஸ்மபுண்டிரம் சித்திரபுண்டிரம் மிர்த்திகா
ஊர்த்தவபுண்டிரம் முதலியவைகள் இம்மதஸ்தரணியும் புண்டிர
ங்கள் இதற்கு வேதமே பிரமாணமெனக் கூருவராயின் - பிரமா
ணம் - பிரமேயம் - பிரமிதியென்னும் திருபுடி வியவகாரம் இங்ங
னம் வருமாதலின் அத்வைதக் கொள்கையுடைய இவர்களுக்குத்
தனக்கன்யம்மித்தையாதலால் வேதம் மாத்திரம் சத்யமாதல் யா
ங்கனம் - பிரம்மம் வேதமென யிரு பொருள்த் தொந்தமுண்டா
தலால் இவர்க் கத்வைத ஹானி வந்து விடும் பிரம்மத்தின் உச்சு
வாஸம் நிச்சுவாஸம் வேதமெனக்கூருதலின் பாதையேர்படக்கா
ரணமில்லை யென்பரேல்-அஸ்ய மஹதோ பூதஸ்ய நிச்வஸிதமே
தத்யத்ருக்வேதோ-என்னும் வாக்கியத்தால் இந்த மஹ
த்தானபூதத்துக்கு உச்சுவாஸ நிச்சுவாஸமே ரிக்காதி வேதங்க
ளெனக்கூறியிருத்தலின் மஹதோபூதசப்தம் யார்பொருட்டு வே
தங்களில் பிரஸ்தாபித்துள்ளது-மூக்கிருந்தாலன்றோ உச்சுவாஸ
நிச்சுவாஸ மேர்ப்படக்காரணம் மூக்குள்ள பிரம்மம் இவர்களுக்
கு மித்தையாயிருத்தலின் அவற்றால் வெளிப்பட்ட வேதங்களில்
சத்யபுத்தி வருதல்யாங்கனம்-இவர்கள் விவஹாரம் மேல்ச்செல்
லச் செல்லத்தான் மாத்திரமே ஸத்யம் மற்றயாவும் பொய்யெனக்
கூருவராதலால் இவர்க்கன்யமான வேதமும் பொய்த்துஅவற்று
லாய வைதிகமும் பொய்த்துவிடும், வைதிகம்வேதாகமபுராண இ
திஹாஸாதி பிரமாணங்களை கைப்பற்றிநிற்கும் ஸத்பிராமணர் ப
ரத்தெனிற்றலால் இவற்றையப்ராமாண்யமென்றோதுக்குவோர்க்கு
வைதிகம்ஏராதுஏராது. இவர்கள் தங்களை வைதிகரெனப்பிறர்கூ

ராது தாமே கூறிக்கொள்வதென்போலிருக்குமெனின் கிறிஸ்துவர் தங்களைஞானியெனவும் வேதாகமாதி சர்ச்சாத்திராராய்ச்சியும் சர்யை கிரியை யோகம் ஞானமென்னும் சாதனசதுஷ்டய சுத்தாத்வைத சிவஸாக்ஷாத்கார மயமாம். சைவசமயத்துள்ள ஸத்பிராமணுதிகளையும் மற்றுள்ளவர்களையும் அஞ்யாநியெனக் குறைகூறுதலை யொத்திருக்கும். இங்ஙனம்நோக்காது யாம் வைதிகர் எனமென்மேலெழுவதால் யாதுபயன் இவர்கள் மூன்று வைதிக மதமென காட்டியது - த்வைதவிசிஷ்டாத்வைத அத்வைத பாஷ்யங்களை நோக்கியதாலென தெரியவருகிறதால் ஸ்ரீகண்டபாஷ்யத்தை எங்கனம் வைத்துள்ளாரென்பது விளங்கவில்லை-அவற்றை உட்கொண்டிருப்பதால் நான்கு வைதிகமதமென கூட்டி முடித்தலுங்கூடும் இவர் பாஷ்ய விவரணங் கூறி இருப்பது பஞ்சபாண்டவரை தெரியாதாக் கட்டில்க்கால்போல் முக்கிளை இரண்டுபிரிவாய் என ஒருவிரல் நீட்டி கீழே ஸைபர் எழுதி அதையும் அழித்து விட்டதை யொத்திருக்கின்றது வேதபாஷ்யம் நான்காயிருத்தலின் நான்கு வைதிகமதமென்பதொழிந்து மூன்று வைதிகமதமென பிரஸ்தாபித்ததெக் கருத்துப்பற்றியோ விசிஷ்டாத்வைதமென்பதால் ஸ்ரீகண்டபாஷ்யம் அதனுள்ளடங்குமெனின் ராமானுஜ பாஷ்யமொன்றிருப்பதால் அவை என்றுமென்பதையுற்று நோக்குவாராக ஸ்ரீகண்ட பாஷ்யம் ராமானுஜ பாஷ்யம் இவ்விரண்டும் விசிஷ்டாத்வைதமாயிருத்தலின் அங்ஙன கூறப்பட்டதென்னின் இவ்விரண்டும் பதித்வனிரூபணத்திலும் பத்தமுத்திலோகோத்பத்தி முதலிய விவரணங்களிலொன்றிலொன்று முரணிய வேறுவேறு சித்தாந்தங்களைநிலைநாட்டியுள்ள இவ்விரண்டும் ஒருபுடைத்தாய நூலாதல் யாங்கனம்-விசிஷ்டாத்வைதமென்னுஞ் சொல்லானே அவை ஒரு புடைத்தாய் நிற்குமெனின் விசிஷ்டாத்வைதமென்றதால் அத்வைதமும் அதனுள்ளடங்கிய பொருளாதலின் வேறு பிறித்துகூற வெளிவந்ததெற்றுக்கோ- இவற்றால் மூன்று வைதிக மதமென கூறியது குளறி விசேஷநாய் நிற்கின்றது இவர்கள் வைதிகரென்பதுண்மையாயின் வேதம் பிரமாணமாய் கொள்ளவேண்டி வருகிறது- [illegible] என்னுஞ் சுருதி வாக்கியத்தால் ஈசானமுகத்தில் [illegible]த்ன்தகளும் தோற்றியதென்புளா வெளியாயினமயின் இம்முகத்தினின்று வெளிவந்ததற்கு வித்யாவாசகம் சிறப்பித்து கூறப்பட்

டிருக்கின்றது-முண்டகோபநிஷத்தில்-த்வே வித்யே வேதிதவ்யே இதிஹஸ்மயத் ப்ரஹ்மவிதோ வதந்தி பராசைவாபராச- என்னும் வாக்கியத்தால் இரண்டுவித்தைகள் அறியவேண்டுமெனவும் பிரும்மவித்துக்களாயுள்ளோர் இவ்வாறே அறிகிறார்களென்றும் அவைபரமபரமென பேதப்பட்டு நிற்குமெனவுங் கூறியிருத்தலால் வித்தை இரண்டுடையதென்பது நெற்றெனவிளங்கும் | தத்ராபரா ருக்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோऽதர்வவேத: சிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம் சந்தோ ஜ்யோதிஷமிதி அதபரா யயா ததக்ஷரமதிகம்யதே - என்னும்வாக்கியத்தால்-ருக்கு-எஜுஸ்-ஸாமம்-அதர்வணம்முதலியவேதங்கள் நான்கும்சிக்ஷைவியாகர்ணம் சந்தஸ்நிருக்தம்ஜோதிஷம்கற்பமுதலியவேதாங்கங்களாறும்அபரவித்தையெனவும் அக்ஷரத்தை அதிக்கிரமித்துள்ளது பரவித்தையெனவுங் கூறியிருத்தலால் வைதிகவாதம்பூண்ட இவர்களிங்ஙனமென்செய்வர்-வேதம் அபரமெனவும்வேறொதீகமாம்வித்தையொன்றுளதெனவேதமுகத்தால்வெளிப்படுலின்முன்னர் ஈசானமுகத்தில்ஸகலவித்தைகளுந் தோற்றியதென்னும்சுருதிக்கும் இங்ஙனம்பரவித்யாபிரதிபாத்தியங்கூறியசுருதிக்கும்ஒருபுடையொற்றுநிற்றலால்இப்பரவித்தையாதெனவைதிகராவர்யாவரும் ஊகித்தறியப்புகுவாராக-பரவித்தை உபநிஷத்துக்களென கூறுவராயின் உபநிஷத்து வேதமோ அல்லது வேதான்னியமா - வேதமெனின் - அபரவித்தை என்பதாயிவற்றை பொதுக்கப்படும்-வேதான்னியமெனின்-வேதபாஹ்யத்வம்உபநிஷத்துக்களுக்கு கூறவேண்டிவரும்-வேதத்தினின்றே வெளிப்பட்டதாய் உபநிஷத்துக்களே க்குறிக்கப்பட்டிருத்தலின் வேதான்னியமென்பது கூடாது. வேதான்னியமாய் ஒரு மெய்நூல் வெளிப்பட்டிருக்குமாயின் அவை தோற்றியதற்கு பிரமாணம் வேண்டும் ஈசான ஸர்வவித்யானும் மென்னும் சுருதியே இவற்றிற்கு பிரமாணமெனின் உபநிஷித்துக்கள் ருக்காதி வேதமூலகமகங் கூறியிருப்பதால் இவற்றை ஈசான முகோத்பவங் கூருதலிழுக்காய் முடியும் இவற்றால் உபநிஷித்துக்களும் அபரவித்தையென்பதே முடிபாம்-பிரும்மத்தை அடையுந்னில்லையை பரவித்தையென கூருவோமெனின் ஜெகஜ்ஜீவேசுரர்முதலிய முப்பொருளும்வித்தையாயிருத்தலின் இவைடைதலெங்கும் ஜீவேசுவரபேதமிருந்தாலன்றோ அடையுங்கா

லக்குறிப்புண்மையாம் இவ்விரண்டுமேற்ற ஏகான்மவாதிகளுக்கு இவை பொய்யாயிருத்தலின் அடையுங்காலமென்றதும் பொய்யாய் முடிந்துவிடும் இதுவுமன்றி வித்தை இரண்டுளதெனவேதங்கூறியிருக்க அபரவித்தையை மாத்திரம் அங்கீகரித்து பரவித்தைக்கலத்தில் ஸைபர் போடும் இவர்கள் வைதிகம் சாலச்சிறப்புடைத்தே-அபரவித்தைக்கு-அஸ்யமஹதோ பூதஸ்யநிஸ்சுவிதமேதத் ருக்வேதோ எனவும் பரவித்தைக்கு ஈசானஸர்வ வித்யானா மெனவும் சுருதிகளிரண்டு பிரகாரமாய் கூறியிருத்தலின் இவ்விரண்டும் இரண்டு வித்தைகளேயாதும் இவற்றுள் அபரவித்தையாதென்பதை பிரமாண புரஸ்ஸரமாய் முன்னற்குறிப்பிட்டோம் இங்கனம் பரவித்தையாதென்பதை தீர்மானிக்கப்புகுவோமாக-ஈசானஸர்வவித் யானாமென்னும் சுருதிக்கேர்ப்ப சைவபுராணம் அகஸ்திய ஸம்ஹிதையில்-[illegible] என்னும் வாக்கியத்தால் பிரணவாதிமஹாமந்திரங்களும் அகாரரதி அக்ஷரங்களும் சிவஞான மயமாம் காமிகாதி திவ்யாகமங்களும் - சிவபெருமான் ஈசானமுகமாகிய ஊருத்வமுகத்திற் றோற்றியதெனவும் - உக - சாகைகளோடுங்கூடிய ருக்வேதம் தத்புருஷ முகத்திற்றோற்றியதெனவும் - ளக - சாகைகளோடுங்கூடிய எஜுர்வேதம் அகோரமுகத்திற்றோற்றியதெனவும் - து - சாகைகளோடுங்கூடிய ஸாமவேதம் வாமதேவ முகத்திற் றோற்றியதெனவும் - கூ - சாகைகளோடுங்கூடிய அதர்வணவேதம் ஸத்யோ ஜாத முகத்திற்றோற்றியதெனவுங்கூறியிருத்தலின்-ஈசானமுகத்தில் ஸகலவித்தைகளும் தோன்றிற்றென்னும் வேதத்துட் கருத்து வெளியாயிற்று இஃதன்றி அக்ஷராதிகம்யம் நாதநாதாந்தமேயாதலால்-[illegible]-எனவும் [illegible] எனவும்-[illegible]

ஶ்லோகம் | பரத்ருத்யே ஶ்லோகம் ஜ்ஞானம் காமிகாதிவாக்யஸம்வாஸ (...) நாதரூபம் ஜ்ஞானம் ஶிவஸம்பந்தம் ஶ்லோகம் | யதாவிரு க்ஷணம் பக்ஷ த்ருக்ஷ வாயாம் நுவோர்த்வயோ: | என்னுஞ்சிவாகமம் வாக்கியங்களால் நாதரூப சிவஞான மயமான சிவாகமங்கள் பரவித்யா ஸரூப மெனவும் நாதாந்தமான மேம்பாடுடையமதத்தையே இச்சைவாகமங்கூறுகின்றதெனவும்வேதசிவாகம் இரண்டும் பரமரமென்னும் பேதத்தால் பதியையும் - பசுவையும் பொருளாகக்காட்டுமெனவும் - பதியைப் பொருளாக்காட்டு ஞானம் காமிகாதிளான பரஞானமெனவும் பசுவை பொருளாகக்காட்டுவது வேதாதிகளான அபரஞானமெனவும் - இந்தபராபர ஞானங்கள் இராத்திரியில் மநிதற்கண்ணும் பூனையின்கண்ணும் வித்யாஸத்தை அடைந்திருப்பதுபோல் இவ்விரண்டும் வித்யாஸத்தை அடையுமெனவுங் கூறியிருத்தலால் காமிகாதிகளான திவ்பாகமங்கள் பரவித்தை யென்பதமயப்பெறும்-இஃதன்றி-ஊர்த்வா யோஹோத்ஸா ஷைவஶியா வாத்ரம்ஹோதிதம் | ஊர்த்வ ஹோதாத்ருவம்ஜ்ஞானம் வாஜ்ஞாதிதீஶிதம் | அயோஹோ ஶோத்ருவஞாவிஶுவாதேணதிஸ்திதம் பாராவரவிஹாஶாஸ்ரம் ஶிவஜ்ஞானம்ப்ரகாஶதே 'என்னும்வாக்கியத்தால்ஊருத்வமுகத்தாலும் - அதோமுகத்தாலு மிரண்டுபிரிவாய் வேதங்கள் வெளிப்பட்டதெனவும் - ஊருத்வமுகத்தால் வந்தது பரவித்தை எனவும் அதோமுகத்தால் வந்தது அபரவித்தை எனவும் இப்பராபர மென்னும் பேதத்தால் சிவஞானம் பிரகாசித்து விளங்குகிறதெனவுங்கூறியிருத்தலின் சிவாகம்பரவித்தைஎன்பதற்கய்யமில்லை வேதம் சிவாகமங்களை பரவித்தையென குறித்துணர்த்தியதின்றெனின்- பராபர பேதத்தால் வேதமிருகூறாய் நிற்றலின் சிவாகமமுணர்த்தியது வேதவுணர்ச்சியேயாகும் - இவற்றால் வேதம்வுணர்ந்தியதின்றென்னும் அபவாதம்திரஸ்கரிக்கப்படும் ருக்காதிவேதத்தால் பரவித்தையெனச்சுட்டியுணர்த்தியதென்றெனின்ருக்காதிவேதம்அபரமாயிருத்தலின் அபரம் பரத்தைகுறித்துணர்த்தா-இதுவுமன்றி சிவஞானத்திற்கு வேதாகமங்கள் அங்காங்கி பாவமுடையதுபற்றி வேதம் அங்கமுஞ்சிவாகமம் அங்கியுமாய் இருத்தலின் அங்கி அங்கத்தை குறித்துணர்த்தும் தரமுடையதும் அங்கம் அங்கியைக் குறித்துணர்த்தத் தரமற்றதுமா

ய்க் காணப்படுதலின் வேதங்கூறுது விடுத்தது பாதகமாஹாது வேதஅங்கமென எவற்ருல் நிரூபிப்பதெனின் - தஸ்யயஜுரேவ சிர: ருக்தக்ஷிண: பக்ஷ: ஸாமோத்தர: பக்ஷ: ஆத்மாதர்வாங்கிரஸ: புச்சம் ப்ரதிஷ்டா-என்னும் வாக்கியத்தால் எஜுர்வேதம் சிரஸெனவும் ருக்குவேதம் வலப்புரத்து சிரகெனவும் ஸாமவேதம் இடப்புரத்து சிரகெனவும் அதர்வணவேதம் வாலெனவும் வேதத்திலேயே அங்ககல்பனை கேழ்க்கப்படுவதால் இவை சிவஞானத்திற்குஅங்கமென்பதிற்றடையில்லை இஃற்ருல் வேதம் அங்கமாயினுந்தன்றி சிவாவாகம மங்கியாயினதின்றெனின் அஜிதாகமம்- ஶிவஜ்ஞாநாங்கம் வேதஶ்ச ஸர்வாங்கம் விதுர்புதா: | ஸாங்காங்கிஹாவயோ ந்யஷ்ட ஆஹாவிதம் வரயேஸ்வர: | என்னும் வாக்கியத்தால் சிவஞானத்திற்கு வேதம் அங்கமாகவும் சிவாகமம் - அங்கியாகவும்-சொல்லப்படுகிறதெனவும் அங்காங்கி பாவத்திஞல் சிவபெருமான் விளங்குகிருரென வெளிப்பாயினமையிஞல் வேதம் அங்கமும் சிவாகமம் அங்சியுமாய் முடியப்பெரும் - அங்ககல்பனைக்கு வேதமும் அங்கிகல்பனைக்கு சிவாகமத்தையும் பிரமாணமாக்கி வியவஹரித்தல் தகுமோவெனின் - சிவாகமம் வேதாதீகமான பரவித்தையென்பதாய் முன்னெடுத்துக் காட்டியுள்ளோமாதலாலும் அங்கம் அங்கியைக்குறித்துணர்த்தாதென்னும் ஞாயமுகத்தாலும் சிவாகமம் வேதவிசேஷமான ஸத்பிராமாண்யமென்பது சாதிக்கப்படும்-சிவாகமங்கள் வேதோதக்கிருஷ்டமானஸ்வேதாத்கிருஷ்டபிரமாணமாயிருப்பின் - ஏவம் ஸம்போதிதோ ருத்ரோ மாதவேந முராரிணா | சகார மோஹஶாஸ்த்ராணி கேஶவோபி ஶிவேரித: | காபாலம் நாகுலம் வாமம் பைரவம் பூர்வபஶ்சிமம் | பாஞ்சராத்ரம் பாஶுபதம் ததாந்யாநி ஸஹஸ்ரஶ: | என்னுங் கூர்மபுராண வாக்கியத்தால் - காபாலம் - லாகுலம்-சாக்தம் - பைரவம் - பாஞ்சராத்திரம் - பாசுபதம் - இவை முதலிய மதங்களை அசுராதி வியாமோஹார்த்தம் சிவகேசவாதிகளிருவரும் கற்பித்தாரெனக் காணப்படுதலின் சிவாகமங்களுக்கு பாதிதமுண்டாகாதோவெனின் அக்கூர்மபுராணத்திலேயே- ஸ்ருஷ்டம் ஹியாவதேவம் வை ந்ருணாம் பாஶமயம் ஹ்யதம் | ஶாஸ்த்ராணாம் ஸம்ஸ்ரேஷ்டம் வேதஸாரவிநிஶ்சிதம் | ஏஷ பாஶுபதோ யோகோ ஜ்ஞேயோ வைவஸ்வதாதிபி: | ஹ்ருஷ்டோ ஹ்யேஷஸ்து ஸு

தத்த்வம் நிஷ்டாபரோபிதீயதே ஶ்ருதிபி: । என்னும் வாக்கியத்தால் ரஹஸ்யத்திற்கெல்லா ரஹஸ்யமாயும் சூக்குமமாயும் வேதஸாரமாயுமுள்ள பாசுபதவிருதத்தைத்தெறிவிக்கும்ஆகமமந்திரங்கள் முக்தியின்பொருட்டு முன்னரெம்மால் கூறப்பட்டதெனவும் இஃது பூதிசாதன சிவசின்னம் புனைந்த புனிதராயுள்ள முமுக்ஷுக்களால் ஸேவிக்கத்தக்கதென்றும் நிஷ்காம்யர்களாகிய பரமவைதிகசிகாமணிகளுக்கு இதுவேசுருதியெனவுங் கூறியிருத்தலால் இவற்றாலும் சிவாகமங்களுக்கு பரசுருதியென்பதை நிலைநாட்டப்படும். அக்கூர்ம புராணத்திலேயே-அந்யாநி சைவ ஶாஸ்த்ராணி லோகேஸ்மிந் மோஹநாய வை । வேதவாதவிருத்தாநி மயைவ கதிதாநி து । வாமம் பாசுபதம் ஸோமம் லாகுலம் சைவ பைரவம் । அஸேவ்யமேதத் கதிதம் வேதபாஹ்யம் ததேதரம் । யாநி ஶாஸ்த்ராணி த்ருஶ்யந்தே லோகேஸ்மிந் விவிதாநி து । ஶ்ருதிஸ்ம்ருதிவிரோதேந தேஷாம் நிஷ்டா ஹி தாமஸீ। என்னும்வாக்கியத்தால் வாமபாசுபதம்-ஸோமம்-லாகுளம் பைரவம் முதலிய மதங்களை அஸுராதி வியாமோகார்த்தமாய் என்னால் கற்பிக்கப்பட்டதெனவும் இவை வேதாகம விருத்தமுடையதுர்மதமாதலின் சாதுக்களால்சேவிக்கத்தக்கதன்றெனவுங் கூறியிருத்தலால் மோகனசாஸ்திர மினத்தென்பதினிது விளங்கும். அன்றியும் -வாமபாசுபதாசாரா: வாமஞ்சராத்ராஶ்ரயாஶ்ச யே, ஶ்ருதிஸ்ம்ருதிவிரோதேந தேஷாம் நிஷ்டா ஹி தாமஸீ। என்னும் வாக்கியத்தால் வாம பாசு பதாச்சாரமும் பாஞ்சராத்திராச்சாரமும் சுருத்யாகமவிருத்ததர்மங்களாதலின் இவற்றையும்பரித்தியஜிக்க கூறியிருக்கின்றது. இக்காரணம்பற்றி வேதாதீத சுத்தசிவஸாக்ஷாத்கார பரவித்தையாம் சிவாகமங்களை மோகன சாஸ்திரமென்பதை பிரமாணமுகத்தால் திரஸ்கரித்தொதுக்கப்படும். இஃதிங்கனமாயின் ஸ்ரீநீலகண்டசிவாச்சாரியார் அவர்கள் பாஷ்யம் ௩-ரு-வது சூத்திரத்தில் -வக்த்ரபேதஸம்ஜ்ஞஸ்ய எனக் கூறியிருப்பதாலும்-வக்த்ர: பரமேஶ்வரஸ்ய ஶ்ருதிவிஜ்ஞாநஜந்மகாரண ஸ்வஸ்யாவிதாமஸ நிஷ்டாஸ்தாவிவ்யாயாந் ஜிஜ்ஞாஸவஸ்யேஶ நஸ்ஸ்ரத்தாகா: கேவலம் நிஷ்டாஸ்வம் ஸம்ஶ்ரித்யம் நவே திஶம்ஸேஹ:-என்னும் வாக்கியத்தால் ஆகமநி

ஷ்டதர்மங்கள் கேவலந் திரமென புறக்கணித்தொதுக்கியிருக்க அவ்வைவேதோதக்கிருஷ்டமாதல் யாங்ஙனமெனின் பரமேசுவரருக்கு சுருதிஸித்தமாயுள்ள ஜகதுபயகாரணத்வங் கூறுவதில் அதாவது நிமித்தகாரணம் உபாதானகாரணம் இவ்விரண்டையுஞ்சுருதி ஸித்தமாய்க்கூறும் ஆகமநிஷ்டர்கள் அபிப்பிராயத்தை அறியாதவர்களான ஏகதேசிகளான தாந்திரிகர்கள் பிரும்மத்திற்கு உபாதானகாரணமின்றி கேவலம் நிமித்தமாத்திரமே கூறுகிறார்கள் அது ஸரியா ஸரியன்றுவென்னும் ஆசங்கைசெய்து கேவலநிமித்தத்வங்கூறும் பரிணாமவாதிகளையும் விராட்ரூபவிருஷ்டிகேவல நிமித்தமுடைய ஹிரண்ய கர்ப்பவாதிகளையுங் கேவலதாந்திரகரென்னக் கண்டித்தொதுக்குவதால் இவற்றைச் சைவாகமத்திலேற்றி தூஷிக்கமுயன்றதும் வியப்பினும்வியப்பே. பரிணாமவாதமாவது பிரும்மமே பிரபஞ்சரூபமாய் பரிணமித்ததென்பது. அஃதென்பேரெனின் தங்கம்பல்படித்தான் ஆபரணங்களாதல்போலாம். பிரும்மம் ஸத்தாதலின் பரிணாமம்வருதல் யாங்கனம். பரிணாமம் அஸந்தாதலின்தானே பரிணமிக்கக் காரணமில்லை தங்கம் பல்படித்தான் ஆபரணங்களாதற்கு கம்மாளனன்றி தங்கந்தானே ஆபரணமாகாததுபோல் பிரும்மஞ் செகத்தாய்ப்பரிணமிக்குமிடத்தில் பிரும்மத்தைஜகத்தாய் பரிணமிக்கச் செய்தகர்த்தாவொருவன் வேண்டப்படுவன். இவற்றால் பிரும்மமஸத்தும் பரிணமிக்கச்செய்த கர்த்தாஸத்துவமாய் முடிதலால் சுருதிகளில் ஸத்தாமாத்திரமாய் பிருமத்தை பிரதிபாதித்திருப்பது பற்றி கேவலம் நிமித்தத்தால் பரிணாமங் கூறுதல் சுருதிக்கிலக்கான அவைதிகமே யாதலாலிவற்றை வைதீகமன்றென்பதாய்க் கண்டித் தொதுக்கப்படும். அப்பிரும்மத்தின் சத்தியால் பரிணமிக்குமெனின் சத்திநிமித்தமும் பிரும்மம் உபாதானகாரணமுமாய்முடிதலால் முன்னர்ப்பிரும்மம் ஜகதுத்பத்திக்கு நிமித்தமென்றது குற்றமாய்முடியும். உபாதானகாரணத்திற்கு நிமித்தத்வம் விருத்தமாம். இவற்றால் பிரும்ம சத்தியால்பிரும்மம் பரிணமிக்கப்பட்டதென்பதுங்கூடாது இஃதன்றி பரிணாமவாதிகளுக்குச்சத்திபொய்யாயிருப்பதால் சத்தியால்பிரும்மம் பரிணமித்ததென்பதும் பொய்யாம். இவர்களுக்கு ஜகதுத்பத்தியோ பொய்யாயிருத்தலின் - தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத: ஆகாஶாத்வாயு: ... ப்ருதிவீ என்னும்லோகோத்பத்தியைக்கூறுஞ் சுருதிவாக்கியங்க

ரும் இவர்களுக்குவிருத்தமாம். இங்ஙனம் யாவும் பொய்யாய்க் கூறுவதாகிய விருப்பும்பொய்யாய்முடிந்துவிடும். இப்பொய்யுடைத்தாய வுற்பத்தியினர் பிரும்மமும் பொய்யாய் முடிந்துவிடும். இவ்வாறுள்ள ஞானம் பலவற்றையும் ஊகித்தறியாது உபாதானகாரணமின்றி கேவலம் நிமித்தகாரணமாத்திரங்கூறிப் பிரும்மஸ்தானத்தில் ஸ்பர்சோடை யத்தனிக்கும் இவர்கள் வைதிகஞ் சாலச் சிறப்புடைத்தே- வேதத்தைத் தாந்திரிகமெனக்கூறியதேவ ஸ்திசுருதிப்ரஸித்தமான ஜகதுபாதகாரணத்வங்கூறும்சைவாகமங்களை அவ்வாறுரைத்ததன்று வேதத்தால் கூறப்படாதபொருள் யாவுஞ்சிவாகமத்தில் கூறப்பட்டுள்ளதாதலின் சிவாகமத்தை நீக்கின் இங்ஙனம் வைதிகவாதத்திற்கு நாஸ்திகத்துவம் வந்துவிடும். லௌகிகம்-வைதிகம்-அத்யாத்மிகம்-அதிமார்க்கம்-மாந்திரிகமென்பேதம் ஐந்துடையது. அவற்றை எடுத்து விளக்குவோமாக- லௌகிகம் வைதிகஞ் [illegible]

[illegible]

ஊாஶ,ெக ॥ என்னும் வாக்கியத்தால் லௌகிகம்-வைதிகம்- அத்யாத்மிகம்-அதிமார்க்கம்-மாந்திரிகம் என பேதமைந்துளதெனவும் வைத்யம், க்ஷத்திரிய தர்மமாகிய தண்டநீதியைக் கூறும் ஸ்மிருதி இதிஹாஸம்; இந்தமூன்றும் லௌகிக சாஸ்திரமெனவும் மீமாம்ஸம் நியாயம் வைசேஷிகம் இந்த மூன்றும் வைதிக சாஸ்திரமெனவும் சாங்கியம் பாதஞ்சலம் வேதாந்தம் இந்தமூன்றும் அத்யாத்மக சாஸ்திரமெனவும் பாசுபதம் காபாலம் மஹாவிருதம்; இந்தமூன்றும் அதிமார்க்கசாஸ்திரமெனவும் இருபத்தெட்டு ஸங்கியையுடைய சைவசித்தாந்த ரூபமானசிவாகமம் அனுக்கிரஹஸ்வரூபமானமாந்திரீகமும் இதற்கன்னியமானயாவும்பரித்யஜித்து மாந்திரிகத்தை கிரகித்தல்வேண்டுமெனவும் ஆத்மலாபத்தை உத்தேசித்து பரமேசுவரரால் சொல்லப்பட்டதெனவும் ரிஷிகள் கல்பபேதத்தினால் மோஹத்தால் வேதார்த்தமென வேதாகமவிருத்தமான வசனங்கள் கூறியிருக்கின்றாரெனவும் பரம்.அபரமென்னும்பேதத்தினால் சுருதி இரண்டு பிரகாரமாகுமெனவும் ருக்கு யஜுர் ஸாம அதர்வணம் முதலிய வேதங்களும் வேதாங்கமாறும் அபரசுருதி எனவும் நாதோத்பன்னமான சிவாகமம் பரசுருதிஎனவும் இவ்விரண்டு சுருதிகளையும் அறியவேண்டுமெனவும் விசேஷமான பரசுருதியை நன்றாய் அறியவேண்டுமெனவும் அபரம் பூர்வபக்ஷமும் பரஞ்சித்தாந்தமாகவும் சொல்லப்படுமெனவும் பராபரவிபாகமாய் சிவஞானம்பிரகாசிக்கின்றதெனவும் கூறியிருத்தலால் சிவஞானமுனிவர்வேதாந்தமதத்திற்குவேறாய் சைவமதத்தைஆகமவாக்கியத்தால்சித்தாந்தித்திருக்கிறாரென துக்கப்படுவதால் யாதுபயன்? வேதாந்தம் அத்யாத்மகமாதலின் அதற்குமேல்; அதிமார்க்கம் அதற்குமேலன்றோ சிவாகமமிருக்கின்றது வேதாந்தம் சிவாகமத்திற்கு அடுத்தபடிக்கி கீழ்படி-ரொம்ப கீழ்ஸ்டெப்பிலிருப்பதைஉயர்த்தநினைப்பது எப்படி-

ஶுஜகூஜகூ ஷிவஜயிவஜுஹஂ வெஷாஜெஷஷ ஶுஜகாஶி ஷஂ ! நாஷாஷிஶிவக ஸ்வாஂஷஶஓா ஐஶெஷ ஶஸ ஙிஶி க॥

என்னும் வாக்கியத்தால் பிரகிருதிதத்வம்முதல் பிரதிவிதத்வ பர்யந்தம்வேதாந்தத்தால்வெளிப்படுமெனவும்—நாதாதிசிவதத்வபர்யந்தம்ஆகமத்தால்வெளிப்படுமெனவும்— கூறியிருத்தலால் வேதாந்தத்தாலெட்டப்படாததத்வங்களை சிவாகமம்

வெளிப்படுத்துவதால் வேதாந்தம்இவற்றைஎட்டிபிடித்துக்கிட்டவுந்தரமன்று—வேதத்திற்கு உதாத அனுதாதஸ்வரங்கள் அமைந்துள்ளதுஸ்தோத்திரஞ் செய்யும்பொருட்டேயன்றி உபாஸனைபரஸ்யபேதம்நோக்கியன்று இந்தஸ்வரம் சிவாகமத்திற்கில்லாததாலும்சுலோகரூபமாயிருத்தலாலும்—பரசுருதிஆகாதென்பாராயின்—வேதம்ஷட்ஜமமத்தியநிஷாதகாந்தாராதிஸுஸ்வரமில்லாததால் அபஸ்வரமாயிருக்கிறதென ஸங்கீதஞ்ஞர் குறைகூறுவராயின் இவரென்செய்வர். வேதத்திற்கேற்பட்ட ஸ்வரம் இதுதான் என்பதைத்தவிர தோடி பைரவி கானடாகௌரீ மனோஹரீ முதலிய ராகங்களில் வேதத்தைப்பாட மாட்டாராதலின் அதனதற்குள்ள ஸ்வரத்தைத்தவிர நம்மால்கற்பித்தல்கூடுமோ. வேதம் நான்காயிருத்தலால் யஜுர்வேதத்திற்கு ருக்குவேத ஸ்வரம் மாறுபடும் ருக்வேதத்திற்கு ஸாமவேதஸ்வரம் மாறுபடும். ஸாமவேதத்திற்கு அதர்வணவேதஸ்வரம் மாறுபடும். இவற்றுள் எந்தவேத உதாத அனுதாதம் சரி எந்தவேத ஸ்வரம் பெசகு அதினதின் ஸ்வரம் அதனதற்குச்சரி என்பதுபோல் சிவாகமும் சுலோகரூபமாய் அமைந்துள்ளதும் சரி இவ்வுண்மை நீற்று ஸ்வரம் சுருதி லயம் அந்தபிராணம் பஹிப்பிராணம்முதலிய பந்தலக்ஷணங்கள் வேதாதீதமாகிய பரவித்தைக்கு வேண்டுமென்பது வேதமறியாதோர் செயலேயாகும். வேதம்பதார்த்தலக்ஷணமின்றி ஸ்துதிபரமான தடஸ்தலக்ஷண முடையதாதலின். ஸ்தோத்திரத்திற்கு உதாத அனுதாத ஸ்வரங்கள் வேண்டப்படும் சிவாகமங்கள் கேவலம் ஸ்துதி பரமல்லாத பதார்த்த நிச்சயமும் ஸ்வரூபஞானமுமாயிருத்தலின் ஸ்வரம்-இம்மெய்நூலிற்கு அனுவச்யக மாகும் ஸ்வராதீதவஸ்து பிரதிபாத்தியமுடைய சிவாகமங்கள். ஸ்வரமல்லாதிருக்கிறதென்னும் துர்வாதம் திரஸ்கரித்து இவ்வாதிகளை அவைதீகரென வேறுபிரித் தொதுக்கப்படும். சிவாகமங்களிலோ ஹிருஸ்வம் தீர்க்கம்-புலுதம்-ஸூக்ஷ்மம்-அதிஸூக்ஷமமெனஉச்சாரண பேதம் கூறியிருத்தலின் இவ்வுச்சாரணபேதங்கள் குருமுகமாய் உணர்ந்துய்தல்பற்றி பரிபவமற்றோர்க்கு இவற்றையுணர்த்தல் கூடாதென்னும் பரவித்தையின் நியாமகமுணர்ந்து இவற்றை விரித்துணர்த்தாது சுருக்கிக் கூறவிடம் பெற்றது. இவ்வாறுள்ள ஐவகைப்பட்ட உச்சாரணத்தின் முன் உதாத

அனுதாத ஸ்வரங்கள் தலைநீட்டி வாழுதலெங்ஙனம்-இவற்றால்
அபரவித்தை ஸ்வரமுடையதும் பரவித்தை ஸ்வராதீத உச்சார
ணபேதமுடையதுமாய்காணப்படுதலின் இவற்றில்ஸ்வரவியவஸ்
தை ஏற்படுத்தமுயன்றதும் விசாரணைக் குறைவாகும். இவ்வதி
மகிமைதங்கிய பரவித்தையாம், சிவாகமங்கள் பிராம்மண பரிக்கி
ரிஹீதமன்றெனவும் சூத்திரர்க் குரியதெனவுங் கூறி சிற்சிலர்
தம் அவைதிகத்தை நிலைநாட்ட வெளிவருகிறார்கள் அவை தப்
போ ஒப்போவென்பதை விசாரிக்கபுகுவோமாக-யாம் முன்னர்
வேதம் அபரவித்தை யெனவும் சிவாகமம் பரவித்தையெனவும்
சுருதி யுக்தி அனுபவம் முதலிய நியாயவாயிலாய் நிரூபித்துள்
ளோமாதலின் அபர சுருதி தமக்கெனவும் பர சுருதி சூத்தி
ரர்க்கெனவும் ஓதுக்கப்புகுவோர்-சூத்திரரினுங் கடையாவரே ய
ன்றி பிராம்மணராதல் யாங்ஙனம் வேதம் பிராம்மண க்ஷத்திரிய
வைசியபர்யந்தமே அத்யயநம் செய்யவிதித்திருக்க சூத்திரரும்
படிக்கவிதித்துள்ள சிவாகமம் பரசுருதியாதல் யாங்கனமெனின்
அபரசுருதி கேவலம் கர்மப்பிரதி பாத்யமுடையதும் பரசுருதி
ஞானப்பிருதி பாத்யமுடையதுமாய் யிருத்தலால் கர்மத்திற்கு
ரியார்பிராம்மணாதி வைசியபரியந்தமுள்ளவர்களெனவும் ஞான
த்திற்குரியார் பிராம்மணாதி பரிபவமுடைய ஸர்வான்மாக்களும்
யெனக்கூறியிருத்தலால்ஞானம்தமக்கங்கீகாரமன்றி அவற்றைசூ
த்திரர் பரந்தொதுக்கி கர்மபலதாதாவாய்நின்றனுக்கிரகிக்கும் சி
வபெருமானை இழந்த இவ்வாதம் நாஸ்தீகத்வமெய்தப் பெறுத
லால் இவர்கள் ஆஸ்திகராதல் யாங்ஙனம் -சிவாகமாகிய பரவித்
தை -ஸம்ஸார ந்ஸ்வ வித்ரா நாம்-என்னுஞ் சுருதிவாக்கியத்தால்
ஸர்வவித்தியாபிரதி பாத்யங்கேட்கப்படுதலால் இவைதீவிரதர ப
ரிபர்கிகளாகிய ஸர்வான்மாக்களுக்கும் முத்தியின் பொருட்டுப்ப
யன்படத்தக்கவை. இவற்றால் முத்திதிசையில் பரிபாகமொன்று
மாத்திரமே விளங்கப்படுவதன்றி வருணதாரதம்ய மின்றுதலால்
பரிபாகமல்லாத உயர்ந்தவருணிகளுக்கும் சிவாகமங்களில் அதி
காரமல்லாது போய்விடும்-தீக்ஷாவிஹீ நவிப்ராத்ரா: க்ஷத்ரவண-
ஹூத்ரஜாதய: । ஸம்ஹிதிஶிவஶாஸ்த்ரஞ்ஞேளரவம் நரகம் வ்ர
ஜேசு। என்னும் பரவித்தியா வாக்கியத்தால் சிவதீக்ஷை யல்
லாத பிராம்மணன் முதல்சூத்திரரிருதியாக சிவாகமபடணஞ்செ

ய்யக்கூடாதெனவும் மீறிச்செய்வாராயின் நரகத்தை அடைவரெனவும் கேட்கப்படுதலால் இப்பரவித்யாத்யயனத்திற்கு அபுத் ஸம்ஸ்காரமாகிய உபனயனுதி கர்மஸம்ஸ்காரம் போதாதென்பது கருத்து. இப்பரசுருதி அத்யயனத்திற்கு அபரசுருதியால் ஸம்ஸ்கறிக்கப்பட்ட திவிஜத்வஸித்தி போதாது. ஜந்மநா ஜாயதே ஶூத்ர: கர்மணா ஜாயதே த்விஜ: என்னும் அபரசுருதிவாக்கியத்தால் ஜன்மாவால் சூத்திரத்வமும் கர்மாவால் த்விஜத்வமுங் கூறுதல்பற்றி சூத்திரற்குவேதாதிகாரமிவர் பரத்தேவந்துவிடுவதால் சூத்திரர்வேதாத்யயனஞ் செய்யக்கூடாதென்னும் வேதவாக்கை இவர்கள் உல்லங்கனஞ்செய்தவர்கள் ஆகின்றார். இவற்றுலிவ்வபர ஸம்ஸ்காரிகளேவேதாத்யனத்திற்கு லாயக்கற்ற சூத்திரரெனவே திரஸ்கரிக்கப்படும். பிராம்மணருக்குத் த்விஜத்வஸித்தி வந்தவிடமென்பாராயின்-ஜந்மநா ஜாயதே ஶூத்ர: என்பதிவர் பிறமாணமாதலால் ஜன்மாவிலுள்ள சூத்திரற்குத்தானே வேதாத்யயனங் கூடாதென சுருதிகள் புறக்கணித்தொதுக்கிஇருக்கின்றது. ஜன்மாவால் சூத்திரத்வமுடைய இவர்கள் இவ்விதியை மீறி நடப்புதெங்ஙனம். கர்மாவால்த்விஜத்வம்வந்துவிடுவதால் அவ்விதி எமக்குடன்பாடென்பாராயின் சூத்திரனுக்கு த்விஜத்வம்வந்து வேதாதிகாரம்வந்துவிடும் என்னுமிவர்கள் ஸமாதானத்தையாவரொப்புவர்-சூத்திரற்கு வேதாத்யயனம் விலக்கென்பதையாவருமங்கீகரித்துள்ள விஷயமாதலின் சூத்திரற்குக் கர்மாவால் த்விஜத்வம் வந்து வேதாத்தியனத்தில் அதிகாரம்வந்து விட்டதென்னும் இச்சூத்திரர் வார்த்தையை ஸத்பிராம்மணர் அங்கீகரிப்பரோ கண்டோக்தியாய் சூத்திரரெனக்கூறிக்கொள்ளுமொருவர்வேதாத்யயனத்திற்கு பரிபவமுடையார் யாமெனமுந்தி நிற்பதுயாங்ஙனம்-இவற்றுல்சூத்திரற்கு வேதாத்யயனம் விலக்கென்பதுபிரஸித்தவிதியாதலின்-சைவஞ்சூத்திரற்குறியதெனக்கூறிதாஞ்சூத்திரத்வம் பெற்று அத்யயனவிலக்காய் நிற்பது இவர்கள் பரத்தன்றி சைவஸ்மயிகள் பரத்தன்று. சிவபிராம்மணர்களுக்குஜன்மாவால் பிராம்மணத்துவமுங் கர்மாவால் சிவத்வமு முண்டாகின்றபடியால் வேதாகமாத்யயனதர்மம் அவர்பரத்து நிற்கின்றது இவற்றுல் வேதாத்யயனத்திற்கு இவர்களே யுரியவரென்னும் வாதந்திரஸ்கரித் தொதுக்கப்படும். ஆதிசைவ பிராம்மணர் சிவபெருமான்

திருமுகத்தினின்று வெளிவந்தவரென பரவித்தை கூறுவதால் சிவம் பிராம்மணராதல் பற்றி ஜன்மாவினாலேயே பிராம்மணத்வ வஸித்தி இவர்களுக்கேற்பட காரணமாயிற்று-ஸம்ஸ்காரத்தாலும் சிவமாந்தன்மையுடைய சிவதீக்ஷா ஸத்பாவத் யோதகமாயிருத்த லின்-இவ்விருதிறத்தாலும் பிராம்மண ஸ்வரூபியாகிய சிவபெருமானுக்கு ஸஜாதியராகின்றனர்-இக்காரணம்பற்றி இவர்க்குற்ற பிராம்மணத்வத்தை யாவராலும் அசைக்கமுடியாப் பொருளேயாகும்-இவற்றைசிறிதுமுற்று நோக்காது சைவஞ்சூத்திரற்கேயுறிய தெனக் கூறுவோர் தமக்குற்ற சூத்திரத்வத்தை வெளிப்படுத்தற் பொருட்டேயன்றே- [illegible] என்னும் பரசுருதிவாக்கியத்தால் பிராம்மணராகிய பரமேசுவரரது முகத்தின்னின்று ஆதிசைவர்கள்வந்ததால்இவர்களுக்கு ஜன்மாவினாலேயே பிராம்மணத்வஞ் சித்திக்கிறதெனவும் இவர்களுக்கு கர்மத்தால் நாசரகிதமாகிய சிவத்வம்வந்து விடுவதால் அதிமஹிமைதங்கியத்விஜர்களாகின்றரெனவும் த்விஜத்வலக்ஷணங் குறிக்கப் பட்டிருத்தலின் இவர்களின் முன்ஜன்வால் சூத்திரத்வமெய்தப் பெற்றுள்ளார் பிராம்மணராதல்யாங்ஙனய் இவற்குற்றசூத்திரத்வத்தைநோக்காது வேதந்தமக்கேஸர்வமான்யமாய் விடப்பட்டது அவற்றால்யாம் வைதிகரென தற்புகழ்ச்சிகூறுதல் குற்றமாம் வைதிகமென்பது ஜன்மாவாலுங்கர்மாவாலும் பிராம்மணத்வம் பெற்றோர்கன்றே பொருந்தும் ஜன்சூத்திரத்வமுடைய இவர்பரத்து வைதிகம் எராதுஎராது. இவற்றால் பரமபரமென்னும் உபயசுருதிஅத்யயனம் சிவபிராம்மணர்களாகிய ஆதிசைவப்பிராம்மணர்களுக்கும்-பரசுருதி அத்யயனம் ஜன்மசூத்திரர்கள் கர்மத்தால் சிவமாய்த் விஜத்வஸித்தி பெற்ற ஸத்சூத்திரருக்கும் விதித்துள்ளது [illegible] | [illegible] | என்னும் பரசுருதி வாக்கியத்தால் சிவதீக்ஷையல்லாத பிராம்மணர்-க்ஷத்திரியர்-வைசியர்-சூத்திரர் முதலினோரும் சிவஞானமயமா பரவித்தையாகிய சிவாகமங்களை நோக்குவராயின் ரௌரவாதி நரகத்

ஷ்தையடைவரெனக் கூறுதல் பற்றி நம்பூர்வபக்ஷியார் ஜன்மாவால் சூத்திரத்வமெய்தப் பெற்றிருத்தலின் வேதாதிகாரமுமற்று சிவதீக்ஷாதி ஸம்ஸ்காரமின்மையின் சிவாகமம் முதலிய சிவசாஸ்திர படனத்திற்கும் அர்ஹரல்லா தொழிந்துவிடுவார் சிவாகமம் அப்பிரமாண்ய மெனக்கூற வெளிவந்ததாலிவற்கு வேத சிவாகம பாஹ்யத்வம் உடன் பாடாயின ஜன்மசூத்திரத்வ முடைவ ஷ்சைவசமயததுள்ள ஸத்சூத்திரி பரஸம்ஸ்கார விசேஷத்தால் பரசுருதி அத்யயனத்திற்கு அதிகாரியாய்நிற்கின்றார் பூர்வபக்ஷியாகிய சூத்திரர்கள் பரசுருதிக்கும் விலக்காயிருத்தலின் அப்பரசுருதியாகிய வேதந் தமக்குடன்பாடன் றென்பதை ஏனின்னமிவர்கள்ஊகித்தரிந்திலர் இக்காரணம் பற்றி, வேதமொன்றே பிறமாணம் சிவாகமம் அப்பிராமாண்யமெனக் கூறுபவற்கு சூத்திரத்வஸித்தியுண்டாய் வேதாதிகார மிழந்து அவைதிகத்வம் ஸித்திக்கப் பெருதலால் அபரஸம்ஸ்காரமாகிய உபனயனாதிஸம்ஸ்காரத்தோடு பரஸம்ஸ்காரமாகிய சிவதீக்ஷை செய்யப் பெருவர்ராயின் இவர்கள் மஹா சைவத்வஸித்தி பெற்று ஆச்சார்ய முகமாய் ஸம்ஸ்கார விசேஷத்தால் ஜன்மாவால் பிராம்மணத்வமும்கர்மாவால் சிவத்வமும் பெற்று த்விஜத்வசித்தி பெருகின்றார் அங்ஙனமாயின் இவர்களுக்கு வேதாகமாத்யயனத்தில் அதிகாரம் வந்துவிடும் இவ்வாறன்றி கேவலம் கர்மபரமாயுள்ள ஸ்மிருதி ஸம்ஸ்காரமாகிய அபரஸம்ஸ்காரத்தால் வைதிகம் வந்துவிடுமென்னும் வாதந்திரஸ்கரிக்கப்படும்-ஸம்ஸ்காரௌ த்விவிதௌ ப்ரோக்தௌ ப்ராஹ்மணஸ்ய விசேஷத꞉ | தத்ராத்யம் வைதிகம் ஜ்ஞானம் [illegible] தே | [illegible] ஸம்ஸ்காரேண [illegible] ஸம்ஸ்கார உச்யதே | ஜ்ஞானஸம்ஸ்காரேண [illegible] | ஸ்ம்ருத்யுக்தா யே ச ஸம்ஸ்காரா꞉ [illegible] | சிவாகமோக்தா [illegible] ஜ்ஞானஸம்ஸ்கார [illegible] | ஸ்ருதி [illegible] ஸம்ஸ்கார [illegible] | [illegible] ஸம்ஸ்காரஸஹஸ்ரம் [illegible] | ஸம்ஸ்காரோ [illegible] ப்ரோக்த꞉ [illegible] | [illegible] இதி ஸ்ருதே꞉ | என்னும் பரசுருதி வாக்கியத்தால் ஸம்ஸ்காரம்

பாஹ்யம் அந்தரம் என இரண்டு பேதமுடையதெனவும் பாஹ்யம் கர்மஸம்ஸ்காரமும் அந்தர் நிஷ்டம் ஞான ஸம்ஸ்காரமுமாமெனவும் ஸ்மிருதியில் சொல்லப்பட்ட ஸம்ஸ்காரங் கர்மஸம்ஸ்காரமும் சிவாகமத்தால் சொல்லப்பட்ட ஸம்ஸ்காரம் ஞானஸம்ஸ்காரமுமாய் முடியுமெனவும் ஸ்மிருதி ஸம்ஸ்காரத்தால் ஸ்வர்க்காதி புவனபோகமே பல பிராப்தி யெனவும் சிவாகம ஸம்ஸ்காரத்தால் முக்தியே பல பிராப்தியாமெனவும் ஸ்மிருதி பிராம்மணாதி வரண ஸம்ஸ்காரமும் சிவாகமம் பிராம்மணாதி உபாஸனா மார்க்க ஸமய ஸம்ஸ்காரமுமாய் முடிதலால் ஸமயஸம்ஸ்காரமில்லாதிருப்பனாயின் ஜன்மத்தால் சூத்திரரெனக்குறிக்கப்படுமெனக்கூறியிருத்தலால் ஸ்மிருதியும் பிராம்மணத்வஸித்திக்கு சிவாகமஸம்ஸ்காரத்தையன்றோ அபேக்ஷித்து நிற்கின்றது சிவாகமஸம்ஸ்காரமல்லாவிடில் ஸ்மிருதியால் ஜன்ம சூத்திரத்வந்தானே சித்திக்கப்பெறும் இவற்றால் வரண ஸம்ஸ்காரமாகிய அபர ஸம்ஸ்காரம் பெற்ற பிராம்மணர்கள் ஸமய ஸம்ஸ்காரமாகிய பரஸம்ஸ்காரஞ் செய்யப் பெறாதிருப்பராயின் வரணத்தாலுயர்ந்த பிராம்மணராயிருப்பினும் ஸமயங்கைவரப் பெறாததால் ஸமயத்தால் தாழ்ந்து சூத்திரரினுங்கடையாவார் அபரஸம்ஸ்காரம் கர்மஸம்ஸ்காரமேயாதலால் கர்மம் ஜடமாதலால் கர்மபலதாதா பரமேசுவரராதல் பற்றி இப்பர ஸம்ஸ்காரத்தை இழந்து நிற்கும் பிராம்மணர்கள் நாஸ்திகரேயாவார் இன்னாத்திகர்க்கு அத்யயனம் பயன்படாதொழிந்து விடும் பௌத்தர் முதலிய பிராம்மணர்களும் அத்யயனஞ் செய்திருக்கின்றார் இவ்வபர ஸம்ஸ்காரிகளும் அத்யயனஞ் செய்திருக்கின்றார் பௌத்தர் கூறுந் தர்மம் வேத விஹித தர்மமல்லாதது போல் உபாஸனை யற்ற அபரஸம்ஸ்காரிகள் கூறுந் தர்மமும் வேதவிஹித தர்மங்களன்றென்பதாய் வேறு பிரித்தொதுக்கப்படும் இன்னாத்திகர்க்கு வேதத்தாலாய பயனென்னோ வேதாத்யயனம் புனகிராப் முதலிய அசேதன பதார்த்தத்திலுமிருக்கின்றது வேதமென்னும் சப்தகிரஹணஜடவஸ்துக்கள் கர்த்திரு போக்திருத்வவிஷயபோதனுகர்வில் அறிவின்மையாதலின் புனகிராப் வேதவாக்கியம் பயன்படாதது போல் இவ்வபர ஸம்ஸ்காரிகள் அத்யயனமும் பயன்படா தொழிந்து நிற்கும் இவற்றால் அத்யயனஞ் செய்த மாத்திரத்தாலே வைதி

கத்வஸித்தி வந்துவிடுமென்பது தப்போ ஒப்போவென்பதை விவேகிகள் ஊகித்தறிவார்களாக வேதசிவாகமிரண்டினுட்கருத்தறிந்து அபரம்பரமென்னும் ஸம்ஸ்காரமிரண்டுடையார்க்கன்றோ வைதிகத்வஞ்சொந்தப் பொருளாம் இவ்வாறுள்ள ஞாயம் பலவுள்ளவற்றால் அபரசுருதி அத்யயனத்திற்கு உபனயனாதி ஸம்ஸ்காரமும் பரசுருதி அத்யயனத்திற்கு சிவதீக்ஷாதிஸத்பாவஸம்ஸ்காரமும் பெருதல் வேண்டுமென விதிமுகத்தால் விளங்கலால் இவ்வுபய சுருதிபோதமுணர்ந்துபிரும்ம ஞானம்பெற்றோர் பிராம்மணராதல்பற்றி பிரும்மஞானவிஹீன ஸம்ஸ்கிருதர்கள் பிராம்மணருதலெங்கனம் இக்கருத்தை யுட்கொண்டேயன்றோ ஸ்ரீ நீலகண்ட சிவாச்சாரிய சுவாமிகளும் அபரவித்யா பிரும்ம ஸூத்திர பாஷ்யத்திலும்– [illegible] – என்னும் வாக்கியத்தால் வேதசிவாகமங்களுக்கு பேதங்காண்கிலோம் வேதமே சிவாகமமென வியவஹரிப்பது யுக்தமெனவும் இவ்விரண்டிற்கும் கர்த்தா ஒருவராகிய சிவபெருமானே யெனவும் இவற்றால் வேதமும் சிவாகமமென்னப்பெயர் பெருமெனவும் இச்சிவாகமம் இரண்டு பிரிவுடை

த்தானதெனவும்ஒன்று திரியீவர்ணிகவிஷயமும்மற்றொன்று ஸர்வவிஷயமுமாய் முடிபுருமெனவும்வேதந்திரயீவர்ணிகவிஷயமும் சிவாகமம் ஸர்வவிஷயமுமாய் இவ்விரண்டிற்கும் சிவபெருமானாகிய ஒருவரே கர்த்தாவெனவும் ஈசானஸர்வவித்யானாம் என்பது சிவாகமோத்பத்திக்கும் அஸ்யமஹதோபூதஸ்யநிசுவஸிதமெதத்ருக்வேதோஎன்றதுவேதோத்பத்திக்கும் பிரமாணமாகக்கூறி அனேக மார்க்கங்களோடுகூடிய அஷ்டாதசவித்தைகள் அதாவது ௧அ வித்தைகளுக்கும் ஆதிகர்த்தாவாயுள்ளவர் சூலபாணியாகிய பரமேசுவரரேஎன்பது சுருதிநியாயமெனவும் இவற்றால் வேதத்திற்கு சிவபெருமான் கர்த்தாவாகிறாரெனவும்சிவாகமங்களுக்கும் பரமேசுவரரே கர்த்தாவாகிராரெனவும்இவ்விரண்டிற்கும்கர்த்தா ஒருவராயிருத்தலால் இவ்விரண்டினுைம் ஒரேஅர்த்தத்தை நிர்ணயித்தறிதல்வேண்டுமெனவும் இவற்றால்இவ்விரண்டும்பிரமாணபூதமாமெனவும் சிவாகங்களில் பஞ்சபிரும்மபிரணவ பஞ்சாக்ஷர பிராஸாதாதி மந்திரங்களுக்கும் பதி பசு பாசம் முதலிய வஸ்துவியவஹாரங்களுக்கும்பஸ்மோத்தூளன திருபுண்டிரதாரணலிங்கார்ச்சனம் உருத்திராக்கதாரணாதிபர தர்மங்களுக்கும் இதற்கன்யமானமற்ற எல்லா தர்மங்களுக்கும் இந்த வேதாகமமிரண்டும் ஸமமாகவே காணப்படுவதால் அபரதர்மம் பரதர்மம் இரண்டிற்கும் பிரமாணபூதங்களாகிய வேதாகமங்கள் ஒரு கர்த்தாவாகிய பரமேசுவரருக்கே பரத்வஞ்சாதித்து சிவாகமத்திற்கே கார்த்தப்ரமாய் நிற்றலின் விரோதமாகாதெனவுங் கூறியிருத்தலால் சிவாகமம் பரவித்தையென்பதிவற்றாலுஞ் சுட்டப்படும் ஆகமம் வந்ததென பொருளாதல்பற்றி பசுபதிபரமேசுவரர் திருமுகமைந்தினாலும் வெளிவந்த வேதசிவாகமங்களை சிவாகமமெனவே ஒன்றுசேர்த்து கூறப்படும் ஆகமம் என்பது வேதத்திற்கே உறிய உயர்ந்த நாமமாம் இவைஊருத்வாதோ முகங்களின் வழியாய் வெளிவந்துள்ளவை ஊருத்வம் ஈசானமுகமாதலால் அதினின்று தோற்றிய சிவாகமங்களாகிய பரசுருதிக்கு ஸர்வவித்யா பிரதிபாத்யம் வேதத்தால் குறித்தோதப் பட்டிருக்கின்றது அதோமுகம் தத்புருஷாதி நான்குமுகங்களே யாதலால் அதில் தோற்றிய அபரசுருதியாகியருக்காதி நான்கிற்கும் வேதத்வம் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது இவற்றால் ஊருத்வமுகத்தால் வெளிவந்ததை பரமெ

ணவும் அதோமுகத்தால் வெளிவந்ததை அபரமெனவுங் கொள்
ளப்படும் வேதம் பிராமணக்ஷத்திரிய வைச்யபர்ந்தமே பயன்பட
த்தக்கவை சிவாகமம் பிராமணாதி சூத்திரபர்யந்தம் பக்குவான்
மாக்கள் யாவருக்கும் பயன்படத்தக்கவை வேதம் திரியீவரணப
ரமாய் கேவலங்கர்மபிரதி பாத்யமாயும் ஞானசாதகமாயும் இரு
த்தலின் பிராம்மணாதி வைசியபர்யந்தமே சொந்தம் பாராட்டத்
தக்கவர்கள் சிவாகமம் ஞானகநிஷ்டசுத்தாத்வைத சிவஸாக்ஷாத்
காரம் பெற்றிருத்தலின் பரிபாகமுடையார் யாவருஞ் சொந்தம்
பாராட்டத்தக்கவர்கள் திரியிவர்ணிகள் கர்மானுகுண்யமான உப
ணயனாதி அபரஸம்ஸ்காரம் வேதாதிகளால் பெற்றிருப்பினும் ஞா
னைகநிஷ்டஸமயஸம்ஸ்காரமாகிய பரஸம்ஸ்காரஞ் செய்யப்பெரா
திருப்பராயின் இவர்கள் பிராம்மணத்வம் ஸித்திக்கப்பெற்றவர்க
ளாகார் பிராம்மணர்பரமேசுவரரும் விஷ்ணுக்ஷத்திரியரும் பிரும்
மாவைச்யரும் இந்திரன் சூத்திரனுமாய் வேதங்களிலுத கறிக்கப்
பட்டிருத்தலின் சிவத்வஞ்சித்திக்கப் பெராதோற்கு பிராம்மணத்
வஸித்தியுண்டாதல் யாங்ஙனம் திரியீவர்ணிகபரத்தில் அபரகாயி
த்திரி யொன்று மாத்திரமே உபதேசிக்கப்படும். ஸர்வவிஷயபரஸ
ம்ஸ்காரத்தில் பரகாயித்திரி உபதேசிக்கப்படும். அபரகாயித்திரி
சக்தியும் பரகாயித்திரி சிவமுமாய் முடிதலால் சிவம்மங்களமாதல்
பற்றி சிவகாயித்திரியையெழுந்த சக்திகாயித்திரி அமங்களத்வமெ
ய்தப்பெரும் இவற்றால் சிவகாயித்திரி இழந்து சக்தி காயித்திரி
யைமாத்திரமே ஜபிக்கும் பிராமணர்களும் அமங்கள பிராம்மண
ராவார்.

யயாஶ்ரமஃ ஸிம்ஹஸ்வாவநஹீதளமஜஸ்ஷா । க்ஷீக்ஷீ தாவி-
ஷம்விம்மலஸ்வா ஸீதளரொஹஸ்வா: ।

என்னும் பரசுருதி வாக்கியத்தால் வனத்திலுள்ள யானை
ஸிம்மத்தைக் கண்டு அஞ்சுவதுபோல் அதீக்ஷிதரால் பூஜிக்கும்
சிவலிங்கத்தில் சிவபெருமான் ஆவிர்ப்பவிக்க அஞ்சுவரெனக் கா
ணப்படுவதால் பரஸம்ஸ்காரசிவதீக்ஷையல்லாதோர்சிவபூஜையும்
அஸத்பாவமுடைய தென்பதிதன்கருத்து சிவபெருமான்ஸத்தா
யிருத்தலால் ஸத்தை பூஜிப்பதில் அஸத்பாவம் வருதற்குக் கார
ணம் யாதெனில் சிவபெருமான் பதியும் ஆன்மாக்கள் பசுவுமாயி
ருத்தலால் இப்பசு சிவகைங்கர்யமாகிய ஸத்கார்யத்தைச் செய்ய

த்தனிக்கின்றது. ஒரு காரியத்தைச்செய்ய நிமித்தோபாதான்ஸமவாயம் முதலிய மூன்று காரணம் வேண்டப்படுவதால் இச்சிவகைங்கர்யமாகிய காரியத்திற்கு ஆத்மா நிமித்தனும் உபாதானஞ் சரீரமும் ஸஹகாரீகாரணங் கைகளுமாய்க் கொள்ளப்படும். இம்மூன்றுஞ்சிவாகாரமான பாவம் வருதல்வேண்டும். சிவாகாரபாவமல்லாவிடில் சிவஸஜாதீய பாவனீங்கி பசுகரணமாய் நிற்றலின் பதிபாவத்திற்கு விஜாதீயமாய் நின்றுவிடும். விஜாதீயத்வம் பதிஸ்வரூப பரசிவத்தையும் பசுரூபமாக்க முயற்சித்து நிற்கும் இத்யாதி காரணத்தால் ஸத்பாவமுடைய சிவபூஜை அஸத்பாவப்பட்டு நிற்றலின் சிவதீக்ஷையல்லாதோர் சிவபூஜை குற்றமேயாம்.

வேதாதிமந்திரங்களால் ஸத்பாவம்வருமெனின் வேதாதிமந்திரங்கள் சிவபூஜையை விதிமுகத்தால் விளக்க வெளிவந்ததின்று. இவற்றால் அந்தர் நிஷ்டதர்மபரஸம்ஸ்காரம் விளங்கப்பெறா இவை விதித்துள்ள சிவாகமத்தாலன்றி ஸத்பாவம்வருதல் கூடுமோ சிவாகமத்தால் ஸத்பாவம் விளங்கப்பெறுத லெங்கனமெனின் முதலில் சிவகைங்கிரியமாகிய காரியத்திற்கு நிமித்தபூதமான ஆன்மா பசுவாயிருத்தலால் இப்பசுவை அந்தர் நிஷ்டாக்னியால் தகித்து திரும்ப மிருதமான ஆத்மாவை அமர்தத்தால் உண்டாக்கி பஞ்சப்ரம்ம மயமாய் தியானித்து ஞானமயமான சரீரங்கர்ப்பித்து ஹிருதயாதி ஷடங்கம் பாவிக்க சிவாகாரமாம். இவ்வாறே உபாதானகாரணமாகிய சரீரத்தையும் அங்கன்யாசத்தால் சிவாகாரமாக்கி ஸஹகாரிகாரணமாகிய கைகளையும் சிவாகாரமாக்குவது கரந்யாஸாங்கன் யாசமாகும். இவ்வாறுள்ள ஸம்ஸ்காரத்ரயங்களும் பரதர்மத்தால் விளங்கப்படுவதன்றி அபர தர்மத்தால் இவை மருந்திற்குங்கிட்டுவதரிதாய் முடியும். அபர தர்மத்திலோ அஸத்பாவமே வெளிவந்திருக்கும் அஃதெங்கன மெனின் பரதர்மத்தில் சிவாஸ்த்ராய ஹூம்பட்யென கையைமுதலில்மார்ஜனம்செய்து இது பசுகரணமாகிய கரங்கள் சிவாஸ்த்ரத்திலுண்டான சிவாக்னியால் தகிக்கப்பட்டதாகும். பின் சக்தியை வெளஷட்என புருமத்யத்தில் அஞ்சலிசெய்வது இது மிருதமான கை அமர்தத்தால்திரும்ப உண்டான பாவமாகும். அதன் பின் சிவாஸனம் சிவமூர்த்தி சிவமூலத்தால் உள்ளங்கையில் சிவனை ஆவாகித்து ஐந்து விரல்களையும் யீசானதி பிர்ம்மபஞ்சகமாய்பாவித்துவித்யாதேகஸ்வ

ரூப்மான ஞான சரீரம் கற்பித்து திருநேத்ரமுண்டானதாய் பாவித்து ஹிருதயாதிஷடங்கக்கற்பித்து சிவாகாரமாக்குவது பரஸம்ஸ்காரக ரன்னியாசமாகும். அபரசம்ஸ்காரத்திலோ இச்சத பாவம் விளங்கப்பெறு. அங்குஷ்டாப்யாநம: தற்ஜனீ ப்யாநம: மத்யமாப்யாநம: அநாமிகாப்யாநம: கனிஷ்டிகாப்யாநம: கரதலகரப்ருஷ்டாப்யாநம: யென கையாகவே அஸத்துரூபமான அபரஸம்ஸ்காரத்தின் கரன்யாசமாதலின் கட்ட விரலாயனம: ஆள்காட்டி விரலாயனம: நடுவிரலாயனம: அணிவிரலாயனம: கடைவிரலாயநம: கை பின்புறம் முன்புறமாயனம: யென்னும் அஸத்பாவமாம் கருங்கன்யாஸ அபரஸம்ஸ்காரிகள் சிவசாக்ஷாத்காரபரஸம்ஸ்காரஸதாசாரமுடையோர்களை அவைதிகரென தூஷிப்பது கிறிஸ்துவர் தங்களை ஞானியென தற்புகழ்ச்சிகூறுதலை யொத்திருக்கும் இஃதன்றி [illegible] என்னும்அபரசுருதி வாக்கியத்திற்கு பசுவென்பதை பிராணி ஸாமான்யமாய் பொருள் செய்து பறக்கிற பிராணியில் பட்டம் நீக்கியும் ஊருகிற பிராணியில் படுக்கும் கட்டில் நீக்கியும் மற்ற பிராணி யாவற்றையும் கொன்றுதின்ன மனுஸ்மிருதி விதித்திருக்கின்றது. இஃது அபரசுருதியின் அந்தர்கதமென்பது பூர்வபக்ஷிகளது அபிப்பிராயமாகும். பரசுருதியிலோ பசுவென்பது ஆத்மாவாகக்கொண்டு ஆத்மா ஆணவம் மாயை கர்மமென்னும் மூன்று பாசத்தால் பந்திக்கப்பட்ட பசுவேயாதலால் இப்பசுவை பந்தித்திருக்கும்பாசத்தை ஆசாரியன் ஞானாக்னியாகிய சிவாக்கினியால் தகித்து பசுத்வத்தை நிராகரித்து சிவத்வத்யோதகம் செய்வது பசும்வதமென்னும் அபரசுருதிக்கி சிவாகமம் பொருள் படுத்தி யிருத்தலின் வேதம் ஜீவஹிம்ஸை செய்ய துணிந்திலதென்பது தெற்றெனவிளங்கும் இஃதன்றியும் அஹிம்ஸா பரமோ தர்ம: என்னும்சுருதி வாக்யத்தால் ஹிம்சையல்லாதிருப்பதே முதன்மையான தர்மமென வேதம் விதித்திருக்க இத்திருவாக்கை மீறி சகல பிராணிகளையும் உயிர் செகித்துண்ண வேதம் விதித்துளதாய் மயங்கி அபார்த்தம் கொண்டு சுருமாம்ஸம் புசிக்க நியமவிர்தம் கைக்கொண்ட இத்துருசாரமுடையார் ஹிம்சையற்ற சிவஸாக்ஷாத்கார நிஷ்டானுபூதிபெருஞ் செல்வபரம வைதீகசிகாமணிகளாகிய பரஸம்ஸ்காரம் பெற்றோரை அவைதிகரெனக் குறை கூற வெழுந்தது தம

க்குற்ற அவைதிகத்தை பிறர் மேலேற்றி தூஷிக்கமுயன்றவவஸர
மேயாகும். ஹிம்ஸையற்றிருக்குங்கொன்றுதிண்ணாத்தூய்மையும்
பசுத்வநிராகரணமுஞ் சிவத்வத்யோகமும் பிராமணத்வ ஸித்தித்
விஜத்வமும் வேதாகம பிராமாண்யமுமுடைய பரமவைதிக சிகா
மணிகளை பிராம்மணபிரஷ்டரெனவுஞ் சூத்திரற்குச்சமானமென
தூஷிக்கமுயன்றது. புலைத்தனமுற்றோர் செயலாய் ஒதுக்கப்ப
டும். நம் வேதாகமாதி சற்சாத்திரவாயிலாய் சுறாமாம்ஸம் புசி
ப்போர் இழிந்தோர் என்பதும் கோ மாம்ஸம் புசிப்போர் புலைய
ரென்பது வெளிப்படுதலால் இவ்விருதிரத்தாரும் ஸத்சூத்திரியில்
மிகவுந் தாழ்வுற்று அஸத்சூத்திரியெனவும் புலையரெனவும் பேத
ப்பட்டு நிற்பர். இஃதிங்ஙனமாயின் மனுஸ்மிருதியில் நண்டு நத்
தைகளுடைய மாம்ஸத்தால் பிதிருக்கள் ஒரு மாஸந்திருப்தி அ
டைகிரார்களெனவும். பன்றி எருமை செய்மறிஆடு மணிப்புறா
இவைகளின் மாம்ஸத்தால் பிதுருக்கள் மூன்றுமாஸம் திருப்தி
அடைகிறார்களென்றும் வெள்ளாடு முசல் ஆமை முதலிய மாம்ச
த்தால் ஆருமாஸந் திருப்தி அடைகிராரெனவும். மான் முதலிய
மாம்ஸத்தால் மூன்று வருஷம் பிதுருக்கள் திருப்தி அடைகிரா
ரெனவுங் கோமாம்ஸத்தால் பன்னிரெண்டு வருஷம் பிதுருக்கள்
திருப்தி அடைகிறார்களென்றுங் கூறியிருத்தலால் ஸ்மிருதியின
ந்தர்கதம் புலயற்கனுகூலமாயிருத்தலின் இவற்றை பிரமாணமாக
அங்கிகறித்தொழுகுவோற்கும் ஏன் புலைத்தனம் வருதல் கூடாது
பராசரஸ்மிருதியில் கலியுகத்தில் மாம்ஸம் புசித்தல் கூடாதென
கண்டித்திருத்தலால் மனுஸ்மிருதி இந்த யுகத்திற்குப் பிரமாணம
ன்றெனின் எந்தயுகத்திலும் மாம்ஸங்கூடாததாயிருக்க கலியுகத்
திற்கு மாத்திரம் விலக்கெனக்கூறிய பராசரர் வாக்குபிரபல பிர
மாணமாவதெப்படி கலியுகந்தவிர மற்றயெந்த யுகங்களிலும் மாம்
சம் புசிக்கலாமென்றன்றோ பராசரர் வாக்கைக்கொள்ளத்தக்கதா
யிருக்கின்றது. பராசரர் வாக்குமாம்ச பக்ஷணத்தை நிஷேதிக்
காதிருந்தமையின் எந்த யுகங்களிலுஞ் சுராமாம்ஸம் புசித்தல் கூ
டாதெனக் கண்டித்தொதுக்கும் பரசுருதியனுஷ்டேய வைதிகசி
காமணிகளின் முன் சுராமாம்ஸம் புசிக்க விதித்துள்ள விதியை
கையாண்டுவரும் அவைதிகர்வைதிகரென வெளிவருதலெங்ஙனம்
வைதிகமென்னுஞ் சொல்லிற்கே அனர்கராயிருக்க யாம் வைதிக

மெனதலே மயக்கெய்தித்திரிவார்வாதம் அவைதிகமென்பதாய் தீர்மானித்தொதுக்கப்படும். இவ்வாறுள்ள ஞாயம் பலவுளவற்றையும் விரிவஞ்சிவிடுத்தோம். மற்றுள்ளவை நோக்க விரும்புவராயின் பிரும்மஸ்ரீ நடுக்காவேரி ஸ்ரீனிவாஸ தீக்ஷதருக்கும் எமக்குமுன்னேர்ந்த விவாதத்தில் வேதாகமதாரதம்யம் வைதிகதாரதம்யம் முதலிய அனேக சந்தேகங்களை விவேகதிவாகரன் பத்திரிகை வாயிலாய்விடையளித்துநிவர்த்தித்துள்ளோமாதலால் ஆங்குற்றுநோக்கி சந்தேகநிவர்த்தி செய்து கொள்வார்களாக.

இவற்றால் வைதிகராவார் யாவருக்கும் வேதம் அபரமெனவும் சிவாகமம்பர மென்பதோடும் அபரம் பரத்தினைக்கிய பத்யத்தாலன்றி உண்மை பொருள் விளக்காதென்பது தீர்மான மாயிற்று. சிவாகமம் பரசுருதியாயிருப்பின் வாயுசம்ஹிதையில்

𑌶𑍈𑌵𑌾𑌗𑌮𑍋𑌽𑌪𑌿 𑌦𑍍𑌵𑌿𑌧𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍌𑌤𑌾𑌶𑍍𑌰𑍌𑌤𑌸𑍍𑌤𑍁 𑌸𑌂𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 । 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌾𑌰𑌮𑌯𑌃 𑌶𑍍𑌰𑍌𑌤𑌃 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰 𑌇𑌤𑌰𑍋 𑌮𑌤𑌃 । 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍋 𑌦𑌶𑌧𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌤𑌥𑌾𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌧𑌾 𑌪𑍁𑌨𑌃 । 𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌦𑌿𑌸𑌮𑌾𑌵𑍍𑌯𑌾𑌹𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑌃 ॥

என்னும் வாக்கியத்தால் சிவாகமம் இரண்டுபேதமுடையதெனவும் அவைசிரௌதம்அசிரௌதமென பெயர்பெருமெனவும்சுருதிஸாரமயமாயுள்ளது சிரௌதமும் ஸ்வதந்திரமாயும்வேத இதர அபிமதமுடையது அசிரௌதமெனவுங் கூறி இந்த ஸ்வதந்திரம் முதலில் பத்தாகவும் பின் பதினெட்டாகவும் பேதப்பட்டு காமிகாதிகளான பேர்களினாலே வபித்தமெனவுஞ் சித்தாந்தமெனவும் ஸம்ஞைகுறிக்கப்பட்டிருத்தலினால் அசிரௌத மென்றதால் வேதபாஹ்யத்வ மூண்டாகாதோவெனில் இவற்றுள் சைவாகம மிரண்டுபேதமெனக் கூறியிருத்தலால்- இவ்விரண்டும் சுருதிஎனவே பொதுவில மயப்பெரும் இவ்விரண்டு சுருதிகளும் சிரௌதம் அசிரௌதமென பேதப்பட்டிருக்குமென கூறியதால் சிரௌதம் அக்ஷராத் மகமும் அசிரௌதம் அக்ஷராதிகம்யமுமாயிருத்தலின் சிரௌதசப்தம் அபரசுருதிக்கேற்றுவது தகுதியேயொழிய பரசுருதிக்கு சிரௌதசப்தம் பிரதிபாதித்தல் குற்றமாம். இக்கருத்தை நோக்கியே யன்றோ சிரௌதாசிரௌத வியவஹாரத்தை வாயுஸம்ஹிதை சண்டெடுத்து விளக்கியது. சிவாகமங்கள்

சுருத்யதீதமான வித்யாபிரதி பாத்யமுடைய பரவித்தையே யாதலால் இவை சுருதி சம்மந்தப்பட்ட சிரௌதமாயிருப்பின் அஸ்வதந்திரப்பட்டு ஸ்வதந்திரமல்லாதொழிந்துவிடும். இக்காரணத்தை நோக்கியே யன்றோ ஸ்வதந்திர இதரோமத: என சிரௌதத்தை நோக்க விசேஷத்வ முடையதென்பதை விளக்கிக்காட்டியுள்ளது. சிவாகமங்களை ஸ்வதந்திர மென்றதினால் சிரௌதம்-பரதந்திரமுடையதென்பது கருதது . இதரோமதக என்றதினால் வேதத்தில் கூறுததும் வேதாதீத அரும்பொருள் விளக்குமுடைய பரதர்மமாய் சிவாகமங்கள் நிற்றலின் இவற்றை இதரமதமென நீக்கிக்கூறவிடம்பெற்றது. மேலும்காமிகாதிகளானபெயரினால் சித்தம் சித்தாந்த மென்னும் ஸம்ஞையோடு கூடியதென முடிபொருளாக்கி யிருத்தலால் பூர்பக்ஷ ஸித்தாந்த ரூபமாய் வேத சிவாகமங்களை சிவ பெருமான் கூறியிருத்தலால் வாயுஸம்ஹிதையும் சிவாகமம் ஸித்தாந்தமென குறித்துணர்த்தியது-இவற்றால் சிவாகமம் அக்ஷராதிகம்யமும் ஸ்வதந்தரமும் வேதாதீதாபிமதமுடையதும் முடிபொருளான ஸித்தாந்த ரூபமாயுள்ளதென வெளியாயினமையால் வேதத்தை நோக்க சிவாகமம் கோடி மடங்குயர்ந்ததென்பதிற் றடையில்லை. வேதத்தை நோக்க வேறொன்றுளதேன கூறுவது வைதிமாமோவெனின் வேதமே தனக்கன்யமாய் பரவித்தையொன்றுளதெனக் கூறியிருக்க இவற்றை மறுப்பவற்கு வைதீக சித்தி யுண்டாகாதே யொழிய அவற்றை யொப்பி பிரமாண பிறஸித்தமாய் வியவகரிக்கும் சைவாகம நிஷ்டசிவஞானிகளுக்கு வைதிகத்வஹானி வருதல் யாங்கனம் சைவாகமம் இரண்டு பிரகாரம் என்பது வேதமெரண்டு பிரிவென்பதி தன் பொருள் சிரௌதாகமமென்பது ருக்காதி வேதத்திற்கு வேருய் ஒன்றிருப்பதென்பது பொருளன்று ருக்காதி நான்கு வேதங்களுமே சிரௌதாகமம் சுருதியில் எட்டப்படாததாய் பிரிந்துள்ளது சிவாகமங்கள் . யிதிலொன்று திரியிவர்ணிபரம் மற்றொன்று ஸர்வவிஷயபரமென ஸ்ரீ நீலகண்ட சிவாச்சாரியார் வியவகரித்திருக்கும் வியவகாரத்தை வாயுஸம்ஹிதை சிவாகமநிஷ்டதர்மம் ஸித்தாந்தமென குறித்துக் காட்டியது ஐய்க்க பத்யமான பிறமாணமாயிற்று இவ்வற்றை நோக்கியேயன்றோ சிவஞான சித்தியார் எட்டாஞ்சூத்திரம் ௰௫-ம் பாட்

லில் வேதநூல் சைவநூலென்றிரண்டே நூல்கள் என வறுபுறு த்துக் கூறப்பட்டிருக்கின்றது இவ்வாறுள்ள உண்மை பல்வற் றையும் ஊகியாது சிவஞான முனிவர் வேதாந்தத்தை விட்டு முற்றும் விலக்கி சைவமதம் புதுப்பித்தாரென வியஸனிப்பது வேதத்துட்கருத்துணராததாலன்றே- வேதாந்தம் வேதமுடிபே யாதலால் அவை வித்தாந்தததிற்கு மேம்பாடாதல் யாங்கன ம் சித்தாந்தமென்னுஞ் சொல் சிவஞான முனிவராய் சிவாகம ங்களுக்கு புதுப்பித்ததோ அங்கனமாயின் வேதாந்தமென்னுஞ் சொல் சங்கராச்சாரியார் புதுப்பித்ததாய் யாம் கூறுகின்றேம். இவ்விருவர்களால் புதுப்பிக்க வல்லமை யுளதேல் வேதாகமங் களெற்றுக்கு இவற்றுல் சிவஞான முனிவர் புதுப்பித்தாரென் பதும் சங்கராச்சாரியார் புதுப்பித்தாரென்பதும் ஞாயமுகத்தில் நில்லாதனவாம் ஸ்ரீகண்டர், சங்கரர், ராமாநுஜர், மத்துவர், முதலிய நால்வர்களும் வியாஸ ஸூத்திரமாகிய அபரவித்தை க்கு பாஷ்யஞ் செய்ததேயன்றி அவை பரவித்யா ரூபபாஷ்யமு டையதன்று இவற்றுள் ஸ்ரீகண்டபாஷ்யம் அபாவித்தைக்குச் செய்யப்பட்டதா யிருப்பினும் பரவித்யாத்யோதக தர்மங்கள் இடை யிடையே விளங்கா நிற்கின்றது-சங்கரபாஷ்யமோ எல்லா ம் பொய் நான் மாத்திரஞ் சத்தியமெனக்கூறி கடைசியில் அ துவும் பொய்யாய் முடிந்து கிடக்கின்றது இராமாநுஜ மதமோ ஜீவொத்பத்தியிலும் பரத்வனி ரூபணத்திலும் முக்தியிலும் பர வித்தைக்கு விருத்தமாயிருப்பினும் தைவமொன்றுளதென்னும் அபிப்பிராயத்தால் சங்கரமதம்போல் நாஸ்திகதை ஏற்படாது ஆஸ்திகத்வம் மெய்தபெறும் மத்வமதமும் ஆஸ்திகமதத்திலொ ன்றும் இன்னுலு பாஷ்யத்திற்கும் அன்யமாய் ஸோமநாத ஆராத்யபாஷ்யம் என ஒன்றிருக்கின்றது. அதில் கூறியதாவது வியாஸர் பிரும்ம நிச்சயத்திற்கு ஸூத்திரமெடுக்கும் பரிபாகி யல்லவெனவும் வியாஸ ஸூத்திரத்தால் பிரும்ம நிச்சயம் ஏற்ப ட காரணமில்லை எனவும் ஏற்படுமாயின் நால்வர்களும் ஒன்றி லொன்று முற்றணியவேறுவேறு சித்தாந்தங்களை நாட்ட முயன்ற தற்கு பிரும்ம நிச்சாயக சூத்திரம் இடந்தராதெனவும் வியா ஸர் கங்கை கரையில் நாராயணனுக்கு மேல் தைவமில்லை என மயங்கி கூறிய சந்தர்பத்தில் நந்திகேசருக்காரத்தால் கைஸ்த ம்பிக்க நாருயணர் பிறத்யக்ஷமாய் வந்து,

தஸ்மாச்சைவ வ்யாஸ: ஶ்ரவணாச்சைவ யோக்த்வா ஶிவஸ்துதிம் ஶிவஜ்ஞாநக்ருதார்த்த க்ருதார்த்தோ ஹ்யபூத்: । தஸ்மாச்சிவாதி தேவஸ்ய க்ருதார்த்தோ விநிஶ்சிதே ।

என்னும் வாக்கியத்தால் மோஹமூடனாகிய வியாஸர்கேள் நான் உலகத்திற்கெல்லாங் கர்த்தா எனக்குக் கர்த்தா மஹேசுவரன் அவருக்கு மேல் கர்த்தா ஒருவருமில்லை எனக் கூறி வியாஸர் மயக்க மகற்றி சிவஸ்துதி செய்து கிருதார்த்தரானரென கேழ்க்கப்படுதலால் பிரும்ம ஸூத்திரத்தில் மாத்திரம் அவற்கு தெளிவு வந்துவிட்டதென்பதை ஒருவரும் ஒப்பார் தெளிவுளராயின் வியாஸரெடுத்து கூறிய ஸூத்திரம்- நாஅடு- திற்குள் பிரும்ம நிச்சயங்கூறிய ஸூத்திரமெவை எனவும் பிரும்ம நிச்சயத்திற்கேற்ப ஈண்டெடுத்துக் கூறிய சுருதிகளி லனேகங் கூறியிருக்க இதுவா பிரும்மம் அதுவா பிரும்மமென்னும் மயக்கந் தலைமேற் கொண்டுழலும் வியாஸ ஸூத்திரம் பிரும்மஞானத்தை நிச்சயித் துணர்த்தும் மெய்நூலல்ல வெனவும் இச்சூத்திரத்தி லில்லாப்பொருள்களை வருவித்து ஸ்ரீகண்டமுதலினோர் பாஷ்யஞ் செய்துள்ளா ரெனவும் சங்கரபாஷ்யத்தால் இச்சூத்திரத்தை நோக்கப்புகுவோமாயின் இவை பிரச்சன்ன பௌத்தமாகிய நாஸ்திகத்தை உண்டாக்கிற தெனவும் ராமானுஜ பாஷ்யத்தால் லோகோத்பத்தி பரத்வநிர்ணயம் முக்தி முதலியவற்றில் முரண்படுமெனவும் ஸ்ரீகண்டர் சுத்தாத்வைத சிவஸாக்ஷாத் காரபிரும்ம ஞானியாதலால் நாஸ்திகதையாய் பிரவர்த்தித்துள்ள வியாஸ ஸூத்திரத்தைதடுத்து ஆஸ்திகத்வமுபகரித் தனுக்கிறகித்தாரெனவும் இச்சிரீகண்ட சிவாச்சர்ய சுவாமிகள் பிரும்ம ஸூத்திரத்தில் வர்ஷித்துள்ள ஸித்தாந்த சுருதிகள் வியாஸ ஸூத்திரத்தை விட்டுத் தனிததொரு மெய்நூலாய் விரியுமாயின் வியஸஸூத்திரத்தின் கதி அதோகதியா மெனவும் பிரும்மஸ்வரூபி பரமேசுவரரென வேதங்களில் பிரதிபாதிக்கின்றமையின் பிரும்மமென்னுஞ் சொல் ஸ்வரூபலக்ஷண மிழந்த தடஸ்த லக்ஷணமாய் விளங்குமெனவும் ஸ்வரூபலக்ஷணம் நித்யமங்கள மூர்த்தியாகிய பரமேசுவர பிரதிபாத்யமாய் யிருத்தலால் ஆதிதொடுத்தந்திய மிருதியாய் சிவமென்னும் மங்களச் சொல்லில்லாததால் இச்சூத்திரம் அமங்களமுடையதா மெனவும் இவற்றுள்

வியாசரும் பிரும்ம ஸ்வரூபத்தை அறியவேண்டுமென ஆரம்பகூரத்தனமாய், அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா । என்னுஞ் சூத்திரத்தை மாத்திரம் முதலிலெடுத்துக் காட்டி பிரும்மம் இன்னதென கூறாது விடுத்திருப்பதாலும் அபர சுருதியாகிய ரிகாதிவேத வேதாந்தங்களிலும் பிரும்ம ஸ்வரூபம் வெளிப்படாததுபற்றி சூத்திரஞ்செய்தவியாசரும் இங்கனம் மயக்குற்றார். பிரும்மஸ்வரூபம் பரவித்தையாகிய சிவாகமத்தால் வெளிப்பட்டுநிற்க அபரவித்தையால் ஆராய்ந்து அறியவிரும்பியது நரிவாலைக்கொண்டு கடலை ஆழம் பார்க்க விரும்பியவரை யொத்திருக்கின்றதெனவும் கூறியிருத்தலால் அபரவித்யா சூத்திரபாஷ்யமாகியவேதாந்திகளின் அபிமதம் சித்தாந்தரூபமான பரவித்தையாகிய சிவாகமங்களின்முன் தலைநீட்டி வாழ்வதெங்கனம் இவற்றால் வேதம் அபரவித்தையெனவும் சிவாகமம் பரவித்தையெனவும் ஞாயமுகத்தால் காட்டித் தீர்மானித்தோமாதலால் வேதத்தின்கருத்து யாவற்றையும் பரவித்தையாகிய சிவாகமம் பூர்வபக்ஷஞ்செய்து சித்தாந்திக்கு மாற்றலுடைமையாதல்பற்றி சிவஞானமுனிவர் முதலிய உண்மை சிவபக்தசிகாமணிகள் வேதம்வேறும் சிவாகமம் வேறுமாய்ப் பிரித்து சிவாகமத்தை சித்தாந்தமெனவும் நிலைநாட்டுதற் கேதுவாயிற்று இச்சித்தாந்தம் வேதாந்தக்கருத்தை பூர்வபக்ஷமாக்குவதால் வேதாந்தத்திற்கு வேறு பட்ட கருத்தா யிருந்தன்றோ, பூர்வபக்ஷமாக்குதல் வேண்டும், சித்தாந்தம் பூர்வபக்ஷத்திற்கு முற்றும் வித்தியாசப்பட்டிருக்குமென்பதிலென்ன தடை வேதாந்தத்தில் பரிணாமவாதம், பிரதி பிம்பவாதம், சுத்திரஜிதவிவர்த்தவாதம், வியாவஹாரிகபாரமார்த்திகவாதம், அக்ஞானகலுஷிதவாதம், கடாகாசபடாகாசவாதம் முதலிய அஸத்வாதமே மேனோக்கி நிற்றலின் இவ்வாதத்தை நிராகரித்து உண்மை உபகரிப்பது பரவித்தையாகிய சிவாகமேயன்றோ பிரும்ம பரிணாமவாதத்தை யாமுன்னரெடுத்துக் கண்டித்துள்ளோமாதலால் ஈண்டெடுத்து கண்டித்தல் அனாவசியகமாகும். ஆத்மா பிரும்மத்தின் பிரதிபிம்பமென்பது வேதாந்திகளின் அபிமதமாதலின், பிம்பம் சத்தும் பிரதிபிம்பம் அசத்துமாய் முடியப்பெறும் பிம்பம் பிரும்மமும் பிரதிபிம்பம் ஆத்மாவுமாய்க் கூறுதல் பற்றி ஆத்மா அசத்தாயிருப்பதால் அசத்துக்கு சத்விசாரம் விலக்காதலின் அசத்து

பிரும்ம நிச்சயம் கூறித்தென்பதும் விசார சூன்யமேயாகும் இவற்றால் ஆத்மாவை பிரதிபிம்பமான அசத்தென்னும் வேதாந்தச்சொல்லை பரவித்தையாகிய சிவாகமங்கள் கண்டித்து அசத்து அறிவற்றதாதலின் பிரும்மத்தை அறியுமென்பது கூடாதென்பதாய் ஆத்மாசத்தென அபரவித்தைக்கு உண்மை உபகரித்து சித்தாந்தித்துநிற்கும் சுக்திரஜித பிருந்திவர்தம்போல் பொய்யாயுள்ள ஜகத்தென்பது வேதாந்தவாதம் சுத்தியும் இன்மைப் பொருளென்று ரஜதமும் இன்மை பொருளென்று ஒன்றிலொன்றை ஆரோபித்து வருவித்ததுமாத்திரம் பிருந்தியாம். இவற்றால் சுத்தியென்னும் பதார்த்த மொன்றும் ரஜதமென்னும் பதார்த்தமொன்றும் ஒன்றையொன்றாய் கற்பித்து பிரமித்த பார்த்தமொன்றுமாய் இவர் திருஷ்டாந்தத்தில் முப்பொருள் விளங்குதலால் இம்மூன்றையும் ஒன்றென சாதிக்கவருபவரை மூன்றும் மூன்றுபொருளென உண்மையுபகரித்து சிவாகமஞ்சித்தாந்திக்க துணிவுற்று நிற்கும். இல்லாத வெள்ளியை சிப்பியில் உண்டென நினைத்து பின்னில்லாதுபோவதுபோல் இல்லாத உலகத்தை உண்டென கூறுவதும் பிருந்தியாமெனின் உலகம் இல்பொருளாயின் பதார்த்தமொன்றேயென்பது வேதாந்திகளின் அபிமதம் ஒன்றாயுள்ள பதார்த்தத்திற்கு இல்லாத உலகத்தை உண்டென பிருந்தி வருதல் கூடுமோ. பிருந்தி அறிவில்லாதோரியற்கையாதலின் முற்றறிவுடைய பிரும்மத்திற்கிவை யேற்றல் கூடுமோ. வியாவஹாரிக பாரமார்த்திக பேதத்தால் இவை பிரும்மத்திற்கு வருமெனின் பாரமார்த்திகத்தில் இருந்த பிரும்மமேயன்றோ வியாவஹாரத்திற்கு வந்திருக்கின்றது பிரும்மத்திற்கு பாரமார்த்திகம் கெட்டு வியாவஹாரிகத்திற்கு வரக்காரணமென்னை ஒரு பதார்த்தம் பாரமார்த்திகமெனவும் வியாவஹாரிகமெனவும் இருபொருளாய் நிற்குமாயின் அகண்டம் கெட்டு கண்டப்பொருளாயன்றோ முடிந்து விடும் பாரமார்த்திக பிரும்மம் வியாவஹாரிகத்திற்கு வந்தது தானே வந்ததா வேறொருவர் வரும்படி செய்ததா. தானே வந்ததெனின் இவ்வசத்பிரவர்த்திக்கு அவை முந்தி நின்றதால் இவற்றை சத்தெனச்சுட்டுதலடாது மாயையால் வேறுபட்டதெனின் மாயை வேதாந்தத்தில் இன்மைப்பொருளாதலால் அவற்றால் வந்ததென்பதுங் குற்றமாம் மாயை பிரும்மத்தை வியாவஹாரிகபாரமார்த்திக திசைக்கு கொணர்ந்திரு

க்குமாயின் கர்த்திருத்வம் மாயைக்கு ஏற்பட்டு மாயை சுதந்தரமும் மாயை வசப்பட்டுள்ள பிரும்மம் அஸ்வதந்திரமுமாய் முடிதலால் இங்குரும் வேதாந்த ஆசங்கைக்கு பிரும்மம் பாரமார்த்திகத்திலேயேயுள்ளது ஜீவன் மாயா வசப்பட்டு வ்யாவஹாரிகத்தில் உழண்டுநிற்பது வியாவகாரம் நீங்கி பிரும்மத்தோடு ஐக்கியம் பெறுவது முக்தியென சிவாகமம் சித்தாந்திருப்பதால் இக்கருத்து வேதாந்தத்தால் விளங்கப்பட்டதின்றும். அக்ஞானக்கலப்பால் சூரியனை மேகம் மூடுவதுபோல் பிரும்மத்தை மறைத்திருப்பதால் பிரும்மக்ஞானம் தோன்றாது அக்ஞானத்தில் ஆழ்ந்துளோமெனின் சூரியன்ஒன்று மேகமொன்று அக்ஞானத்தில் ஆழ்ந்துளபதார்த்தமொன்று இங்கனமும் முப்பொருள் விளக்க முண்டாகின்றது. அக்ஞானத்தில் ஆழ்ந்துள பதார்த்தம் பிரும்மந்தானெனின் பிரும்மம் மெய் ஞானமுடையதாதலின் அக்ஞானத்தில் மூழ்கக்காரணமில்லை மாயை பிரும்மத்தைமறைக்குமாயின் பிரும்மத்தை விட மேம்பாடுடைய பதார்த்தமாகின்றது மறைத்தலுள் அடங்கியுள்ளபிரும்மம் அம்மறைவைத்தானே நீக்கி வெளிவருதல் யாங்கனம் தான் நீக்குமாற்றலுடையதாயின் தன்னை மறைக்க சம்மதித்தீரா? இம்மறைப்பை வேறொருவன் நீக்கவேண்டியிருத்தலால் அவை பிரும்மத்திற்கு அன்யமான கர்த்திருத்வமுடையதாயிருத்தல் வேண்டும். இவற்றால் மாயையால் மறைந்துள்ளது ஜீவனெனவும் அம்மறைவை நீக்கி முக்தியளிப்பது பிரும்மமெனவும் வேதாந்தத்திற்கு சித்தாந்த ரூபமான சிவாகமங்கள் உண்மைப் பொருளை உபகரித்து நிற்கும். ஒன்றாயுள்ள ஆகாசம் கடத்தில் வியாபித்திருப்பது போல் ஒன்றாயுள்ள பிரும்மமே விருத்தி பேதத்தால் வெவ்வேறாய் தோற்றுமெனின் ஆகாசம் நிர்விகாரபதார்த்தமும் அப்பிரத்தியக்ஷமாய் இருத்தலின் விகாரமேற்பட காரணமில்லை. கடம் கடான்னியமாய் ஆகாசவ்யாபகம் இவ்விரு பொருளும் ஒரு பொருளன்று கடம் வேறு ஆகாசம் வேறு ஆகாசமே கடரூபமாய் பரிணமித்து இருக்குமாயின் பிரும்மம் பிரபஞ்சரூபமாய் பரிணமித்திருத்தலுங் கூடும். இவற்றால் கடாகாசவ்யவஹாரத்தால் ஒரே பதார்த்தமென சாதிக்கவந்ததும் தவறுதலேயாகும். இவ்வாறுள்ளவேதாந்தாபாசம் பலவுளவற்றையுங் கண்டித்து பரமான சித்தாந்தத்தை நிலைநாட்டும் சிவாகமங்கள் வேதாந்தத்திற்குமுற்றும் விரோ

திக்கிறதெனத் துக்கிப்பதுபரிபவமில்லாதோரியல்பேயாகும். வேதாந்தஞ்சிவாகமத்தின் ஐக்க பத்தியமன்றி உண்மைப் பொருள் விளக்கா ஆன்மலாபத்திற்கு வேதன்னுபகியைப் போலும் சிவாகமம் நாயகனைப்போலுன்னிலே நின்றனுக்கிரகிக்கு மாற்றலுடையதுபற்றி நாயகபாவமுடைய சிவாகமங்களுக்கு ஸ்வதந்திரமும் நாயகிபாவமுடைய வேதங்களுக்கு அஸ்வதந்திரமும் ஏற்படகாரணமாயிற்று. உத்தமமான நாயகி தன்னயகனை விட்டுப் பிரிந்திராள் பிரிந்திருக்கவொருவன் முயற்சிப்பானயின் தன் பாதிவிருத்ய தர்மத்தாலுண்டான சாபாக்னியால் தகித்து முயர்ச்சித்தவனை சாம்பல்கூட அகப்படாது செய்வதுபோல் வேதம் சிவாகமமாகிய நாயகனைப்பிரிந்து நின்றவிடத்தில் உலகம் ஆன்மா இவ்விரண்டையுஞ் சுட்டெரித்து தன்னயகனை விட்டு தன்னை நோக்க விரும்பியுள்ளவனையும் இருப்பிடந்தெரியாது அவனிருப்பே பொய்யாக்கி தாம் பாதி விருத்யம் பங்கமடையாவண்ணங்காத்துக்கொள்ளுமாதலின் சிவாகமத்தை நீத்துவேதத்துட் பொருளாராயப்புகுவோற்கு வேதம் அணுத்துணையும் பயனளிக்கத்தக்கதன்று. இங்ஙனமுள்ள ஞாயம் பலவற்றையு மூகித்தறியாது வேதத்துட் பொருளீட்டமுயல்வனுயின் வெளக்கமார்செருப்புக்சட்டையும் பிரும்மமயமென வற்புருத்தி ஸத்தஸத்தென்னும் பேதம் புலப்படுத்தாது யாவும் பொய்யென முடிபொருளாக்கி யாம்அபரம்எமக்கு மேல்பரமொன்றுளது அவற்றைநோக்கி உய்வீர்களென வேதம் மௌனமுற்று நிற்றலின் சிவாகமத்தை விட்டு வேதத்தைத் தனித்து பிரித்து வியவஹரிக்கும் வாதத்தில் ஸர்வலோகனயகருகிய நித்யமங்கள மூர்த்தியாம் சிவபெருமானை இழந்திருப்பதால் இவ்வாதம் அமங்களத்வமுடைய முண்டச்சிவாதமாய் முடியப்பெறும். வேதம்அபரமும் சிவாகமம்பரமுமாய் கைக்கொள்ளும் சிவஞானிபரத்துமங்களத்வ மெய்தப் பெரும் இக்காரணம் பற்றியே யன்றோ பிராம்மணரெனவும் சிவப்பிராம்மணரெனவும் வேறு பிரித்து பரவித்தை தெளித்துரைக்கப் படுகின்றது பிராம்மணரென்பது சிவப்பிராம்மணர், வைஷ்ணவப்பிராம்மணர், மத்வப்பிராம்மணர், ஸ்மார்த்தபிராம்மணர், பௌத்தபிராம்மணர், ஜயினப்பிராம்மணர் என பல்படித்தாய் நிற்றலால் யாவற்கும் பிராம்மணரென்பது பொதுப்பெயர்சிறப்புவகையால்

ஞக்குமளவில் அவரவர் மதானுஸம் பத்தியை முன்னிட்டு வருமாதலின்பிராம்மணபரத்துமதமினதென்பது சுட்டுதலனறி எனயசிவபிராம்மணபரத்தில்தம்தம்ஸமயமுன்னுகக்கொண்டுவரு மியற்கையுடையதுபற்றி சிவபிராமமண ரென்பது யாவற்றிலுஞ் சிறந்த சிறப்பு பேராம். சிவம்மங்கள ஞதல்பற்றி இவர்களுக்கு மங்களப்பிராம்மணரென்பதே பொருத்தமுடையதாம். பிராம் மணரை உயர்வென்க்கொண்டு பிரர்ம்மணபோஜனம் முதலியவை விதித்திருக்க சிவப்பிராம்மணரை விசேஷமாகக் கொள்ளுதல் யாங்கனமெனின்-பிராம்மணபோஜனம் ஸாமான்யமுஞ்சிவப்பிரா ம்மண போஜனம் விசேஷமுமாய் மேம்பட்டு நிற்கும் சிவப்பிரா ம்மண போஜனமென்பது மஹேசுவர பூஜை என மேம்பட்டிருத் தலின் இவை பிராம்மண போஜனம் போல் ஸாமான்யமாகாது.

ஸ்தாவரம் ஜங்கமஞ்சேதி லிங்கம் த்விவிதமிஷ்யதே। ஸ்தாவரம் ஸ்தாபிதம் லிங்கம் ஜங்கமந்து சிவத்விஜம்। ஜங்கமஸ்ய க்ருதா பூஜா ஸா பூஜா சிவபூஜநம்।

என்னும், பரசுருதி வாக்கியத்தால் லிங்கம் ஸ்தாவரம் ஜங்கமமென இருவகைப்படுமெனவும் ஸ்தாவரலிங்கசிவலிங்கமும்ஜங் கமலிங்கம் சிவபெருமானல்தீக்ஷிக்கபெற்ற சிவத்விஜர்களெனவும் சிவப்பிராம்மணருக்கு செய்யப்படும் பூஜை சிவபூஜை யாகுமென வுங் கூறியிருத்தலால் சிவப்பிராம்மணபோஜனம் சிவ பூஜையாய் முடிபுற்று நிற்கும் இவற்றல் பிராம்மணரை நோக்க சிவப்பிராம் மணர் விசேஷரென்பது தெற்றெனப் புலப்படும். அங்கனமாயின் இச்சிவப்பிராம்மணர் சிவபெருமானை பரார்த்தத்தில் பூஜிப்பதா லும் சிவநிர்மால்யம் புசித்தலாலும் பரார்த்தத்தில் மூன்று வருஷ ம் பூஜித்து உபஜீவிப்பவரை தேவலகர் எனவும் இத்தேவலகர்க ளை ஸத்காரியங்களில் வர்ஜிக்க வேண்டுமெனவுங் கூறி யிருத்தலா லும் சிவாகமங்களில்,

ஆத்மார்த்தஞ்ச பரார்த்தஞ்ச பூஜா த்விவிதமிஷ்யதே। ஆத்மார்த்தஞ் சரலிங்கம் ஸ்யாத் ஸ்திரலிங்கம் பரார்த்தகம்।

என்னும் வாக்கியத்தால் சிவபூஜை ஆத்மார்த்தமெனவும் பரார்த்தமெனவும் இரண்டு பேதமுடையதெனவும் ஆத்மார்த்தஞ் சரலிங்கமும் பரார்த்தம் ஸ்திரலிங்கம் அதாவது ஆலயாதிகளில் அஷ்டபந்தனதிகளால் பிரதிஷ்டிக்கப்பட்ட லிங்கமெனவுங் கா

ணப்படுதலால் தேவலகத்வாதி தோஷஞ் சிவாகமத்தாலுமேரப் பெருமெனின்,

ஆத்மார்த்த பூஜநம் நித்யம் ஸ்வஸ்யைவ புண்யதம் | பரார்த்த பூஜநம் நித்யம் ஸர்வேஷாம் மோக்ஷதாயகம் | ஆசார்யக்ரம ஸம்ப்ராப்தம் லிங்கம் முக்திப்ரதம் ஸ்ம்ருதம் | தத்பூஜாதேசிகாநாஞ்ச தத்தர்சநவதாம் ததா | ஸர்வேஷாம் முக்திஹேதுத்வாத் பரார்த்த மிதி கீர்த்திதம் |

என்னும் சிவாகமவாக்கியத்தால் ஆத்மார்த்த பூஜை தனக்கு மாத்திரமே பயன்படத் தக்கதெனவும் பரார்த்த பூஜை யாவருக்கு மோக்ஷத்தை கொடுக்கத்தக்கதெனவும் இந்த முக்தி பிரதமான லிங்கம் ஆச்சார்ய பரம்பரையாய் கிடைத்துள்ளதெனவும் அதை பூஜிக்குங் குருசிரேஷ்டர்களுக்கும் அதை தர்சிக்கும் மஹாத்மாக்களாகிய எல்லார்களுக்கும முக்தி ஹேதுவாயிருப்பதால் இதற்கு பரார்த்தமெனச் சொல்லப்படு மெனவுஞ் சிவாகமமாகிய பரவித்தை கூறுவதால் இதில் தேவலகத்வாதி தோஷமேறக்காரணம் இல்லை. பரார்த்தமென்பதற்கு முக்தியை பிரயோஜனமாக வுடைய்தென பொருள் செய்திருப்பதால் இஃது தோஷயுக்தமான பூஜையாகாது மற்றும் பூஜிப்பவர் தர்சிப்பவர் இவ்விருவர்களுக்கும் ஒருங்கே முக்தி கூறியிருத்தலின் இவற்றை பூஜிக்கும் ஆதிசைவ பிருமமணருக்கு தேவலகத்வ தோஷமுமுண்டாகா இவை ஆச்சர்ய பரம்பறையில் கிடைத்து வரும் லிங்கமாதலின் பிரர் பூஜை என்பது மிதற்கேற்பட காரணமில்லை இவற்றால் ஆதிசைவர்களுக்கு இப்பூஜை ஸ்வார்த்தமாகவே முடிந்துவிடும் இக்கருத்தை பரவித்தையுட்கொண்டே யன்றோ,

ஆதிசைவைஸ்து கர்த்தவ்யௌ ஆத்மார்த்தஞ்ச பரார்த்தகம் ! என்னும்,

வாக்கியத்தால் ஆதிசைவ பிராம்மணர்களால் ஆத்மார்த்த பரார்த்த பூஜை செய்யத்தக்கதென கூறியிருத்தலின் இவை முக்தி பிரதமான பூஜை என்பதிற்றடையில்லை இவற்றால் ஸ்மிருதியில் கூறிய பரார்த்தம் வேருஞ் சிவாகமத்தில் கூறிய பரார்த்த வேறுமாய் பொருள்பட்டு நிற்கும் சிவாகமத்தில் கூறிய பரார்த்த சப்தத்திற்கு பரம் மோக்ஷம் யஸ்ய ஸாதயதி ஸா பூஜா பரார்த்தா. என்னும் வாக்கியத்தால் முக்தியை பிரயோஜனமாக வுடைத்தான பூஜை எதுவோ அது பரார்த்த பூஜையாம் என்பது பொருள்.

பரார்த்தம் சிவஸ்ய ப்ராஸாதம் ஸர்வாநுக்ரஹகாரணம் | [illegible]

[illegible]

என்னும் பரசுருதி வாக்கியத்தால் பரார்த்தமிரண்டு பேதமுடையதென்றும் ஆலயபூஜை ஸர்வாநுக்கிரஹ காரணமென்றும் இதற்கன்யமாய் அன்யர்களை உத்தேசித்து அவர்கள் கிரஹத்தில் பூஜிப்பவருக்கு பூஜை செய்ய ஸாவகாசமல்லாமல் ஒருவருக்கு சம்பளங்கொடுத்து சம்பளம் பெற்றவர் இன்னார் பூஜையை நான் செய்யப்போகிறேனென ஸங்கல்பிடித்து பூஜிக்கு பூஜை பிறரை உத்தேசித்து பூஜிக்கும் பரார்த்தமெனவும் இவ்வாருள்ள பரார்த்த பூஜை மூன்று வருஷம் ஒருவன் செய்வானாகில் அவன் தேவலகத்வாதி தோஷமடைகிறானெனவும் இத்தேவலக தோஷம் பெற்றோரை எல்லா கர்மங்களிலும் வர்ஜிக்கவேண்டுமெனவுங்கூறியிருத்தலால் முக்திபிரதமான ஆலயபூஜையில் இந்த தோஷமேற்றி தூஷிக்கமுயன்றது விச்சாரணைக்குறைவேயாகும். இக்காரணம்பற்றி மோக்ஷார்த்த லிங்கபூஜனாதிஸதாச்சாரமுண்டானாரை தேவலகரென்பது அவைதிகர்வாதமாம் கிரஹார்த்தனு விஷயத்திலும் இவர்கள் சிவபூஜை புரிவதால் அவை அஸத்கார்யமாவது யாங்கனமெனின் பூஜிக்கும் யஜமான் குருவறிட்த்தில் பூஜார்த்தம் லிங்கம் பெரும்பொழுது மறணபர்யந்தம் இந்த சிவபூஜையை கைவிடுதலில்லையெனபிரதிக்ஞைசெய்து சிவபெருமானை அடைந்து ஸ்வல்பகாரியத்தால் பிரதிஞாஹானியும் நித்யவிஹித தர்மமும் இழந்து பிரரைச் செய்யும்படி முயற்ச்சித்து நிற்பதால் குருவினிடஞ் சிவலிங்கம் பெற்றோர்க்கும் இவற்குச் சாதகமாய் வந்து பூஜிப்போர்க்கும் இவ்விருவருக்கும் இப்பூஜை பரார்த்தமாய்விடும். தான் பூஜிக்கவேண்டுவதை அன்யரிடம் ஒப்பித்து விட்டதால் எஜமானனுக்கும் இது பரார்த்தமாய் தோஷமேற்படக் காரணமாயிற்று இவற்றால் தோஷமேறுதல் கூடுமோவெனின் ஸந்தியாவந்தனாதி அனுஷ்டானங்களை தானே நித்யமாய் செய்ய

வேண்டிய ஒருவன் ஸாவகாசமின்மையில் ஒருவனை ஏற்படுத்தி சம்பளந்திட்டஞ்செய்து பிறதிதினமும் அவனே செய்யும்படி விடுத்து விடின் இவன் ஸந்தியாவந்தனாதிகளை இழந்து பிரஷ்டனாவதோடும் இப்பிரஷ்டனுக்குடன்பட்டு நின்ற கூலிக்காரனும் பிரஷ்டனாவதுபோல் சிவபூஜையை விட்ட பிரஷ்டனுக்கு உடன்பட்ட பூஜகனும் பிரஷ்டனாவன் கூலிக்காரன் கூலி வாங்குவதால் இவனுக்கு தோஷமுண்டாகாதெனின் கூலியுக்கார்யன்னோக்கிப்பெறுதல் வேண்டும் ராஜகிரகத்தில் திருடிவந்தால் நூறு வராகந்தருகிறேனெனக் கூலி பேசி இத்திருட்டுக்குடன் பட்ட கூலியாள் பாராக்காரரிடம் பிடிபட்டு தன்பந்துஜனங்களை நீங்கி பந்தேகானாவிலிருப்பதுபோல் சிவபூஜைக் கைவிட்ட பிறஷ்டனுக்கிணங்கி கூலிக்கு பூஜித்தபிறஷ்டர்கள் ஸ்வஜாதிவகுப்பின்ஸத்கார்யத்தில் சேர்க்கப்படமாட்டார். இவற்றால் பிறரை உத்தேசித்த ஸ்வார்த்தமல்லா பரார்த்தபூஜையிலும் ஜீவிப்பவரிவரென்பது தெற்றென விளங்கும். ஆதிசைவ பிராம்மணர்களும் கோயிலில் சம்பளம் வாங்கி பூஜிக்கின்றதால் இத்தோஷமவர்பறத்தேராதோவெனின் இவ்வாதிசைவர் ஒருவர் பூஜித்தபூஜையை அவற்காக தான் பூஜிக்காது ஸ்வார்த்தமாகவே பூஜிப்பதால் பரார்த்த தோஷப்படுதலெங்கனம். இவற்றால் ஸர்வாத்மாக்களுக்கும் தமக்கும் முக்திப்பிரதமாயுள்ள ஸர்வானுக்கிரஹகரமாம் சிவபூஜை பரார்த்த தோஷமுண்டாதற்குக் காரணமில்லை. இஃதன்றி பரவித்தையாகிய சிவாகமத்தில் கூறியவாறு தீக்ஷிக்கப்பெறாது பூஜிக்குஞ்சிவபூஜையும் பரார்த்த தோஷப்பட்டிழந்துவிடும்.

ஸ்வார்த்தம் வா பரார்த்தம் வா ஶிவலிங்கம் ப்ரபூஜனம் । அதீக்ஷி-
தேன கார்யம் [illegible] நஶ்யதி । யஸ்மாதீஶஃ பதிஃ
ப்ரோக்தஃ ஜீவஃ பஶுரிதி ஸ்ம்ருதஃ । [illegible]
[illegible]

ஸம்ஸ்க்ருதாஸ்தே ததோ ஹ்யேதே | சிவபூஜா கராணாம் ஹி தீக்ஷா ஸப்தவிதா ஸ்ம்ருதா | க்ரியாவதீ ஞானவதீ வ்யதா ஸ்பர்சவதீ வசீ | சாக்ஷுஷீ மானஸீ சேதி தீக்ஷா ஸப்தவிதா ஸ்ம்ருதா |

என்னும் பரசுருதி வாக்கியத்தால் சிவதீக்ஷையல்லாது ஆத்மார்த்த பரார்த்த பூஜைகளை பூஜித்தல் கூடாது பூஜிப்பானாயின் நாசத்தையுண்டாக்குமெனவும், பரமேசுவரர் பதியெனவும், ஆத்மா பசுவெனவும், பதி பசுவென்னும் பேதத்தினால் பசுரூபமாயிருக்கிற ஆத்மாவானது பதிரூபமான பரமேசுவரரை அறியாததினால் இந்த அதீக்ஷிதர் பூஜை நிஷ்பலமாமெனவும் இவற்றால் சிவபூஜைக்கு பசுபாவநீங்கத்தக்க சிவதீக்ஷை முக்யமெனவும் பசுபாவஞ்சிவதீக்ஷையால் நீக்கிக்கொள்வானாயின் பதிபாவத்தால் பதிஸ்வரூபமாகிய பரமேசுவரருக்கு ஸஜாதியமாகிறார் ஸாஜாத்தியத்தால் ஐக்கமும் அவ்வில்லாவிடில் ஐக்கவிரோதமுமுண்டாகுமெனவும் வனத்தில் ஸிம்மத்தைக்கண்டு யானை எவ்வாறு அஞ்சுமோ அவ்வாறே அதீக்ஷிதரால் பூஜிக்கப்படுஞ் சிவலிங்கத்தில் சிவபெருமானுவிற்பவிப்பதற்கஞ்சுவரெனவும் சிவபூஜை முதலிய ஸத்காரியங்களுக்கு சிவதீக்ஷை முக்யமெனவும் அந்த சிவதீக்ஷை கிரியாவதீ, ஞானவதீ, வியதா, ஸ்பர்சா, வாசகீ, சாக்ஷுஷீ, மானஸீ எனஏழு பேதமாமெனக் கூறியிருத்தலால் பரஸம்ஸ்காரமாகிய சிவதீக்ஷை யல்லாததால் சிவபெருமான் இவர்களுக்கு வேறாய் நிற்றலால் இவர்கள் பூஜையும் பரார்த்தமாகும் இவற்றால் சிவதீக்ஷையல்லாது மூன்று வருஷம் சிவபூஜை பரார்த்தத்தில் பூஜிப்போரையும் ஸத்கர்மாக்களில் வர்ஜிக்கவேண்டுமென்பதாம் சிவதீக்ஷையல்லாதோர் சிவபூஜை பதியாகிய பரமேசுவரரை பசுரூபமான அஸத்பாவஞ் செய்பவராதலால் இவர்கள் பூஜையால் தோஷ யுக்தாளாகிறாரென்பது கருத்து. இவற்றால் இவர்களையும் ஸத்கார்யத்தில் வர்ஜிக்கத்தக்கது பிராம்மணர் சிவதீக்ஷை பெறுவராயின் முக்திப்ரதமான பரார்த்தாலய பூஜைக்கும் யோக்யமாவாரோவெனின்,

சிவபூஜாக்ரியாவிஷ்டோ த்விஜோ தீக்ஷிதோ யஸ்து ப்ரஸூவே ஸம்ஸ்க்ருதா ஸமயேஜனம் காயம் நக்யம் ராஷ்ட்ர பாபாஸம்பவம் | ஆத்மார்த்தே நகர்த்தவ்யோ ஹ்யாஸ்யாஞ் பாபாஸம்பவம்! ஆசார்யஸ்யாபி .....

वदीक्षितास्त्वादिशैवाख्याः । शुद्धशैवास्तु ते ज्ञेया सर्वानुग्राहकाः स्मृताः । शिवस्यैव वक्त्रेभ्य आदिशैवब्राह्मणाः स्मृताः । जातास्ते ह्यादिशैवाख्याः केवलं ब्रह्मणो मुखात् । जाताः सृष्ट्या विना शम्भोर्ब्राह्मणास्ते मता हि । शुद्धशैवास्तु ते विप्रा दीक्षिता ब्राह्मणास्सदा । शिवदीक्षादि संस्कारैः परमागमविद्यया । तस्मात्ते सर्वदा ज्ञेया महाशैवद्विजाः स्मृताः ।

என்னும் பரசுருதிவாக்கியத்தால் பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர் சூத்திரர் முதலினோரும் சிவதீக்ஷை பெற்றோராயிருப்பராயின் ஆத்மார்த்த பூஜை மாத்திரம் புரிதற்குரியாரெனவும் முக்திபிரதமான பரார்த்த பூஜை ஒருக்காலுமிவர்களால் செய்யக்கூடாதெனவும் ஆதிசைவப் பிராம்மணர்கள் ஆத்மார்த்தம் பரார்த்தமிவ்விரண்டையும் பூஜித்தற்குறியாரெனவும் ஆதியில் சதாசிவமூர்த்தியால் தீக்ஷிக்கப்பட்டவர்கள் ஆதிசைவர்களெனவும் இவர்கள் யாவருக்கும் அனுக்கிரஹிக்கும் யோக்யதையுடையா ரெனவும் இவர்கள் பரமேசுவரரது பஞ்சமுகங்களாகிய ஈசான தத்புருஷ அகோர வாமதேவ ஸத்யோஜாதாதி ஐந்து முகங்களின் வழியாய் வெளிவந்தவரெனவும் சிவசிருஷ்டியல்லாது கேவலம் பிரும்மாவின் முகத்தால் வெளிவந்தவர் பிராம்மணரெனவும் இந்த பிராம்மணர்கள் பரவித்யாமயமாம் சிவாகமங்களில் கூறியுள்ள சிவதீக்ஷாதி ஸம்ஸ்காரங்களை ஆதிசைவர்களிடம் பெருவாராயின் மஹாசைவர்களாகிறாரெனவுங் கூறியிருத்தலால் ஆதிசைவ பிராம்மணர்கள் பிரஸவியிலேயே சிவத்வஸித்திபெற்றவரும் பிராம்மணர் பிறந்த பின் ஸம்ஸ்காரத்தால் சிவத்வஸித்தி பெற்றவருமாய்க் காணப்படுதலின் லோகாநுக்கிரஹகரமான பரார்த்தபூஜை ஆதிசைவப்பிராம்மணர்கள் பரத்தே சாதிக்கப்படும் இவற்றால் இவர்களை லோககுருவெனச் சுட்டப்படும். லோககுருவென சங்கராசசாரியர் முதலிய மஹாத்மாக்களைக் குறிக்கப்படுமென்றி கேவலம் கோயில் பூஜை செய்யுங் குருக்களை லோககுருவென்பது தகுமோவெனின் சங்கராச்சாரியார் கேவலம் அபரவித்யா பாஷ்யஞ் செய்து வேதாந்தமதப்பிரவர்த்தகராயிருப்பதால் வேதாந்தத்தி

ல் ஜகஜீவேசுவரம் பொய்யாயிருத்தலின் இவற்கு லோககுருத்வமும் பொய்யாய் முடிந்துவிடும். இக்காரணம் பற்றி சங்கராச்சார்யருக்கு லோககுருத்தங் கூறுவது நாயமுகத்தில் நில்லாவாம் ஜகத் ஜீவன் ஈசன் என்னும் பதி பசு பாச திருபதார் நிர்ணயங்களை வேதாந்தத்திற்கு பரவித்தையாகிய சிவாகமங்களால்அனுக்கிரஹித்து ஸித்தாந்தித்து நிற்பதால் லோககுருவாகிய ஆதிசைவர்களை கேவலம் கோயில் பூஜையுடையக் குருக்களென கழித்து இத்திருபதார்த்த லக்ஷணமற்ற யாவும் பொய்யென்னும் அபிப்பிராயமுடையார் பின் இவர்கள் செல்வதால் யாது பயன் ஆதிசைவ பிராம்மணர்கள் சிவபூஜாதி ஸத்கார்யங்களில் உண்மைப்பொருளும்சங்கராச்சார்யர்சிவ பூஜாதிஸத்கார்யங்களில் இன்மைபொருளுமாய் நிற்றலின்எதுபல பிராப்தி என்பதை விவேகிகள் உற்றுணர்வார்களாக இஃதின்றி சங்கராச்சார்யார் சிவபூஜை சரமும்ஆதிசைவபிராம்மணர்கள் சிவபூஜைஸ்திரமுமாயிருத்தலின் ஸ்திரலிங்க பூஜையை நோக்கச் சரலிங்க பூஜைஸாமான்யமாதலின் சரலிங்கந்தமக்கு மாத்திரமே பலனளிக்கத்தக்கதும் ஸ்திரலிங்கம் யாவருக்கும் பலனளிக்கத்தக்கதுமாய் முடிதலின் சங்கரர் பூஜையிலும் இவர்கள் பூஜையே யன்றோ விசேஷத்வம் பெற்றிருக்கின்றது. இத்தகைய அருமை சிறிது முற்று நோக்காது கேவலங் கோயில் பூஜை செய்யுங் குருக்களெனக். கழிப்பதால் யாது பயன் அவர்களை கழித்தவிடத்திலும் அவர்கள் குருத்வந் தடைப்பட்டதின்று எச்சாதியரும் எச்சமயிகளும் இவர்களை குருக்களென வேசுட்டப்பட்டு எக்காலத்திலுங் குருத்வமுடைய் ஜாதியாகவே நிலை நின்றிருக்கின்றனர். இவற்றால் முக்தி பிரதமாம் ஸ்திரலிங்க பூஜாஸத்கார்யமுடைய ஆதிசைவ பிராம்மணர்களை ஜகத்குருவென்பதுந்தகுதியே இவை சாஸ்திரீகமாகாவெனின் இவற்குற்ற லோககுருத்வஞ் சாஸ்திரீகமும் ஆதிசைவரல்லாத ஏனையோர்க்குற்ற லோககுருத்வம் அசாஸ்திரீகமுமாய்க்காணப்படுதலின் சாஸ்திரோக்தமாகாதெனச் சாதித்தல் கூடாவாம் சங்கராச்சாரியார் முதலினோர்க்கு சங்கரவிஜயம் முதலிய பிரமாணங்களில் ஜகத்குருத்வங் கூறியிருப்பதால் அதுபோல் இவ்வாதிசைவர்களுக்கு ஜகத்குருத்வங் கூறிய மெய்நூலெது வெனில் ஈண்டெடுத்து விளக்குவோமாக ஸ்காந்தம் சங்கரஸம்ஹிதை

°உபதேச காண்டத்தில்,

𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌲𑍋𑌕𑌗𑍁𑌰𑍁𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌗𑌿𑌰𑌿𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑍇 𑌜𑌾𑌤𑍋𑌽𑌸𑌿 । [illegible]

என்னும் வாக்கியத்தால் தாங்கள் லோககுருவாய் புஷ்பகிரி ஸந்தானத்தில்தோற்றிமஹாத்மாவாயுள்ளவருதலால் துக்கத்தை யடைந்திருக்கின்ற இவர்களை சிஷ்யர்களாகக் கொள்ளல் வேண்டும் எல்லா பாபங்களும் நீங்கத்தக்க தங்களாலாருதிக்கப் படுகின்ற அமிருதேசுவரரை தர்சிக்கச் செய்து பரிச்சாரகம் புரிதற் பொருட்டு இவர்களை கற்பித்தருளல் வேண்டும் எந்த காலத்தி லிவர்கள் துக்கசாகரத்தினின்று நீங்குகிறார்களோ அதுபர்யந்தம் இவர்களிடங் கருணை வைத்து அருள் புரிவீராக தாங்கள் லோககுருவாகையால் இது செய்யவேண்டுவதவச்யமாகும் எனக் கூறியிருத்தலால் முக்தி பிரதமான பரார்த்தாலய பூஜா கைங்கர்யம் பெற்ற ஆதிசைவ பிராம்மணர்களுக்கு லோககுருவென்பது பிரமாண பிரஸித்தமாம் சங்கரவிஜயம், நீலகண்டவிஜயம், ராமாநுஜவிஜயம், மத்வவிஜயம், ஸோமநாத ஆராத்யவிஜயம் முதலிய கிரந்தங்கள் யாவருமொப்பத் தகுந்த பிரமாண நூலன்றாதலால் அவரவர்களுக்கு சிஷ்யத்வம் பெற்றோர் மாத்திரமே மெச்சத்தகுந்தது. இவை வேதாகமபுராண இதிஹாஸாதி பிரமாணங்களைப்போல் யாவரும் ஒப்பத்தகுந்த பிரமாண நூலன்றாம். இக்காரணம் பற்றி ஆதிசைவ பிராம்மணர்களுக்குற்ற குருத்வம் ஜகத்குருத்வமும் ஏனையோர்க்குற்ற குருத்வம் அவரவர் சிஷ்யர்களாலேற்றப்பட்டதெனவுங் காணப்படுதலால் ஆதிசைவருக்குற்ற ஜகத்குருத்வம் சாஸ்திரீகமென தீர்மானிக்கப்பட்டு ஏனையோர்க்குற்ற குருத்வம் அசாஸ்திரீகமென்பதை சாஸ்திரவாயிலாய் திரஸ்கரித் தொதுக்கப்படும். சைவஸமயம் ஸ்ரீபுரிகாலந்தழைத் தோங்கியுய்யப் பெருங்கருணை பூண்டு ஸ்திரமாய் லிங்கப்பிரதிஷ்டாபநாதி ஸத்கார்யம் வகித்த ஜகத்குருக்களாகிய ஆதிசைவ

பிராம்மணர்களை கோயில் குருக்களெனக் கழித்து சைவஸ
மயம் மருந்துக்குங்கிட்டா ஏகான்மவாதமாகிய வேதாந்த பாஷ்
யஞ் செய்த சங்கராச்சாரியாரை ஜகத்குருவெனக் கொண்டாட
ல் சைவ ஸமயத்துள்ளோர்க்குத் தகுதியோ. அவ்வாறபிப்பிராய
மிருக்குமாயின் பிராமண ஜாதி சிவமதமென கைச்சரத்திடுவதை
நீக்கி பிராமணஜாதி வேதாந்தமதம் அல்லது அத்வைதமதமென
வாவது மாற்றி வைத்துக்கொள்ளுங்கள் வேதாந்தம் வேதத்தின்
முடியெனப்பொருள் படுமென்றி ஸித்தாந்தமசாராதலின் ஸித்
தாந்தரூபமான பரவித்தையாஞ் சிவாகமத்தால் சாதிக்கப்பட்டு
ள்ள சைவசமயத்தைவிட்டு ஏகான்மவாதமுதலிய நாஸ்திகாதி
மதத்துட்பட்டு வருந்துதல் கலிவலிமிகுதியாலன்றோ முதலில்
வேதாந்தவாதத்தா லாலோசிக்கப்புகுவோமாயின் கொலைகளவு
கட்காமம் முதலிய துராச்சாரங்கள் யாவும் ஸதாச்சாரமாய் பரி
ணமிக்கும் வேதாந்தவாதத்தில் தனக்கன்யம் பொய்யாதலின்
மெய்யாத்தோற்று முருவங்களை கொன்று விடுதலால் தோஷமு
ண்டாகா தோஷத்தையடைய பிரும்மத்தைத்தவிற பதார்த்த
மின்றாதலால் கொன்றது பிரும்மம் கொல்லனின்றதும் பிரும்ம
மாய் முடிதலின் ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம என்வேதம் விதித்
துள்ளதும் இவர்களுக்குடன் பாடன்று பிரும்மம் வ்யாவஹாரி
கத்தில் நிற்பது ஜீவனாதலால் ஜீவஹத்திசெய்தல் கூடாதெனின்
கொலைசெய்வதால் வ்யாவஹாரிகங்கெட்டு பார்மார்த்திகவந்து
விடுவதால் ஜீவஹத்தி எழுதென்பது புலப்படுகின்றது இவ்வா
றேகள்வும் தனக்கன்யம் பொய்யாய் யாவும் பிரும்மமயமாயிருத்
தலால் முடிச்சவிழ்ப்பதும் பிரும்மந்தான் முடிச்சவிழ்க்க கொடு
த்ததும் பிரும்மமாயிருத்தலில் திருட்டென்னுங்குற்றமிதிற்கில்
லை கிருமினல் கோர்ட்டார் முதலியபிருமங்கள் இத்திருட்டுப்பி
ருமங்களைத் தெண்டிக்கக்காறணமென்னோ அவை வியவஹாரிக
த்திற்கு விரோதமெனின் பாரமார்த்திகத்தில் விரோதமின்மை
யும் வ்யாவஹாரிகம் பொய்யாயிருத்தலின் திருடினதும் பொய்
யாய்முடிந்துவிடும் இத்திருட்டுப் பிரும்ம தண்டனைக்குட்பட்டு
நிற்கக்காறணமென்னோ இவ்வாறே பிறர்மனவியை கலவியாக்
கைபிடிக்க விரும்பினும் பிரும்மம் பிரும்மத்தைச் சேஷ்டிப்பதா
ய் முடிதலன்றி இச்சேஷ்டையில் குட்டிகுளவான் பிரும்ம

உண்டாய்த்திரிவதால் அக்குட்டிபிரும்மமுண்டானதும் பொய்
யாம் இதில்மனஞ்சகியாது ஏன் பெண்டாட்டியை எப்படி நீ
கைபிடித்தாயென்று கூக்குறலிட்டு தடியால் தீட்டும் பிரும்மமு
ம் தடியடிபட்டுவருந்தும் பிரும்மமும் ஒன்றுமாறுயாங்ஙனம்
இவ்வாறே கள்ளுண்டு மயங்கும் பிரும்மத்திற்குக் கள்குடி பொ
ய்யாயிருத்தலின் கள்குடித்தோர் கள்ளே குடிக்கவில்லை என
சாதிப்பதற்கு இவ்வேதாந்தவாதம் சாதகமேயாகும் இவ்வாருள்
ள வாபாஸம்பலவுள வற்றையும் விறிவஞ்சி விடுத்தோம். இதற்
கே ஏகான்மவாத மெனப்பெயராம் ஆனல் வேதாந்தமென்பது
பொய்யோவெனின் வேதாகமம் முற்றறிஞனாகிய பசுபதிதிருமுக
த்தினின்று வெளிப்பட்ட மெய்நூலாதலின் அவை பொய்யாமா
றெங்கனம் வேதாந்தம் சார்வாகனைநோக்கி பரிபவப்படுத்தவெழு
ந்ததிருவாக்கே யாதலின் சார்வாகன் சரீரத்தைத்தவிர ஜீவனே
இல்லை என வாதிக்கும் வாதியாதலால் சரீரத்திற்கு பரமாய் ஜீவ
னொன்றுளதென ஸித்தாந்தித்துள்ளது வேதாந்தமென்பது
தேற்றெனவிளங்கும் இக்காரணம்பற்றி வேதாந்தம் அத்யாத்மசா
ஸ்திரமென்பதாய் சுட்டப்படும் இவ்வத்யாத்மிகத்திற்குமேல்
அதிமார்க்கம் மாந்திரிகமென இரண்டுமார்க்கங்களிருத்தலின்
இவ்விரண்டையுநோக்கவே தாந்தந்தாழ்ந்ததேயாகும் சார்வாக
னைநோக்க வேதாந்திகள் விசேஷரென்பதி லெமக்குத்தடையில்
லை அதிமார்க்கம் மாந்திரீகத்தை நோக்க வேதாந்தம் உயர்ந்ததெ
ன்பதை வேதமே ஒப்பாது இவற்றால் வேதாந்தமெனவுஞ் சித்
தாந்தமெனவு மிரண்டு பிரிவான மெய்நூல் சிவபெருமானல்
கூறப்பட்டுள்ளதாதலின் வேதாந்தம் வேதமுடிபும் சித்தாந்தம்
சிவாகமத்தின் முடிபுமாய் நிற்றலின் சித்தாந்தமன்றி வேதாந்தம்
பயன்படா வேதாந்தத்தை ஸித்தாந்தித்தனுக்கிறகித்து நிற்பது
சிவாகமமேயாதலால் சிவாகமாதி பரவித்தை ஜன்யஞானம் ஸத்
பிராமணாதிகளுக்கு அத்யாவசியகமாய் வேண்டப்படும் இவ்வா
ருள்ள வுண்மையை அணுத்துணையுமறியாது யாம் வேதாந்தி
எமக்கொன்றுமில்லை என நாஸ்திகருதல் கூடுமோ வேதாந்திஜீவ
னொன்றுளதென சுட்டிநிற்போருதலால் நாஸ்திகராதல் யாங்ஙன
மெனின் ஜீவன் பிரும்மமாகமதித்து நிர்விகார பிரும்மத்திற்கு
விகாரஞான பிராந்திவ்யாவஹாரபிரதிபிம்பகுண விசேஷமேற்றி

பிரும்மமே பிறக்கிறது பிரும்மமே இறக்கிறது இப்பிறப்பிறப்பிற்குட்பட்ட பிரும்மத்தைத் தவிர வேறொன்றில்லை என வேதாந்தி தீர்மானித்து விடுதலால் இவற்றை உண்மையில் யோசிக்குமிடத்தில்ஜீவனாய் நிற்றலின் பிரும்மமென்பதிவர் சுட்டியபொருளாகா-பிரும்மஞானமற்ற இந்தவாதம் நாஸ்திகமென்பது தெற்றெனவிளங்கும் அதிமகிமைதங்கிய பரவித்தையாஞ்சிவாகமத்தை நீற்று வேதத்துட்பொருளாராயப் புகுவோர்க்கு வேதமுண்மைப்பொருள் விளக்கா இவ்வாருள்ள ஞாயம் பலவுளவற்றால் வேதாகமாதிஸத்பிரமாணங்களை கைப்பற்றி நிற்கும் ஆதிசைவபிரும்மணர்களே ஜகத்குருவெனவும் அவர்களால் ஸர்வான்மாக்களும் முக்திபெற்றுய்ய பிரதிஷ்டிக்கும் லிங்கமே சைவஸமயத்துள்ளார்க்கு பெருந்தாரக மெனவும் இத்தகய சைவமதஸ்தாபனஞ் செய்த சிவாச்சார்யர்களே இன்றும் ஜகத்குருக்களாய் யாவரும் மதித்திருக்கின்றாரென்பதிற்றடையில்லை விபூதிசிவப்பிரஸாதங்கள் சிவதர்சனம் முதலிய ஸத்கார்யங்கள் இஜ்ஜகத்குருக்களாலன்றோ நன்னடை பெற்றுவருகின்றது. இப்பூஜையில் வேதாந்தப்பிரவர்த்தகம் விகித்தசங்கராச்சாரியார் பரம்பரையார் தானே நேரஸ்திரலிங்காதிகளை பூஜிக்கவேண்டுமென கோயிலில் ஜுஸ்ழய்ப்பிரயத்தினிப்பது இன்றும்வழக்கமாயிருக்கின்றது-சங்கராச்சாரியர் ஸ்வாயம்புவாதி ஸ்திரலிங்கத்தைத்தொட்டு பூஜிக்க வேதாகம புராண இதிஹாஸாதிகளில் விதியிருக்கின்றதா சைவஸமயத்திலுள்ள ஸத்பிராம்மணாதிகளுமன்றோ இவ்வகார்யத்திற்கு முந்தினின்று பிரயத்தினஞ் செய்யப்புகுகிறார் சங்கராச்சாரியார் ஜகத்குருவா யிருப்பதால் அவர்புக டாம் பிரயத்தினிக்கிறோமெனின் அவர்க்குற்ற ஜகத்குருத்வஞ் சாஸ்திரீகமன்றென் ஞாயமுகத்தால் நிரூபித்துள்ளோமாதலின் பிரமாணப் பிறவித்தமாய் ஜகத்குருத்வம்பெற்ற ஆதிசைவப் பிராம்மணலிங்க நிஷ்டாதி சிவதர்மங்களில் பொய்க்குருக்கள் புகுதல் நீதியோ அங்கனமும் இவர் கையில்பஸ்மமுதலிய ஐசுவர்யஸம்பத்தியை உலகினர் அங்கீகரித்து வருகின்றார்களா ஒய்குருக்களே விபூதிகொடுமெனக் கேட்கின்றாரேயொழிய சங்கரர்பூஜையில் பஸ்ம வைபவங் கொண்டாடப்பட்டு வருகின்றதா இச்சங்கராச்சாரியாரையுமன்றோ ஜகத்குருக்களாகிய ஆதிசைவப்பிரும்மணர்கள் திருக்கரத்தால் பஸ்மம்பேரவேதசிவாகமங்கள் விதித்திருக்கின்றது இதில் சிலரவியை

யுற்று ஸ்வாமியார் சிவத்விஜர்கள் கரத்தால் பஸ்மம்பெருதல் கூடாதெனநினைத்து தட்டைநீட்டி அத்தட்டிலிருந்து தானே எடுத்துக்கொள்வது தகுதியென நினைக்கிறார் சிவத்விஜர் திருக்கரம் ஸத்பாவமுடையதுந்தட்டு அஸத்பாவமுடையதுமாய் காணப்படுதலின் அஸத்தைன்னோக்க ஸத்திற்குயர்வு கூறப்படுதலின் ஸத்தைநீக்கி அஸத்தை இப்பஸ்மபிரதான விஷயத்திலுட்கொண்டதற்கு காரணமென்னோ - ஸ்வாமியவர் மஹானாயிருப்பதால் இவர் கொடுத்தல் கூடாதெனின் மஹான்ஸத்தாயுள்ளவரிடத்தில் பிரஸாதங்கிரஹிக்காது அஸத்தினிடம் பிரஸாதங்கிரஹிப்பதற்கு விரும்பியிருப்பதென்னோ தானேஸ்வீகரித்துக் கொள்வதால் பாதகமில்லையெனின் தாமேதம்மிடமிருக்கும் விபூதியைஸ்வீகரித்துக்கொள்வதுசிதமாமன்றி தமக்கன்யஞ் சிவபெருமான் திருச்சன்னிதானத்திலுள்ள பஸ்மாவை இவர் ஸ்வார்த்தமாய் ஸ்வீகரிப்பதெப்படி இச்சங்கராச்சாரியார் யாவும் பிரும்மாகாரமாய்பாவிக்கும்பிருமஞானியாதலால் இவற்கு ஸாமான்யர் விபூதிகொடுத்தல் கூடாதெனின். விபூதிகொடுப்பதும் பிரும்மம் விபூதிவாங்குவதும் பிரும்மமாய்முடிதலின் விபூதிகொடுக்குஞ் சக்தியுள்ள பிரும்மத்தை நீக்கி விபூதிகொடுக்கச்சக்தியற்றதாம் பாஷாணம் பிரும்மத்தை இச்சத்கார்யத்தில் கைக்கொண்டதற்கு காரணம் யாதோ பரார்த்தத்தில் பூஜித்து உபஜீவிப்பவர்களை கானினியரெனவும் குண்டகரெனவுங் கோளகரெனவும் நிஷித்தங்கூறப்படுதலின் மஹானாயுள்ளோர் இவர் பிரஸாதங்கொடுத்தல் கூடாதெனின் இவற்கு யாவும் பிரும்மாகார பாவமாயிருத்தலின் குண்டர் கோளகரென்னும் பேதமிவர்பறத்தில்லை இங்ஙனம்விசாரிக்கவேண்டுவதத்யாவச்யமாக விருத்தலின் அவற்றையுற்றுநோக்கப்புகுவோமாக பரார்த்தத்தில் உபஜீவிப்பவர் ஆதிசைவரல்லரென்பதும் முன்னெடுத்து நிரூபித்துள்ள விஷயமாதலின் மீண்டுமவற்றை பிரஸ்தாபிப்பது புனருக்திதோஷமாய் முடியும் இங்ஙனங்கானினியர் குண்டர் கோளகர் என்பவர்களைப்பற்றி மாத்திரமே விசாரிப்பதத்யாவச்யகமாம் கானினியரென்பது கன்னிகழியா ஸ்திரீயினித்துண்டானோ றென்பது சாஸ்திர பிரஸித்தியாதலால் ஆதிசைவபிராம்மணோத்பத்திகன்னி கழியாஸ்திரீயினிடம் உண்டானதாய் வேதசிவாகமங்கள் கூறத்துணியா பரவித்

தையாகியசிவாகமங்களில் இப்பரமாச்சார்ய பூதர்கள் சிவமுகோத்பவ சிவஸிருஷ்டியுடையா ரென்பதாய் நாட்டப்பட்டிருத்தலின் இம்மஹாத்மாக்களை கானினீயரென கூருதல் சிவாபச்சாரமாய் முடியும் ஶிவேந ஸ்தாபிதம் ஶைவம் ஶைவேந ஸ்தாபித: ஶிவ: ॥ ஶிவஶைவவிஸர்கா து ஶிவப்ராஹ்மண உச்யதே । என்னும் பரசுருதிவாக்கியத்தால் சிவனால் சைவஸமயம்ஸ்தாபிக்கப்பட்டதெனவும் சைவத்தால் சிவபெருமானை ஸ்தாபிக்கப்பட்டதெனவும் சிவபெருமானையும் சைவஸமயத்தையும் உட்கொண்டு விசுத்தாத்மாவாயுள்ளவர் சிவப்பிராமணரெனவுங் கூறி இருத்தலால் இவர் பரத்துக்கானினீயதோஷமேற்ற முயல்வது வேதமறியாதோர் செயலேயாகும் இஃதன்றி

ஶிவஸ்ய பஞ்சவக்த்ரேப்யோ ஶைவப்ராஹ்மணாஸ்ஸ்ருதா: ॥ ஜாதா: பஞ்சமுகாச்சைவா: கேவலம் ப்ராஹ்மணா உச்யதே ॥ ஜாதாஸ்ஸ்ருஷ்ட்யாதி நாஶம் ஹி ப்ராஹ்மணாய ச ஹாதகி: ॥ ஆதிஶைவஸ்து ஶிவப்ராதீக்ஷிதா ப்ராஹ்மணாஸ்ததா ॥ ஶிவதீக்ஷாதிலக்ஷ்யாசேஷா: உபதேஶாய விஶ்ருதா: ॥ தஸ்மாத் ஸர்வேஷு ஜாதேஷு ஹி ஶைவ ஸ்ம்ருதா:

என்னும் பரசுருதிவாக்கியத்தால் பரமேசுவரரது ஈசானுதி பஞ்சமுகங்களிலிருந்து சிவபிராம்மணர்கள் உண்டானுரெனவும் சிவஸிருஷ்டியல்லாது கேவலம் பிரும்மமுகத்தால் வெளிவந்தவர் பிராம்மணரெனவும் ஆதிசைவர்கள் பரசுருதி சிவாகமங்களில் கூறியசிவதீக்ஷையால் பிரும்மமுகோத்பன்னர்களாகிய பிராம்மணர்களை மஹா சைவராகச்செய்தல் வேண்டுமெனவுங் கூறியிருத்தலால் ஆதி சைவப்பிராம்மணர்கள் சிவமுகோத்பவ சுத்த புவனஸிருஷ்டி பேதமுடையாரென்பதும் இச்சுத்தாத்மாக்கள் பிராம்மணர் முதலானோருக்கும் சைவத்வஞ் சித்திப்பதற்கு ஆச்சார்யரெனவே காணப்படுதலின் இவர்களை கானினியர் என்பது குருவுக்கு நாமம்போட நினைந்த மூடர் கொள்கையேயன்றோ இவற்றால் கானினீயர் இவரன்றென்பது வேதாகமாதி பிரமாணமுகத்தால் புலப்படுகின்றது பின் கானினீயர் யாவரென்பதை விசாரிக்கப்புகுவோமாக பராசரர் ஓடத்திலேறிச்செல்லும்பொழுது சுபமுகூர்த்தம்வர ஆங்கு கன்னிகழியா மத்ஸியகந்தியை

யோசனகந்தியாக்கி புணர்ந்து அதினின்றுண்டாகியவர் வியாஸர் முதலினோர் என புராணங்கூறப்பட்டிருத்தலின் அவர்வம்சத்தவர் கானினீயரென்பது புராணமுகத்தால் புலப்பட்டு நிற்கின்றது இனியேனுங் கானினீயர் இன்ன வம்சத்தவரென்பதை ஊகித்தறிந்தடங்குவாராக. இனி குண்டரைப்பற்றி விசாரிப்பாம் பத்யௌ ஜீவதி குண்டஸ்ஸ்யாத் ம்ருதே பர்த்தரி கோளக: । என்னும் வாக்கியத்தால் பர்த்தா இருக்கும்பொழுதே சோரத்தனமாய் அன்யரைக்கலந்து பிறக்கும் பிள்ளைகளுக்கு குண்டனெனவும் பர்த்தா இறந்தபின் முண்டைகள் புருஷரைக்கலந்து பிறக்கும் பிள்ளைகளுக்கு கோளகனெனவும் பெயரெனக் கூறியிருத்தலால் உத்தமோத்தமமான ஆதிசைவப்பிராம்மண விருஷ்டி சிவமுகோத்பன்னமுடைய சிவசிருஷ்டியேயாதலின் குண்டகோளகத்வ வியவஹாரமிவற்கேரக்காரணமில்லைதாறை அகலிகை முதலிய ரிஷிபத்னிகள் புருஷனிருக்க அன்ய புருஷனைக்கலந்து ரமித்ததாய் புராணமுகமாய் வெளிப்படுதலால் அவ்வாறுள்ள ரிஷிகோத்திரத்திலுதித்தவர்களே குண்டருவரென்பது தெற்றெனப்புலப்படுகின்றது இவற்றால் ஸத்பிராம்மணர்களாகிய ஆதிசைவபிராம்மணர்களை குண்டரென தூஷிக்க முயன்றது விச்சாரணைக் குறைவாம் இனி கோளரென்பதைப்பற்றி பறிசுறித்தொதுக்குவோமாக ஆதிசைவபிராம்மணர்கள் உத்பத்தி சிவமுகோத்பவமுடையதாதலின் இவர் முண்டைக்குப்பிறந்த மக்கள்கள் ஆகார் ஒருவினுயகரை ஸௌமங்கிலியொருத்தி பிரதிதினமும் குடத்து நீருலபிஷேகித்து புத்திரசந்தானம் உண்டாக வேண்டுமென பிரார்த்திக்கிறது வழக்கமெனவும் அவளோடு கைம்பெண்டாட்டியொருத்தி ஸௌமங்கலி செய்வதுபோல் விக்னேசுவரருக்கு அபிஷேகஞ்செய்து அவளதை விரும்புகிறாளோ அதை எனக்குத்தரல்வேண்டுமென பிரார்த்தித்தாளெனவும் ஸௌமங்கலி கர்ப்பவதியாயிருந்து புத்திரனை பிரஸவித்தாளெனவும் அமங்கலியும் அவ்வாறே கர்ப்பவதியாயிருந்து புத்திரனை பிரஸவித்தாளெனவும் அப்புத்திரன் கல்விமானாய்வேதாந்தாதி மதபிரவிஷ்டனாய் வியாபகனாயிருந்து அனேக சிஷ்யருடன் இருந்தார் என்பதாய் சிலநூல்கள் கூறுவதால் அவ்வாறு அமங்கலிக்குப் பிறந்தவரும் அவற்கு உடன்பட்டு சிஷ்யருமுள்

ளோரும் கோளகர்களேயாவர். இவ்வுண்மையுணருது சிவமுகோத்பவர்களான ஆதிசைவர்களை கோளகரெனக் கூறமுயன்றது தனக்குற்ற கோளகத்வத்தை பிரகாசிப்பிக்கும் பொருட்டேயன்றி வேறன்று இவற்ருல் ஜகத்குருக்களாகிய ஆதிசைவபரமாச்சார்யமூர்த்திகள் பிறவியாலும் ஜாதியாலும் ஸமயத்தாலும் அச்சமய உணர்ச்சிக்குத்தக்க மெய்நூலாலும் அன்னூன்முகத்தாலனுஷ்டிக்கும் பர தர்மங்களாலும் ஸர்வான்மாக்களிலும் மேம்பாடுடையவராயிருத்தலின் இவர்கள் திருக்காம் அசுத்தமாவதெப்படி

ஶிவத்விஜகரேணைவ பஸ்மாதேயம் விஶேஷத꞉ ॥ அந்யத்விஜகரேணாபி பஸ்மாதேயம் ந காரயேத் ॥ ஶிவத்விஜகரம் பஸ்ம ஶிவஹஸ்தமிதி ஸ்ம்ருதம் ॥ அந்யத்விஜகரம் பஸ்ம ஶிவேந பரிகீர்த்திதம் ॥ தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந ஶிவஹஸ்தேந தாரயேத் ॥ அந்யதா குருதே மோஹாத் ரௌரவம் நரகம் வ்ரஜேத் ॥

என்னும் பரசுருதி வாக்கியத்தால் சிவத்விஜர்கள் கரத்தினுலேயே விபூதிகொடுக்கவேண்டுமெனவும் அன்யத்விஜர்கள் கரத்தினுல் கொடுத்தல் கூடாதெனவும் சிவத்விஜர் கறத்தால் கொடுக்கப்பட்ட பஸ்மாசிவஹஸ்தத்தால் கொடுக்கப்பட்டதற்குச் சமானமாகுமெனவும் அன்யத்விஜர் கரத்தின் பஸ்மாவானது அமங்களத்தை உண்டாக்குமெனவும் சிவஹஸ்தத்தினுலேயே ஸர்வ பிரயத்தினங்களினுலும் பஸ்மாவைப் பெருதல்வேண்டுமெனவும் இதற்கன்யதாவாக நடப்பாரேயாகில் ரௌரவாதிநரகத்தை அடையவரெனவுங் கூறியிருத்தலால் இம்மஹிமை தங்கிய ஆதிசைவ பிராம்மணர்கள் திருக்கரத்தால் மஹாத்மாக்கள் யாவரும் சிவபிரஸாதம் பெருதல் உசிதமேயன்ருே—சங்கரர் முதலியவர்கள் வானபிரஸ்தத்திற்கு மேலான துரியமாம் ஸன்யாஸி ஆசிரமத்திலுள்ளவருதலின் கிரஸ்ததர்மமுடைய ஆதிசைவர் விபூதி பிரஸாதங் கொடுத்தல் கூடாதெனின் ஸன்யாஸம்சைவஸன்யாஸம் வைஷ்ணவஸன்யாஸம் மென இருகூருய் நிற்றலின் சுத்தசிவ ஸாக்ஷாத்கார சிவதர்மணீ தீக்ஷாஸம்ஸ்காரதுரீயத்வமிவற்கில்லையாதலின் வைஷ்ணவம் சைவமென்னும் ஸமயத்தாற் குறிக்கப்பட்ட இருதிரத்துஸன்யாஸமும் இவற்குடன்பாடற்ற

நாகும் ஸமயத்தால் மேம்பாடடையாததும் கேவலம் வேதாந்தத்தால் ஜீவஞானம்பெற்று யாவத்கர்மத்தையும் பரித்யஜித்து வேதோக்தமான பூணல் குடிமி எழந்து கர்மப்பிரஷ்டராய் நிற்குமிவர்களை துரீயாசிரமீ எனவும் ஸன்யாஸி எனவுங்கூருதல் தகுமோ ஸன்யாஸமும் பிரும்மசர்ய கிரஹஸ்தவானப்பிரஸ்தஸன்யாஸமென்னும் நான்காவதான ஆசிரமமுடையதாதலின் இவை ஆசிரமபேதமான தர்மங்களேயன்றே இவற்றிற்குவேதோக்தமான பூணல் குடிமி காயித்திரி முதலிய ஸத்காரியத்தில் பங்கம் வருதல் கூடுமோ வருணஸம்ஸ்காரத்தில் காயத்திரியைவிட உயர்ந்த மந்திரம்வேதத்திலேயேயில்லையாதலால் அவற்றை கைவிட்ட இவர்கள் பிராம்மண பிருஷ்டருவார்—வேதோக்தஸம்ஸ்காரமாகிய பூணல் குடிமி முதலியவை பரித்யாகமாவதால் வேதவிஹித கர்மாக்களை பரித்யாகஞ்செய்தவர் அவைதிகராவர்கள் இவ்வாறு வைதிகபிரஷ்டராயுள்ளவர்களை ஸன்யாஸி எனவுந்துர்யாசிரமி எனவுங்கூருதல் கூடுமோ ஆசிரமத்தை அதிக்கிரமித்தவிடத்தில் காயித்திரி நீங்குதல் கூடுமெனின், பிரும்மசர்யத்தை அதிக்கிரமித்த கிரஹஸ்ததர்மத்தில் காயித்திரி நீங்காதிருத்தலாலும் கிரஹஸ்தத்தை அதிகிரமித்த வானபிரஸ்தத்தில் காயித்திரி ஆசிரமாதீதத்தில் நீங்காதிருந்ததுபோல் ஸன்யஸித்தலினும் காயத்திரி நீங்கக்காரணமில்லை ஸன்யஸித்துள்ளோர்க்கு பிரணவ ஜபமேவிசேஷமெனக் கூறியிருத்தலால் காயித்திரிநீங்கிவிடுமெனின் பிரணவத்தைமாத்திரம் ஜபம்செய்பவரினும் பிரணவம்காயித்திரி இவ்விரண்டையுஞ்சேர்த்து ஜபிக்கும் பிரும்மச்சாரியே விசேஷமெனக் காணப்படுதலால் பிரும்மசர்யத்தில் கிழிட்டஸ்ரமான்யறை துரியாசிரமி எனக்கூருதல் கூடாது பிரணவம் ஸன்யாஸிக்கே யுறித்தானது மற்றோற்கு கூடாதெனின் சூத்திரரிற்கு மேலிட்ட வைச்யர்முதல் பிராம்மணபர்யந்தம் பிரணவாதிகாரமுடையாரென்க் கேட்ப்படுதலால் ஸன்யாஸிகளுக்கு பிரணவத்தை ஸர்வமான்யமாய் விடப்பட்டதென்னுஞ்சொல் ஏறுது இவற்றால் இவர்களை ஸன்யாஸிஎனவுந் துரியாசிரமிஎனவுங் கூருதலடாது பின்னை வேதங்களில்

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾
𑌰𑍍𑌥𑌾𑌃 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌯𑌤𑌯𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌵𑌾𑌃 𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋
𑌕𑍇𑌷𑍁 𑌪𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌪𑌰𑌾𑌮𑍃𑌤𑌾𑌃 𑌪𑌰𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇

என்னுஞ் சுருதிவாக்கியத்திற்குப்பொருள் [illegible] [illegible] ஸ்ருதி: வேதமென்னுஞ் சொல்லிற்கு பிரணவமெனவும் அந்தமென்பதற்கு நாதமெனவும் இவ்விரண்டுங் கூடியுள்ளதை நிச்சயித்தறிவதே வேதாந்த ஜன்யஞான மெனவும் சுத்தஸத்வா என்பதற்கு ஜிதேந்திரியத்வமுடைய சிவதீக்ஷாதி பரஸம்ஸ்காரத்தால் நிர்மலாத்மாவாய் பிரும்மலோகே பிரும்மபிலமாகிய ஸதாசிவபுவனத்தில் சிவனை ஸாதாரணமாய் அடையும் பொருட்டு பெரிதான ஸதாசிவ சரீரமாம் அந்த புவனத்திலிருந்து பராந்தகாலே பரா உன்மனையின் அந்த காலத்தில் லயகாலத்தில் ஸந்யாஸயோகாத் அகாரம் முதலிய அதிஷ்டாக்களை செவ்வையாக வைத்து சேர்ந்து பராமிருதாத் பரசிவ ஞானத்தினால் ஆத்மாவை சிவபெருமானிடத்தில் ஸம்யோஜித்தால் ஸம்ஸாரபாசம் விடுமென்பதிதன் கருத்து. இவற்றுள் பிரணவம் முதல் நாதபர்யந்தமானது வேதாந்த ஜன்யஞான மென்பது சுருதிமுகத்தால் வெளிப்படுகின்றது பரசுருதியிலேயோ [illegible] என்னும் வாக்கியத்தால் அகாரம் உகாரம் மகாரம் பிந்து அர்த்தசந்திரன் நிரோதி நாதம் நாதாந்தம் சக்தி வியாபினி ஸமனை உன்மனை என பன்னிரண்டு ஸ்தானம் மெய்நூல் வழி விளங்குதலால் அகாரமுதல் நாதபர்யந்தமான ஸ்தானம் வேதாந்த ஜன்யஞான

ல்லை எனவும்-வேதாத்யயனத்திற்கு ஆதிசைவர்கள்-அனர்கரெனவும்-ஆகமம் சுத்ததாந்திரீகமென்றும் ஆதிசைவன் அனேக ஜன்மாக்களில் நல்ல கர்மாக்களைச்செய்து வைதிகஸ்மார்த்தகுலத்தில் ஜனித்து அத்வைதமதஸித்தாந்தப்படி ஸ்வானுஷ்டானத்திற்கு வந்தாலொழிய மோக்ஷங்கிடையாதென்றும் இதற்கு ஸமாதானம் எவருவது சொல்லமுடியுமாவென்றும் இறுமாப்பெய்தி திரிகிறாரென்றும் காளயார்கோவில் ஸ்வர்ணகாளீசுவரக்குருக்களய்யாவிம்மரவி·நகவுயில் எழுதியுள்ள ஆப்தலிகிதத்தால் தெறியவந்தது. தத்காலம் கோவிலூருக்கு வந்த மஹானுபாவர்களான கும்பாபிஷேகத்தில் பட்டுக்கறைச்சோமனுடுத்தித் திரியவிரும்பிய குருக்கள்கள் எங்கே தூங்குகிறார்-நகரத்தார் சிவாகமத்தில் அபிஞ்ஞர் இன்னாரென தேர்ந்தெடுக்காதுசெய்த சிவாபச்சாரமேயன்றோ நாத்திகஸன்யாஸி உருக்கொண்டு-சிவம்-சிவாகமம்-சிவதர்மம்-சிவர்ச்சாரியர் முதலிய சிவநிந்தை செய்யப்புறப்பட்டு நிற்கின்றது. ஒவ்வொரு கும்பாபிஷேகங்களினும் சிவாகமஞ்யர்பலரும் ஒருங்கு கூடி கிரியாபிரவர்த்தகங்கள் வகித்து ஸத்கார்யம் புரிவரேல்-இன்னாத்திகர்தலை நீட்டிவாழ்தலெங்கனம் இவை நகரத்தார் ஊகித்தறியாக்குற்றமென்பதிற் றடையில்லை இது நிற்க நமதுபௌத்த ஸன்னியாசியைச்சிறுதுற்றுனோக்கப் புகுவோமாக-ஓய் நாத்திகஸன்னியாஸியே-சிவாகமம் புராணத்தைக்காட்டினுந் தாழ்ந்ததென்பது எதினால் கூற வெளிவந்தீர்-சங்கரஸம்ஹிதையில் ஆகமஸ்ய மத்யே ஸ்காந்தம் ... -என்னும் வாக்கியத்தால்-சிவாகமமாகிய கிரியினுடைய மத்யத்தில் அமிருதம் பிரவர்கித்துள்ளதில் கொஞ்சமெடுத்து இந்த ஸ்காந்தபுராணத்தைச் செய்கிறேனென ஸ்காந்தபுராணங் கண்டோக்தியாய் கூருவதால் புராணத்திலுந் தாழ்ந்தது சிவாகமம்-என இச்சிவனிந்தகபாஷண்ட ஸன்யாஸி கூறுவதை புராணங்களே ஒப்பாது. ஓய் பாஷண்டஸ்வரூபநாத்திக ஸன்யாஸியே-ஈசானஸ்ஸர்வவித்யாநாம்-என வேதம் உத்கோஷிக்கின்றபடியால் ஈசானமுகத்தினின்று வெளிவந்தவித்தையாதென்பதாய் உற்றுநோக்கப்புகுவீராக-ப்ரணவாத்யா மஹாமந்த்ரா வித்யா காமாத்யக்ஷராணிச | ஶிவஜ்ஞாநாநி வித்யாநி காமிகாதீநி ... | ஶ்ரீமதீஶாநவக்த்ராத்ஸம்பவம் ... | என்னும் அகஸ்திய

ஸம்ஹிதா வாக்கியத்தால் பிரணவாதி மஹா மந்திரங்களும் அகாராதி அக்ஷரங்களும் சிவஞான மயமாம் காமிகாதி திவ்யாகமங்களும் சிவபெருமான் ஊர்த்வமுகத்தில் தோற்றியதென்னும் பிரமாணத்திற்கு நீவிர் என்செய்வீர் - वेदमो- द्वे विद्ये वेदितव्ये इति ह स्म यद्ब्रह्मविदो वदन्ति परा चैवापरा च | என்னும் வாக்கியத்தால்-இரண்டு வித்தைகளையும் அறியவேண்டுமெனவும் பிரும்ம வித்துக்களாயுள்ளோர் இவ்வாறே அறிகிறார்களென்றும் அது பரம் அபரமென இருகூறாய்நிற்குமென்பதால் வேதமொன்றே பிரமாணம் சிவாகமம் அப்பிராமாண்யமெனக் கூறுபவர்வாயில் வேதம் தெள்ளுமண் கொட்டி நிறைப்பி இருக்கின்றது. இதுமட்டோ—तत्रापरा ऋग्वेदो यजुर्वेदः सामवेदोऽथर्ववेदः शिक्षा कल्पो व्याकरणं निरुक्तं छन्दो ज्योतिषमिति- अथ परा यया तदक्षरमधिगम्यते-என்னும் வாக்கியத்தால்ருக்யஜுஸ்ஸாம அதர்வணம் முதலிய வேதம் நான்கும்-சிக்ஷை முதலிய வேதாங்கம் ஆறும் அபரவித்தையென தன்னை தாழ்த்தி தனக்கு மேலிட்டபர வித்தையொன்றிருப்பதாய் வேதங்கூறியதற்கு நீரென்செய்வீர்-இங்ஙனம் வேதத்தின் கர்மகாண்டம் அபரமெனவும்-ஞானகாண்டம் பரமெனவுஞ் சில அவிவேகி பொருளுரைக்க முந்துவர் வேதம் நான்கும்வேதாங்கமாறும் ஒருங்கே அபரமென கழித்திருப்பதால்இதில்கர்மஞானப்பிரதியாத்தியங்கூருதல் விவேகிகளுக்கழகன்றும் இவற்றால் ஸ்ரீநீலகண்டர்-वयं तु वेदशिवागमयोर्भेदं न पश्यामः वेदोऽपि शिवागमः स त्रैवर्णिकविषयश्च सर्वविषयश्चेति वेदः त्रैवर्णिकविषयः सर्वविषयस्त्वन्यः-என்னும் வாக்கியத்தால் வேதசிவாகமங்களுக்கு பேதங்காண்கிலோம் வேதமே சிவாகமம்-இவை பிராம்மணர் முதல் மூன்றுவர்ணத்தார்க்கு உரியதும்-பிராமணர் முதல் ஸகலவருணிகளுக்குறியதுமாய் வேதமிருகூறாய் நிற்றலின்-வேதந்திரியிவர்ணிக பரமும்-சிவாகமம் ஸர்வவிஷய பரமுமாய் முடிப்புற்றிருத்தலின்-ஸர்வவிஷய பரம்ஞானே கநிஷ்டமுடையதுபற்றி பரவித்தை ஈதென்பதை இனியாயினுந் தெளிந்துய்வீராக-இவ்வாறுள்ளவிஷயம் பலவற்றையும் இவவேதாகமதாரதம்ய முகவுரை தொடங்கி

கிரிவாய் விமர்சித்து தீர்மானித்துள்ளோமாதலால் ஆங்குற்று நோக்கி ஸந்தேகநிவிர்த்தி செய்து கொள்வீராக—ஓ நாத்திகஸந்யாஸியே-பஞ்சாக்நிவித்யாதிஷ்டா தேவிஷ்டிஸம்ஹவந்தி என்னும் சுருதிவாக்கியத்தில்பஞ்சாக்னி வித்தைகளில் உபாஸிப்பதற்கு உசிதமாய்க்கூறப்பட்டிருக்கின்றது. என்றதால் நீர்சொல்லும் அபரவித்தையாகியருக்காதி வேதங்களில் தக்ஷிணகார்ஹபத்திய ஆஹவநீயம் முதலிய அக்னி மூன்றேயன்றி வேறன்றே மீந்துள்ள இறண்டக்னிக்கு பெயர் யாதென்பதை எண்டெடுத்து விளக்குவீராக—இவற்றால் பஞ்சாக்கினிவித்தை சிவாகமமென்பதை வேதமே சுட்டியுணர்த்தியது-ஓய் நாத்திகஸந்யாஸியே சைவமதமே வேதத்தில் கூறவில்லை அத்வைதமதந்தான் கூறியுள்ளதெனவாய் வம்பாடக்கற்றீர்-அதர்வசிரஸில்-த்ருஷ்ணாம்ஸிகா ஹேதாஜாநுஸ்த்வக் ரூபம் ஸர்வம் ஸ்வரூப லோகாவயிகவா தமோ தேவாஸ்ரவணக்கவ ஆஹரோ ரூபம் ஸாஷ்டம் தேவபராணம் ஐஷஷ்டிஜம் தவஸாநியஸ்து தவ்ருதநேதஸ் பாஶுபத ஷஷ்டி- இதற்கேற்பகூர்மபுராணத்தில்-விதிஸ்தம் ஹியாவ தேவதேவ்ருதம் பாஶுபதம் ஸாக்ஷாத் | மஹாபாதகஸம்ஹாரம் ஸங்க்ஷேபம் வேதஸாரம் விமுக்தயே | நைஷ்டிகாவாஸதா ஹாஸாரா: ஸேவநீயோ முமுக்ஷுபி: | என்னும் வாக்கியத்தால் வேதசாரமாயுள்ளபாசுபத விருதத்தை தெரிவிக்கும் ஆகமந்திரங்கள் முமுக்ஷுக்களால் ஸேவிக்கத்தக்கதென கேட்கப்படுவதால் பசுபதி ஸம்பந்தமான சைவஸமயம் வேதத்திலேயே கூறியுள்ளதாதலால் சைவமதமேயில்லை எனக்கூறிய இவர் உன்மத்தஉரை எங்ஙனங்கனம் பெரும்-இப்பித்தர் அத்வைதமென்றதால் சைவத்திற்கு வேறான பிரும்மவாதமென்ன அகங்கரித்தெழுகின்றார்—ஶிவமத்வைதம் ஶாந்தம் சதுர்த்தம் மந்யந்தே - எனவும் விஶ்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:-எனவும் ஏக ஏவ ருத்ரோ ந த்விதீயாய தஸ்தே-எனவும் ஸ்வமஹிம்நோ ஜ்யோதிஷா வ்ருத: | தேவா ஹ வை ஸ்வர்க்கம் லோகமாயந் | தே தேவா ருத்ரமப்ருச்சந்து-எனவும் த்யாயீத ஈஶாநம் ப்ரத்யாயீத - ஶிவ ஏகோ த்யேயஶ் ஶிவங்கர: ஸர்வமந்யத் பரித்யஜ்ய ஸமாப்தாயர்வஶிகா-எனவும் ஈஶ்வரஸ்ஸர்வ ஶிவா நாராயண ஸர்வ ஶிவ ஏவ கேவல: - என

வும்-ஸோத்⁴வந: பாரமாப்னோதி தத்³விஷ்ணோ: பரமம் பத³ம்-எனவும் த்⁴யாத்வா முநிர்க³ச்ச²தி பூ⁴தயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத்-எனவும்-காரணந்து த்⁴யேய:-எனவும்-ஜ்ஞாநநிர்மத²நாதே³வ பாஶம் த³ஹதி பண்டி³த:-எனவும் விவிக்ததே³ஶே ச ஸுகா²ஸநஸ்த²: ஶுசி: ஸமக்³ரீவஶிர:ஶரீர:| அத்யாஶ்ரமஸ்த²: ஸகலேந்த்³ரியாணி நிருத்⁴ய ப⁴க்த்யா ஸ்வகு³ரும் ப்ரணம்ய| ஹ்ருத்புண்ட³ரீகம் விரஜம் விஶுத்³த⁴ம் விசிந்த்ய மத்⁴யே விஶத³ம் விஶோகம் | அசிந்த்யமவ்யக்தமநந்தரூபம் ஶிவம் ப்ரஶாந்தமம்ருதம் ப்³ரஹ்மயோநிம் | தமாதி³மத்⁴யாந்தவிஹீநமேகம் விபு⁴ம் சிதா³நந்தமரூபமத்³பு⁴தம் | உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபு⁴ம் த்ரிலோசநம் நீலகண்ட²ம் ப்ரஶாந்தம் | த்⁴யாத்வா முநிர்க³ச்ச²தி பூ⁴தயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் | எனவும் கூறியுள்ள சுருதி வாக்கியங்களால்-சிவபெருமான் அத்வைதர் சாந்தர் துரீயர்-என்பது வெளிப்படுகின்றது. விசுவத்திற்கதிகர் ருத்திரர் என்பதும் ருததிரரைத் தவிர இரண்டாவதான பதார்த்தமில்லை என்பதும் ஜ்யோதி ஸ்வரூபமான ஸ்வர்க்கத்திற்கு ருத்திரரே அதிபரென்பதும் சிவஸ்தானந்துர்யாதீதமாய் பிரதிபாதிக்கப்படுகிறதென்பதும் சிவபெருமானொருவரே தியானிக்கத்தக்கவர் மற்றவை பரித்யஜிக்கவேண்டுமென்பதும்-பகல் இராத்திரியில்லாதவரெவரோ அவர்சிவம் என்றும் விஷ்ணுவுக்கு மேலானபரமபதமான சிவஸ்தானமென்பதும் எல்லாத்திற்கு பரமகாரணமாயுள்ளவர் பரமேசுவரர் எனவும் அவரை தியானிக்கவேண்டுமெனவும் அவரை தியானித்தவர் பாசத்தை தகித்துமுக்தி அடைகிறார் என்றும்-சுத்தமானபிரதேசத்தில் சுகாஸனனாய் சரீரசுத்தியுடையவனாய் அத்யாசிரமஸ்தனாய் ஸகல இந்திரியங்களையும் நிக்கிரஹித்து பக்தியினால் தனது குருவை நமஸ்கரித்து ஹிருதய கமலத்தை அடைந்திருக்கிறதாயும் சுத்தமாயும் நினைக்கத்தக்கதாயும் துக்கரஹிதமாயும் அளவிறந்ததாயும் நிர்குணமாயும் நினைத்தற்கரிதாகிய உருவமுடையதாயும் நித்யமங்களமாயும் சாந்தஸ்வரூபியாயும் நாசமற்றவராயும்-பிரும்மயோனியாயும் ஆதிநடுவந்தமிலாதவராயும் ஒரே பதார்த்தமாயும் வியாபகராயும் சித்கனானந்தராயும் அரூபியாயும் ஆச்சர்யமுடையவராயும் உமையுடன் கூடினவராயும் மூன்று

கண்களையுடையவரும்-கருத்த கண்டத்தையுடையவராயும் சாந்தருமுள்ள பரமேசுவரரை தியானித்து முனிக்கூட்டங்கள் யிருளைப்போக்கி ஒளியை அடைகின்றாரென உபநிஷித் முதலிய பிரமாணவாயிலாய் வெளிப்பட்டு நிற்றலின்-சைவ ஸமயத்திற்கு வேறாய் அத்வைத மத மொன்றிருப்பதென்பதாய் நம்பிரச்சன்னபௌத்த ஸன்யாஸி கண்டுபிடித்து தேவகோட்டை நகரவெளியில் பிரஸங்கிக்க எத்தனித்ததுகற்றறியா மந்தமதிக்கும் பயன்படா• இத்தகயபுத்தியைத்தீட்டி விளக்குமாறுயார் கைப்பட்டு தோவறிந்திலம்-நம் பௌத்தர்-வேதங்களில் பிருமசப்தமெங்கனுங் கேட்கப்படுவதால் சிவத்திற்கு வேறாய் பிரும்மமொன்றுளதென பிரமித்து பிதற்றுகின்றார். பிரும்மமென்பது பெரிதெனப்பொருளாதல் பற்றி பெரிதான பதார்த்தங்களையுமுண்டுபண்ணுபவர் பரமேசுவரரே யாதலால் பிரும்மயோனித்வம் பரமேசுவரருக்கே என கைவல்யோபநிஷித் முதலிய வேதவாக்குக்கள் முறையிடுகின்றது. ஸமானேவ்ருக்ஷே புருஷோ நிமக்நோ நீசயா சோசதி முஹ்யமாந: । ஜுஷ்டம் யதா பச்யத்யந்யமீசமஸ்ய மஹிமாநமிதி வீதசோக-என்னும் சுருதிவாக்கியத்தால் ஜீவனானது அநாதியாய் மலத்தால் பந்திக்கப்பட்டு அந்த மலத்திற் கேற்பமாயா மயபெருகளே ப்ர சரீரத்தால் தாபங்களை அநுபவிப்பதால் ஜீவன். ஈசனாகான். இதினால் உபநிஷித்துக்களில் ஜீவனே அனீசனெனக் குறிக்கப்பட்டிருக்கின்றது. அநீசன் கிஞ்சிஞ் யனாதலால் தானே நீக்குதலறிதாம். இவற்றால் மஹாமோஹத்தால் பிணிப்புண்டு துக்கஸாகரத்தில் ஆழ்ந்துவிடும். ஸர்வானுக்கிரகமுடைய பரமேசுவர பிரஸாதத்தால் ஜீவன் துக்கனாசமடைகிறதென தெரியவருகிறதால் பரமேசுவரரே பிரும்ம ஸ்வரூபி என்பது தெற்றென விளங்கும். பரமேசுவரரைத் தவிர பிரும்ம மொன்றுளதெனக்கூறும். அவிவேகியை இவ்வேத வாக்குத்தாட சுத்தி செய்து விட்டது. இதுமட்டோ-ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீசநீசௌ -என்னும் வாக்கியத்தால் ஜீவேசுவர பேதமிரண்டுங் கேட்கப்படுதலின்-நம்பௌத்தஸன் யாஸிகிய ஹாரம் பல்லிளித்துக் கொண்டது•யவஷோ ஹஹ்ருதய குகாய: । தஸ்மிந்யதந்தஸ்தது பாஸிதவ்யம்

ஸெஷ்யஸா ந-என்னும் உபநிஷத் வாக்கியத்தால் ஆன் மாக்களது ஹிருதயகமல சிதாகாசத்தி லிருந்து யாவற்றையும் வசீகறித்து யாவற்றிற்கும் ஈசனுயுள்ளவன் என கூறப்படுவதால். இதுவும் நம்பௌத்தர் வாதத்தை பூர்வபக்ஷமாக்கியது. இவ்வாருள்ள ஞாயம் பலவற்றாலும், சைவமதம். அத்வைதமாயிருக்க-சைவ மதமேயில்லை-அத்வைதந் தான் உள்ளது—என்பது—தகப்பனை நீத்து-ஆண் குறியை தந்தை என்பதையொத்திருக்கின்றது. ஒய் புத்தரே-ஆண் குரியோடு கூடியவர் பிதாவா-அக்குறியை பிதா வெனக் கூறிக் கொள்ளுதல் உலகவழக்கமா-இதுபோல் அத்வை தப்பட்டு நிற்குவஸ்துவெது. சிவமேயன்றோ-அத்வைதஸ்வரூபி சிவமெனஸகல வேதங்களும். உத்கோஷித்து நிற்கின்றது. இஃ தன்றி-யதாவசெ்வதாகாஸம் வெஷ்டயிஷ்யந்திமா நவா:| ததாஸி வசெ்ஞாயதுஃக: வஸ்யாஞெ ஸவிஷ்யதி - என்னும் வாக்கியத்தால் ஆகாசத்தைப்போர்வையாகவுடைய பரமேசுவரனை எந்த மனிதன் அறியவில்லையோ அவன் இறுதியில் துக்கத்தை அடைகிறான் எனக்கூறப்படுவதால் நமது பௌத்த ஸன்யாஸிக்கு அன வரத நிரய துக்கமே உறிய ஸ்தானமாயிற்று- ஆகாஸ ஸரீரம் ப்ரஹ்ம-என்னுஞ் சுருதிவாக்கியத்தால் ஆகாசத்தை சறீரமாக உடையது பிரும்மமென வெளிப்படுகின்றது-யதாவசெ்வதாகா ஸம் வெஷ்டயிஷ்யந்திமா நவா:| ஆகாசத்தை தோல்போல் போர்த் திக்கொண்டிருப்பவன் பரமேசுவரரென வெளிப்படுவதால் சிவ பெருமானையன்றிபிரும்மம் வேறொன்றுளதென பிரமித்துக் கூரும் நமது புத்தருறைஉல்லங் கணப்பட்டொழிந்ததென்க- ஒய்புத்திரே-பிரும்மம் பரமேசுவரரென வேதஞ்சுட்டியுணர்த்தி யிருக்க சைவ மதம் பெரய் அத்வைதஞ்சறி எனக்கூறியனும் புத்தி கௌசல்யத்தை யாவர்மெச்சுவர் -ஒய் புத்தரே-நீர் ஆதி சைவர்கள் வேதாத்யயனத்திற்கு அனர்ஹர் என்றீர்-பின் யாரதி கார்ரி-னும்மவரை சூத்திரரெனஸ்மிருதி தூஷித்துனும் வாயில் மண் போட்டிருக்கின்றது - யாதெனில் ஜந்நநாஜாயதெ ஸூ ஸ்ரூ: கஸெ்ணாஜாயதெ ஜிஜ: என்னும் வாக்கிசத்தால் தூம்மவர் குஜன்ம சூத்திரத் வஞ்சாதிக்கப்பட்டு கர்மாவால்த் விஜத்வங் கூறப்பட்டிருக்கின்றது-ஜன் சூத்திரர்களுக்கு வேதத்தில் அதி

காரமும்-ஜன்ம பிராம்மணர்களுக்கு வேதத்தில் அனதிகாரமும் கூறுவதை விவேகிகள் ஒப்பார் சிவபெருமான் திருமுகத்தினின்று ஆதி சைவர்கள் வெளிவந்தவரென பரவித்தை கூறுவதால் சிவபெருமான் பிராம்மணராதல் பற்றி பிராம்மண தேவதைமுகத்தினின்று வந்தவர் ஜன்மாவால்பிராம்மணத்வஸித்தியும்-கர்மாவால் சிவத்வமும் சித்திக்கப்பெற்றுத் த்விஜத்வ ஸித்திபெற்றிருப்பவராதலின்-இவர்கள் ஜன்ம சூத்திரர் போல் வேதத்திற்கனதிகாரிகளாகார்கள். ஒய் புத்தரே சூத்திரற்கு கர்மத்தால் த்விஜத்வஸித்திவருமென்பதை வேதமொப்பாதே-[illegible]-என்னும் சுருதி வாக்கியத்தால் ஜன்ம சூத்திரர்கள் அத்யயனஞ் செய்யக்கூடாதெனக் கூறியிருக்கின்றது-[illegible]-என்னுஞ் சுருதிவாக்கியத்தால்-வேதம் ஜன்ம சூத்திரர் காதுகேழ்க்கும்படி சொல்லுகிறவன் நாக்கை அருக்க வேண்டுமெனவும்-சூத்திரற்கு சொல்லி தரிக்கும்படி செய்தவன் சரீரச்சேதஞ்செய்யவேண்டுமெனவும்-கூறியிருத்தலால் இச்சூத்திரசப்தத்தை யாநீர் அன்வயித்துக் கொண்டீர்-னும்மையயன்றே அஸல் சூத்திரனாய் வேதங்கழித்திருக்கின்றது-ஸ்மிருதியோ-னும்மவற்குஅத்யயனஅத்யாபகயஜனயாஜனதானப்பிரதிக்கிறஹாதி ஆறு கர்மாக்களும்-செய்யக்கூடாதெனக் கண்டித்திருக்கின்றது ஷட் கர்மாச்களும் பிராம்மணபரமாய் முடிதலால் னும்மனோர் பிரவேசிக்கின் தேவலகத்வ தோஷம் வந்துவிடும்-ஏனெனில்-பரார்த்தத்தில் உப ஜீவிப்பவர்தேவலகர் எனவும்-இத்தேவலகர்களை ஸத்கார்யத்தில் வர்ஜிக்கவேண்டுமெனஸ்மிருதி நிஷேதித்திருத் தலின்-தானப்பிரதிக்கிற ஹாதிகள் பரார்த்தமாதல் பற்றி இஷ்ஷட் கர்மத்தில் ஜன்ம சூத்திரர்களை ஒதுக்கப்பட்டிருக்கின்றது-பிராம்மணர்களாயிருந்தால் தானப்பிரதிக்கிரஹாதிகளுக்கு தோஷமுண்டாகா. இதுமட்டோஸ்மிருதி நம்பௌத்தரைப்போன்ற ஜன்ம சூத்திரர்களுக்கு கோமாம்ஸம் பிதிர்கிருத்தியங்களில் புசிக்கும்படி சிறாத்த நியமம் கூறப்பட்டிருக்கின்றது-ஏபுத்தரே-ஸ்மிருதி னும்மனோர் யாவரையும் கேவலங் கர்ம வாதிகளாய் சிவத் வேஷியாய் நாத்திகருய்

ஓதிக்கி ஸத்கர்மாக்களில் வர்ஜித்திருக்கின்றது- யே வீரபத்ரஶப்தா: ஶிவபக்திபராங்முகா: । ஸம்ஹாரருத்ரதேவேஶ யேऽஸூயயா நதீக்ஷிதா: । தேஷாம் நஹி ப்ரஸாத: ஸ்யாத் கேவலம் கர்மலக்ஷயம்-என்னும் வாக்கியத்தால் வீரபத்திர மூர்த்தியால் சபிக்கப்பட்டவர்களும் சிவபக்தியில் பரான்முகராயிருப்பவர்களும் சிவபெருமானை நீத்து அன்யரை உபாஸிப்பவர்களையும்சிவதீக்ஷை பெராதோரும் இன்னல்வர்களுக்கும் சிவனுடைய பிரஸாதங் கூடாதெனக்கூறியிருத்தலால் கேவலம் கர்மவாதிகளை வீரபத்திரர் சிவஞானமல்லாது போககசபித்திருப்பதால் ஜன்மசூத்திரர்களாகிய னும்மவர் சாபகிரஸ்தராகவு மன்றோ கொள்ள வேண்டிவரும்- இக்கருத்தை உட்கொண்டேயன்றோ ஸ்மிருதி கேவலம் அக்னிஉபாஸனையை மாத்திரமே னும்மனோற்குஸத்கர்மாவாய் விதிக்கப்பட்டுள்ளது-சிவோபாஸனையான சுருதிநிஷ்டதர்மங்களை ஸ்மிருதிமறந்துங் கூறினதில்லை பஸ்மோத்தூளன திருபுண்டிதாரண உருத்திராக்கதாரணபதி பசுபாசவஸ்து நிர்தேசசிவலிங்கார்ச்சன பிராஸாதாதி மந்திரம் முதலிய பரதர்மங்கள் வேதாகமவாயிலாய் விளங்கப்படுதலின் ஜன்மசூத்திரர்களுக்கு இப்பரதர்மத்தை ஸ்மிருதி பரிந்தூட்ட முயன்றதின்று-ஸ்மிருதியோ அக்னிஹோத்திரத்தை கைவிட்டால்பிரஷ்டனுவானெனவற்புருத்திக் கூறியதால் ஸ்மிருதியில் கூறிய-வைசுவாநராக்னி கேவலஞ் சாடராக்கினிபரமான ஜடத்ர்மமுடையதேயன்றி சேதனத்வமுடையதன்று-யஸ்த்வேதமேவம் ப்ராதேஶமாத்ரமபிவிமாநமாத்மாநம் வைஶ்வாநரமுபாஸ்தே ஸ ஸர்வேஷு லோகேஷு ஸர்வேஷு பூதேஷு ஸர்வேஷ்வாத்மஸ்வந்நமத்தி -என்னும் சாந்தோக்யோபநிஷித் வாக்கியத்தால் வைசுவாநராக்னியேஉபாஸிக்கத் தகுந்தது சிவனுர்க்கு விசேஷத்வங் கூறவில்லை இவற்றால் ஸ்மிருதியும் வைசுவாநராக்கினிக்கு விசேஷத்வங்கூறிற்றென்பாருயின்-அயமக்நிர்வைஶ்வாநரோ யோऽயமந்த: புருஷே யேநேதமந்நம் பச்யதே யதிதமத்யதே தஸ்யைஷ கோஷோ பவதி யமேதத்கர்ணாவபிதாய ஶ்ருணோதி ஸ யதோத்க்ரமிஷ்யந்பவதி நைநம் கோஷம் ஶ்ருணோதி-என்னும் வாக்கியத்தால் வைசுவாநராக்னி ஜாடராக்னி பரமாய் காணப்படுதலின் இவைச் சேதனோபாஸ்தை

யாகா- ஸஹோவாச ... யோஷ்வா ... வைச்வாநர என்னும் வாக்கியங்களால் வைசுவாநரமென்னும் சப்தத்திற்கு இந்தஇடத்தில் பிரஸித்தமிருக்கின்றபடியால் ... வைச்வாநர ... என்னும் வாக்கியத்தால் இஷ்டி தேவதையால் பலங்கொடுப்பதாய் கூறுவதால்இதைத்தவிரச் சேதனத்வமுடையது வேறொன்றில்லை எனின்- ... வைச்வாநர ... என்னும் வாக்கியத்தால் பரமேசுரருக்கு அஸாதாரணமிரும மசப்தாதிகளினால் விசேஷித்திருக்கின்றபடியால் இது ஜடரூபமான ஜாடராக்னி பரமாகாது இவற்றாலும் பரமேசுவரரே உபாஸ்யரென்பது திண்ணம். ... என்னும் வாக்கியத்தால் பரமேசுவரருக்கு ஸ்வர்க்கம்முதல்பிரதிவிபர்யந்தமான ரூபமென்பது கூறப்படுகிறது. ... வைச்வாநர ... என்னும் வாக்கியத்தால் பரமேசுவரரையே சுட்டப்படுகின்றது - ... என்னும் வாக்கியத்தால் மூன்றக்னி நிரூபிக்கப்பட்டு அங்ககல்பனை கேட்கப்படுதலின் ஜாடராக்னிபரமான பிராணாஹுதியின் பொருட்டாமன்றி இவை தேவத்வமுடைய முக்தியின் பொருட்டன்றாம். ... என்னும் வாக்கியத்தால் அக்னிஸ்வரூபியாகிய பரமேஸ்வரர் ஸந்தோஷிக்கின்றார் எனக் கேட்கப்படுதலால் சிவாக்னி உபாஸனையன்றி கேவலம் ஜாடராக்னி பரமான வைசுவாநராக்னி பிராயயுபாஸ்னை யாகாது. இவை ஜன்மசூத்திரத்திற்கே உரியது. அக்னிஹோத்திர ஸாமான்யம் விசேஷமென இருகூறாய் நிற்றலின் ஸாமான்யம் வைசுவாநராக்னி பரமும் விசேஷம் சிவாக்னி பரமாய் நிற்றலின் ஸர்வபூதாந்தராத்மா பரமேசுவரரேயாதலால் வைசுவாநராக்னி அந்தர்யாமி பரமேசுவரரென்பது புலப்படும், இவற்றால் சிவாகாரயான

சிவாக்னியே விசேஷமென்பது திண்ணம். இக்காரணம்பற்றிஜன்மருத்திரர்கள் ஜாடராக்னி உபாஸகரும்-ஜன்மபிராம்மணர்கள் சிவாக்னி உபாஸகருமாய்க் காணப்படுதலின் அத்தியயனயோக்யர்யாவரென்பதை உற்றுணர்ந்தடங்குவீராக-ஓப்புத்தரே நீவிர் ஸ்மிருதியைமாத்திரமே பிரமாணமாகக் கொண்ட ஸாமான்யர் சிவத்விஜர் வேதசிவாகமங்களைப் பிரமாணமாகக் கொண்ட விசேஷர் வேதாகமம் ஆதிசைவ பிராம்மணர்களுக்கு சொந்தப்பொருளென்பதையும் னும்போன்ற ஜன்மருத்திரர்க்கெங்ஙனம் விளங்கும் சுராமாம்ஸத்தை ஸத்காரியமாய்க்கொண்டுழலும் ஓப் அசைவரே மெய்ச்சமயமாகிய சைவஸமயத்தையும் சிவாச்சார்யர்களையும் நிந்தித்தால் னும்மை விசேஷரென மதித்து மறியாதிசெய்வாரென அகந்தை மேலிட்டு வெளிப்பட்டிருக்கின்றீர் ருக்வேதத்தில்சிவத்தைநீத்து அன்யதைவத்தை உட்கொண்டவன் மலத்தையுட்கொண்டவனுவான் எனக்கூறியிருத்தலால் இப்பதிதர்குற்றவியாதிக்கு மலமன்றோ அவுஷதமாய் வேதங்களால் பரிந்தூட்டப்பட்டிருக்கின்றது இதுமட்டோ - ஶிவே ஶிவாக³மே சைவ ஶைவே ஶிவபரிக்³ரஹே । [illegible] ந [illegible] ॥ என்னும் வாக்கியத்தால் சிவபெருமானிடத்திலும் சிவாகமங்களிடத்திலும் சிவதர்மங்களிடத்திலும் சிவாச்சார்யர்களிடத்திலும் த்வேஷபுத்தியுள்ள நரனைபரித்யஜிக்கவேண்டுமெனக் கூறியிருத்தலால் நப்பவுத்தர் ஸாதுக்கள் கூடிய ஸபையில் யிருக்கத்தக்கவரா-ஓப் புத்தரே [illegible]-என்னும் வாக்கியத்தால்குருவினாலேயே அறியத்தக்கது குருவன்றிஅறிதல் கூடாதெனவேதம் வியவஸ்தாபனஞ் செய்திருத்தலால் னுங்குலத்தார்க்கு குருக்களென உலகப்பிரசித்தியாயுள்ளவர் யாவருளர் பரமவைதிகசிகாமணிகளாகிய ஆதிசைவ பிராம்மண ஜாதியாருக்கே குருக்கள் ஜாதி என வேதாகமவாயிலாய் உலகபிரஸித்தியாய் நிலைநின்றுகொண்டிருக்க குருவுக்கு நாமம் போடநினைந்து வெளிப்பட்ட னுப்புத்தியை தீட்டிவிளக்குமாறு யார் கைப்பட்டதோவறிந்திலம் ஓப் புத்தரே குரு குலோத்பவர்களுடைய குருக்கள் ஜாதியாருக்கு ஜன்மருத்திரர்களாகியனும்போலியோர் வேதாத்தியன வியவஸ்தாபனம் செய்ய வெளிப்பட்டது னும்மவரணத்தி

ற்குத்தக்க காரியமன்று னும்மைவேதமென்னும் சப்தத்தையே உச்சரிக்காவண்ணம் ஜன்மசூத்திரராய் ஸ்மிருதிகழித்திருக்கபங்தியில் னுழையாதே யென்றால் எலிபீத்த லென்பவன்போல் வேதாத்யயன வியவஸ்தை செய்யவந்தது னுமக்குற்ற அறியாமையேயன்றோ ஓய் புத்தரே ஸர்வாவாஸம் ஸ்தாநம் வஸம் நந்திமுக்தம் | ஸர்வவேதாந்தவிஜ்ஞேயம் பரம் ப்ரஹ்மண்ய மீசம் ப்ரஹ்மப்ரஹ்ம பரம் ஸ்வாமி ஹ்ருதயாப்ஜவசஸ்திதம் | ஸஹாய பார்வத்யா ஸார்த்தம் தேவதேவம் தயாகரம் | என்னும் வாக்கியத்தால் பரஞ்சோதிரூபமாய் ஹிருதயபுண்டரகசிதாகாச மத்தியையில் யிருப்பவருயும் ஸ்வபாவிகமாய் பாபத்தை தகித்து முக்தியைகொடுக்கத்தக்க பரமசக்தியோடுகூடிய பார்வதீ நாதரான பரமேசுவரரை குருமுகத்தாலறியத்தக்க தெனக்கூறி யிருத்தலால் இங்ஙனமுற்ற குருத்வசப்தத்திற்கு யாது கெதிதேடுவீர் ஸன்யாசியே ஜகத்குருவாவாரெனின் ஸன்யாஸியை-ப்ரஹ்மசர்யவனஸ்தானாம் ஸந்ந்யாஸிநாம் ஸர்வதா க்ருஹஸ்த:-என்னும் வாக்கியத்தால் கிரஹஸ்தனுக்கே குருத்வங் கூறப்பட்டு ஸன்யாசியை பரித்யஜித்திருக்கின்றபடியால் நம்புத்தருறை வெற்றுறையாகும் சங்கராச்சாரியார் முதலினோர் ஜகத்குருக்களாய் கொண்டாடப்பட்டிருத்தலால் குருத்வமவருக்குக் கூடுமெனின் சங்கராச்சாரியார் குருகுலோத்பவவம்சமல்லாது தனக்குப்பின்வேறொருவரை ஸ்வீகரித்துக் கொள்வதால் குருகுலோத்பவ மிவற்கில்லை என்பதுதெற்றென வெளியாகின்றது இதுவுமன்றி-குகாரோ ஹ்யந்தகாரஸ்ஸ்யாத் ருகாரஸ்தந்நிரோதக: । அந்தகாரநிரோதித்வாத் குருரித்யபிதீயதே-என்னும் வாக்கியத்தால் யிருட்டை நீக்கி ஒளியை கொடுப்பவர் குருவெனக் காணப்படுதலால் இருட்டே பொய்யென வாதிக்கும் மித்தியாவாதிகளுக்கு குருத்வஞ் சாறாத லெங்கனம் ஜகத்ஜீவன் பொய்பிரும்மந்தான் உள்ளதெனக்கூறு மிவர்களுக்கு ஜகத்குருத்வமென்பதும் பொய்யேயன்றே ஜகஜ்ஜீவே சுவரபேதம் முப்பொருளை யெர்ப்ப முடித்து கூருந்திருப்தார்த்த ஜன்யஞானமுடையசிவஞானிக்கன்றேஜகத்குருத்வம் உண்மை பொருளாம் இவற்றாலன்றே ஆதிசைவபிராம்மணர்கள் யாவரும் ஜகத்திலுள்ள யாவராலும் குருக்களெனக் கொண்டாடப்பட்டு வருகின்றார் வேதாகமங்களோ குருமுகத்தா

றிப்பத்தக்கதென வியவஸ்தாபனஞ் செய்துவிட்டது பரவித்தைகளிலே சிவத்விஜர்களுக்கே ஜகத்குருத்வஞ் சாதிக்கப்பட்டிருக்கின்றது ஸ்காந்தபுராணத்தில் [illegible] என்னும் வாக்கியத்தால் தாங்கள் லோக குருவாய் புஷ்பகிரி ஸந்தானத்தில் தோற்றிய மஹாத்மாவா யுள்ளவராதலால் துக்கத்தை யடைந்திருக்கின்ற இவர்களை சிஷ்யர்களாகக் கொள்ளவேண்டும் எல்லா பாபங்களும் நீங்கத்தக்க தங்களாலாராதிக்கப்படுகிற அமிருதேசுவரரை தெரிசிக்கச்செய்து அல்லிங்கத்திற்கு பரிச்சர்யாதி சிவகைங்கரியத்தை இவர்களை செய்யும் பொருட்டமைத்து எந்தகாலத்திலிவர்கள் துக்கசாகரத்தினின்று நீங்குகிறார்களோ அதுபரியந்தம் இவர்கள் மேல் கருணை வைத்து அருள்புரிவீர்களாக. தாங்கள் லோககுருவாதலால் இது செய்யவேண்டுவது தங்கள் கடமையாகும் எனக்கூறியிருத்தலால் சிவப்பிராம்மணர்களேஜகத்குருக்களென்பது ஸர்வசாஸ்திர ஸம்மதமாயிற்று. மந்தானகாளீசம் ஆமார்த்தகி புஷ்கிரி கோளகி ரணபத்திரம் முதலிய மடங்கள் சைவஸந்தான பரம்பரை யாதலின் சிவாச்சார்யர்களுக்கன்றே ஜகத்குருத்வஞ் சாதிக்கப்படும் சிவாச்சாரியர்களையன்றி ஏனையோற்கு ஜகத்குருத்வங் கூறியிருக்குமாயின் அவற்றை வேதத்தாலேனும் சிவாகமத்தாலேனும் புராணம் பதினெட்டாலேனும் புத்தரே ஈண்டெடுத்து விளக்க வெளிவருவீராக இவையன்றி புதிதாய் புதிக்கிய புதுநூல்யாம் பிரமாணத்திலங்கீகரிக்க மாட்டோம் அதுவும் வேதாகமபுராணேதிஹாஸாதி பிரமாணங்களாயிருத்தல் வேண்டும் ஓய்புத்தரே ஆதிசைவர்கள் வேதஸ்மிருதிவழித்தாய் முத்தியடைதல் வேண்டுமென வற்புறுத்தினீர் வேதமென்றது நத்தாங்கூடரிஹி எழுதியதைப்போலொருவாறு ஒத்துவிட்டது ஸ்மிருதியெனப்பின் சீர்தூக்கமுயன்றது விவேகக்குறைவாம் ஸ்மிருத்யாச்சாரம் கேவலம் கர்மடர்களுக்கேயன்றி உ

யர்ந்த சிவஞானமுடையபரிபாகிக்குஸ்மிருதி அனுத்தணையும்பய ன்படத்தக்கதோவேதார்த்தம்ஸ்மிருதிஎனக்கூறுவீராயின்வேதம் யார்முகமாய் வெளிப்பட்டது ஸ்மிருதியார் முகமாய் வெளிப் பட்டது வேதம் சிவபெருமானது திருமுகத்துதித்தது ஸ்மிரு தி மன்வாதிகளின் வாக்கு மன்வாதிகளும் க்ஷத்திரியாதி தர்மங் களான கோர்ட்டுவியவஹாரநிபந்தனைகளும் வேட்டையாடல் மா ம்ஸம் புசித்தல் முதலிய தர்மங்களும் ஆகாராதி சுகாதார விள க்கங்களையும் அவ்வவற்றிற்கனுகுண்யமான கர்மாக்களையும் அக் னி உபாஸ்தனையுங்கூறப்பட்டிருக்கின்றது ஒப்புத்தரே-னும் வா யில் முக்தியல்லாதிருக்க ஸ்மிருதி மண் போட்டிருப்பதை அறி யாது ஆதிசைவருக்கும் ஸ்மிருத்யுக்த அனுஷ்டானத்தால்முக்தி வறவேண்டுமென ஊத்தை வாயைத்திறந்து கூக்குறலிடுகின்றிர் ஸர்வஞ்யஞன பரமேசுவரர் கூறிய பதிவாக்காகிய வேதங்களுக் கு கிஞ்சிஞ்யராகிய ருஷிகள் அர்த்தஞ் செய்யததக்க வர்களோ செய்யதக்கவராயின் வேதத்தில் பசும்வதா வெனகூறி யிருப்ப தற்கு மாஸ்மபக்ஷணம் விதியெனக்கொள்ள வெளிப்படுவாரா வெளிப்படுவாராயின்-[illegible]-என்னும் வேத வாக்கியக்கருத்தைபூர்வபக்ஷமாக்கிவிடுகின்றது தக்ஷிண கார்ஹப த்ய ஆஹவனீயம்முதலியமூன்றக்னிக்கு ஸ்மிருதிவிசேஷங்கூறு கின்றது பஞ்சாக்னி வித்தைக்கு வேதம் விசேஷங் கூறுகின்றது வைச்வாநராக்னிவிசேஷமென ஸ்மிருதிகூறுகின்றது [illegible] எனவேதங்க ளில் பசுபதிசம்பந்தமான சிவாக்கினியே விசேஷம்பசுக்களாகிய ஜிவான்மாக்களுக்குபாச நிவிருத்தியைச்செய்து முக்தியடையச் செய்யுமென்பதால் சிவாகாரமற்றவைச்வாநராக்னிஜடராக்னிபர மான அசேதனத்வமுடையதாம் [illegible] என செதிக்கிஎடுத்த சிலையைப்பூஜி எனக்கூறிய வேத வாக்கிற்கு ஸ்மிருதி என்னபொருள் கூறியிருக்கின்றது உமாஸஹாயரான பரமேசுரரைஈர தியான பூஜாதி ஸத்கர்மாக்களை விதித்துள்ளவே

குவாக்கிற்கு ஸ்மிருதி என்னபொருள் கூறியிருக்கின்றது பஸ்ம ஜாபாலாதி ப்ரதிபாத்யமுடைய விபூதிஉருத்திராக்கதாரணாதிஸத்கர்மாக்களில் ஸ்மிருதி என்னபொருள் கூறியிருக்கின்றது பிராம்மிமுஹூர்த்தத்தில் எழுந்திருத்தல் வேண்டுமெனக் கூறிய ஸ்மிருதி இராப்பகல் அருபதுநாழிகையை என்னென்னமுஹூர்த்தங்களை நிர்ணயத்து எந்தெந்த ஸத்கார்யங்களை எந்தெந்த முஹூர்த்தத்தில் செய்யும்படி விதித்திருக்கின்றது ஸ்மிருதியில் விராட் புருஷனையன்றி உலகத்திற்குநிமித்த காரணன்வேறொன்றிலைஎனக்கூறப்பட்டிருக்கின்றது வேதசிவாகமங்களில்சிவபெருமானைநிமித்தகாரணமாய்கூறுவதால் ஹிரண்யகர்ப்பவாதவிராட் புருஷ ஸிருஷ்டியைக் கூறியதால் ஸ்மிருதி கேவல தந்திரமாயொதுக்கப்படும்ஸ்மிருதியும்ஸர்வஞ்யனாகியபரமேசுவரர் திருவாக்கன்றாதலால்வேத சிவாகமம்போல் பிரபல பிரமாணமாகாது ரிஷிகள்கிஞ்சிஞ்யராதலால் முற்றறிஞர்கூறியவேதத்திற்கு இக்கிஞ்சிஞ்யர்பொருள்கூறிமுடித்தாரென்பதும் விவேகிகள் கொள்ளற்பாலதன்று இவற்றால் ஸர்வஞ்யராகிய சிவபெருமான் திருமுகமைந்தினாலும் வெளிப்பட்டவேதாகமங்களே ஸத்பிரமாணமாகியமுதனூல் இதற்கு வழிநூல்புராணம் சார்புநூல் இதிஹாசம் இதிஹாசத்திலும்தாழ்ந்தது ஸ்மிருதி இந்தஸ்மிருதியில் ஸௌராமாம்ஸாதிகிருதுக்களை ஸத்கார்யமாய் முக்திபதத்திற்குச்சாதனமென்பதாய்பரிந்தூட்டப்பட்டிருத்தலின் இவை அஸௌராதிவியாமோஹார்த்தமாயொதுக்கப்பட்ட காபாலாதி கேவலதந்திரநிஷ்டமுடையதாம் காபாலர்பைரவோபாஸனையுடையவர் இவர்கள் அக்னி உபாஸனையுடையவர் இவ்விருதிரத்தார்க்குஞ் சீவஹிம்ஸைஸத்கார்யமாய்யிறுதியில்முடிபுற்றிருத்தலின்; இவ்விருதிறத்தாரையுமொன்றுகூட்டி யுவமிக்கமுயன்றதன்றி காபாலிகரைநோக்க இவர்களுக்கு தைவமேயில்லாது அக்னிஹோத்திராதிஜடதர்மமுடைய ஜாடராக்னி உபாஸகரேயாதலால் கேவலம் கர்மவாதிகளான நாஸ்திகரேயாவார்கள் ஒப் புத்தரே சிவாகமத்தை நிந்தித்து வேதத்தைபுகழ்ந்து ஸ்மிருதியை உயர்த்திப்பேசியதால் நும்மை வைதிகரென உலகினர் கொண்டாடுவாரென்னும் மமதைமேலிட்டு சிவாகமத்தை முதலில் நிந்திக்க யத்தனித்ததால்வேதமிவற்றுச்சார்பாமாறெங்ஙனம் ஸ்மிருதியைப் பின்னுபர்த்

தியதில் எமக்கு மிக்கபேரானந்தம் ஸ்மிருதியை இவர் புகழ்ந்து கூறியதன்றி ஸ்மிருதி இவறை ஜன்ம சூத்திரராக்கி பஸ்ம ருத்திராக்ஷசிவபூஜாபஞ்சாக்ஷர சிவாக்னி முதலிய ஸத்கார்யம் நீத்து ஹிம்ஸாபரமானயாகமே பரகதிஎனக்கற்பித்து அக்கினியைத்த்தவிர உபாஸனவஸ்து வேறொன்றிலதா யொதிக்கியிருப்பதை யிவரின்றும் மறிந்திலர் ஒப் புத்திரேசர்வஞ்யனன பரமேசுவரர் கூறிய வேதத்திற்கு அவரே அன்றோ பொருள் கூறவேண்டும் வேதத்தினது உட்பொருள் ஸித்தாந்தமே யன்றோ இவற்றால் வேத சிவாகமம் அபரம் பரமெனவித்தை இரண்டாய் பிரும்ம ஞானிகளுக்கு சிவபெருமான் வகுத்துக்கூறினர்-ஃ ஃ ... எனவும் ... எனவும் சுருதி இரண்டு பிரகாரமாய் வேதோத்பத்தி கூறியிருப்பதை இப்புத்தரரிவரோ- ... என்னும் வாக்கியத்தால் மஹானையும் பிரபுவையும் ஸத்வத்தில் பிரவர்த்திப்பிக்கரவராயும் நிர்மலமானபதப்பிராப்திக்குக்காரணராயும் ஈசராயும் நாசரகிதராயுமுள்ளவர் எனக்கூறியிருத்தலால் நாசரகிதமாகிய ஊருத்வமுகமாம் ஈசான முகத்திட்டோற்றிய சிவாகமங்கள் பரவித்தைஎன்பதை நப்புத்தரரிவரோ - ... என்னும் சிவபுராணவாக்கியத்தால் மனுஷ்யவாக்கியத்திலும் ருஷிகள் வாக்கியங்கள் விசேஷம் ருஷிகள்வாக்கியத்திலும்தேவதைகள் வாக்கியம் விசேஷம் தேவதைகள் வாக்கியத்திலும் பிரும்மாவின் வாக்கியம் விசேஷம் பிரும்மாவின் வாக்கியத்திலும்

விஷ்ணுவாக்கியம் விசேஷம் விஷ்ணுவாக்கியத்திலும் ருத்திரன் வாக்கு விசேஷம் ருத்திரன்வாக்கியத்திலும் சிவனுடைய வாக்கியம் விசேஷம் இப்படிக்கேமேல்மேல் விசேஷமும் கீழ்கீழ் தாழ்த்தியும் சிவாகமத்திற்கு விரோதமல்லாத சாஸ்திரங்களெல்லாம் பிராமாண்யம் விரோதமுள்ளது அப்பிராமாண்யம் எந்தெந்தசாஸ்திரங்கள் எவ்வளவுவியாபித்திருக்கிறதோ அவ்வளவு அதுவது களுக்கு பிரமாணமெனக்கூறியிருத்தலால் மன்வாதி மனுஷவாக்கியஸ்மிருதியை ரிஷி-தேவர்-பிரும்மா-விஷ்ணு-உருத்திரர் இவர்களுக்கதிக்கிரமித்துள்ள பசுபதிபரமேசுவரர்திருவாக்காகியசிவாகமத்தோடொப்பிடுதல்யாங்கனம். மன்வாதிகளை ரிஷிகளென்ச்சுட்டவெளிப்படினும் தேவவாக்கிற்கு தாழ்ந்தது ரிஷிவாக்கென்பதால் உயர்ந்தபிரமாணமாகாது காமிகாத்யாகமங்களுக்கு சிவபெருமானே கர்த்தாவென்பதை பாரதமும் வற்புறுத்திகூருகின்றது காமிகாத்யாமஹாநாஞ்ச யமாதேவோமஹேஸ்வரஃ । அஷ்டாதசபுராணாநாம் கர்த்தாஸத்யவதீஸுதா । என்னும் பாரதவாக்கியத்தால் காமிகம்முதலிய சிவாகமங்களுக்கு எப்படி மஹேசுவரர்கர்த்தாவோ அபபடியே பதினெண்புராணங்களுக்கும்ஸத்யவதீசுதராகியவியாஸரெனக்கூறியிருத்தலால் சிவபெருமான்வாக்கிற்கு மேலானது ரிஷிவாக்கென்பதை யாவரும் ஒப்பார் பௌஷ்கராகமத்தில் ஶ்ருத்யாக்ஞாபாலநேஷ்வாபி ஶிவஶாஸ்த்ராணிதுர்லபம் । வேதாந்தாமபிஸாரம் ஸித்தாந்தாதிசைஷ்டிகம் । ஶிவாக்ஞயாபிகத்யாஸஸ்த்ராம் தர்மாதம் ததாசிவம் । ஸர்வேஷாமபிஜ்ஞாநாநாம் ஸங்ஸாரமோசகம் । ஸகலவாதவிநிர்முக்தோ ஜ்ஞாநயஜ்ஞம்ஸமாசரேத் । ஶ்ருத்யந்தவர்ணிதம் பூர்ணம் ஸர்வஶ்ரேஷ்டம் புராதநம் । ஶ்ருதிபோதம் தத்ஸாரம் ஶைவமேதத்விசிந்தநம் ॥ என்னும்வாக்கியத்தால் சிவாகமங்கள் பரமாப்தனால் கூறப்பட்ட மெய்நூலெனவும் பிரத்யக்ஷானுமான பரோக்ஷ பரோக்ஷஞானத்தை நிச்சயிப்பதாயும் சிவபெருமானே ஆப்தனென தன்னைக்குறித்ததால் பரமாப்தரான சிவபெருமான் பக்ஷபாத மில்லாததாயும் ஸார்வகாலிகங்களிலும் யதார்த்தமாயுள்ளதாயும் நாசரகிதமாயும் நிறைசுத்தானதாயும் ஸ்வதந்திரமாயும் பசுக்களுக்கு பாசநிவிருத்தி கரமாயும்

உள்ளபரமேசுவரவாக்கியம் பிரமாண பூதமேயாகும் எப்பொழுதும் சிரேயஸ்ஸிற்கு நிதியைப்போன்றதெனக் கூறியிருத்தலால் பரமாப்தவாக்கியத்தில் அப்பிரமாண்ய புத்திவகித்தவ புத்தசைவ சிவதூஷணத்தால் நுமக்குற்ற அதோகதியை அறியாது ஆதிசைவர்களுக்கு முக்திவழிகாட்ட வெளிவந்தது நுமக்குற்ற அறியாமையேயன்றோ। தீக்ஷாவிஹீநவிப்ராத்யா: த்ரைவர்ணிகஸ்த்ரியோ ஜாதய:। ஸந்தி சிவ சாஸ்த்ரஸ்ய பாடகா ரௌரவம் நரகம் வ்ரஜேத்। என்னும் வாக்கியத்தால் தீக்ஷையில்லாத பிராம்மணர் முதல் சூத்திரரிறுதியாக சிவசாஸ்திரபடனஞ்செய்தால் ரௌரவாதிநரகத்தை அடைவரெனக்கேட்கப்படுவதால் நும்போன்றசிவதூஷகர் சிவசாஸ்திரபடனஞ் செய்யில்நிறயமே-நுமக்குற்ற பரகதியாய் விதிக்கப்பட்டிருக்கின்றது-சிவசாஸ்திரமென்றதால் வேதம்சிவாகமமிருண்டுமென்பது பொருளாம் வேதாத்யயனத்திற்கு உபனயனாதி ஸம்ஸ்காரமேபோதுமெனவேதமேவிதித்திருக்க சிவதீக்ஷையல்லாதோர் வேதாத்யயனத்திற்கு அனர்கரெனக்கூறுதல் கூடுமோவெனின் வேதம் அபரம் பரமென இருகூராய் நிற்றலின்வேதத்தால் விதித்தஸம்ஸ்காரம் அபரஸம்ஸ்காரமாகிய வரணஸம்ஸ்காரமாம் சிவாகமம்பரயாயிருத்தலின் இந்நூல்விதித்தசிவதீக்ஷை பரஸம்ஸ்காரமாகும் பரஸம்ஸ்காரஞ்செய்யப்பெறாது அபரஸம்ஸ்காரம்மாத்திரமே செய்துள்ளவர் வேதபாகியரே யாவார்கள் ஏனெனில் உபநயனாதிகர்மாக்களால் காயித்திரி உபாஸ்தையும்அக்னி ஸந்தானமும் ஏர்ப்பட்டுள்ளது இவ்வுபனயனஞ் செய்துகொண்டவன் என்ன நெற்றியில் புண்டிரம் தறிக்கிறது எந்ததைவத்தை உபாஸிக்கிறது எந்தஅக்கினி விசேஷம் உபதேசிக்கப்பெற்றகாயித்திரிஸ் தீரீயாபுமாணுவென விசாரிக்க புகுமளவில் இவையாவும் பரவித்தை யாகிய சிவாகமம் சிவதீக்ஷையால் சீர்திருத்தி உண்மையுபகரித்துநிற்கும் உபனயனத்தில் உபதேசிக்கப்பட்ட காயித்திரி சக்திஸ்வரூபமெனவும் இச்சக்திக்கி சக்தனல்லாதிருப்பின் மங்கலத்வமுண்டாகாதெனக்கருதி சிவகாயித்திரி சக்தனுப்பரவித்தை கூட்டிமுடித்தனுக் கிரஹித்ததெனவும் அபர வித்தையால் ஸாமான்யாக்னி உபாஸ்தைகூறியுள்ளதென கழித்து பரவித்தை சிவாக்கினியைக் கூட்டி முடித்திருக்கின்றது மற்றும்பஸ்ம உருத்திராக்கபஞ்சாக்ஷரசிவபூஜாதிபரதர்மங்களை

யும் பரவித்தை அத்வசுத்தி பூர்வமாய்விதித்திருக்கின்றது இவற்றைனோக்கியேயன்றோ ஸ்காந்தம்முதலியபுராணங்களில் ஷட³த்⁴வஶுத்³தி⁴ம் விநா யஸ்து முக்திமிச்ச²தி மாநவ꞉ | ஸ பங்கு³ர்வாஞ்ச²தி ஸ்தா²நம் யஸ்ஸமுத்³ரஞ்ச தர்துகாம꞉ | யதா²ஶ்ரேணி விஹீநஸ்ய ஸௌதா⁴ரோஹணம் | என்னும் வாக்கியத்தால் ஷடத்வ சுத்தியல்லாது முக்தியை விரும்பும் மனிதன் கோலன்றி நடக்கத்தொடங்கிய குருடர்போலும் தோணியன்றி கடலைக்கடக்க விரும்பியவர் போலும் உவமித்துக்கூறப்பட்டிருத்தலால் ஷடத்வசுத்தியல்லாத ஆன்மாக்களுக்கு முக்தி இல்லை என்பதை உத்தேசித்து பரவித்தையாகிய சிவாகமம் சிவதீக்ஷையால் அத்வ சுத்தியை வற்புறுத்த முயன்றது அத்⁴வநாமதி⁴பதி꞉ | என்னுஞ்சுருதிவாக்கியத்தால் ஷடத்வாமார்க்கங்களுக்கு பதியாகிய ஹர உருத்திரமூர்த்தி என வேதத்திலும் மஹிமைபாராட்டிக் கூறியிருத்தலினிதுவுமிவற்றிற்குச்சாதகமாயின அத்வாவென்பது யாகமெனப்பொருள்கொண்டு ஹிம்ஸாபரமான அபரயாகத்தை இங்கனங்கூறிற்றெனவிகற்பப் பொருள் வருவித்துணர்த்துவார்சிலர் அஃதிங்கன்மமயா அபரயாகம் மாம்ஸம் புசிப்போர்க்கு அஸமஸ்கிருதமான மாம்ஸம் புசித்தால் குற்றமாகுமெனக்கருதி தேவதார்ப்பணமானயாகஞ்செய்து புசித்தல் உசிதமெனக்கொண்டு வற்புறுத்தியதருணமேயன்றோ இவற்றை ஸதாச்சாரமாகக்கொண்டு வெளிப்படுதல் யாங்கனம் பரயாகம் பஞ்சாக்னி வித்யாமயமான சிவஸ்வரூபமாய் நிற்றலின் சிவார்ப்பணமான யாகம் பிராமணோத்தமர்களுக்கு வேதசிவாகமங்கள் விதித்திருக்கின்றது ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க³காமோ யஜேத என்னும் வாக்கியத்தால் ஜ்யோதிஷ்டாமாதியாகங்களால் சுவர்க்க சுகத்தை அடைகிறார் எனக்கூறுவதால் இந்திரலோகாதிசுகானுபவமே பலனாய் அபர யாகத்திற்கு விதிக்கப்பட்டிருக்கின்றது பரயாகமாகிய சிவயாகத்திற்கு முக்தியேபலனாய்விதிக்கப்பட்டிருத்தலின் அபரத்தைனோக்கபரம்விசேஷமென்பதுவே தாகமத்தின்றுணிபாம் யாகமென்பது பசுக்களுக்கு பாசநிவர்த்தியைச் செய்யும் ஸத்கர்மாக்களென்பது வேதாகமற்றுணிபாதலின் பசுவென்னும் சப்தத்திற்கு ஸ்மிருதி ஆடு முதலிய ஸகல பிராணிகளுமெனப்பொருள்படுத்திநின்றது வேதாகமங்களோ ஜீவாத்மாவேபசுவென லித்தாந்தித்து நின்றது ஸ்மிருதி

மாம்ஸம்புசிப்போர்க்கு பலபிராப்தி கூறவந்த ஸாமான்ய நூலாதலால் ஜ்யோதிஷ்டோமாதியாகங்களை விசேஷமென வற்புறுத்தி கூறவெளிவந்தது வேதாகமங்களிலோ ஆத்மாநமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம்। ஜ்ஞாநநிர்மதநாப்யாஸாத் பாசம் தஹதி பண்டித:। என்னும் சுருதிவாக்கியத்தால் ஆத்மாவை அரணியாகவும் பிரணவத்தைஉத்தராரணியாகவும் ஞானத்தைகடைந்து பண்டிதர்கள் பாசத்தைதகிக்கவேண்டுமென கூறியிருத்தலால்நாமேபசுபாசபத்தமுடையபசுவாயிருக்கயாகத்தில்வேறொரு பசுவை ஸ்வீகறிப்பது யாதுக்கு ஜ்ஞாத்வா தேவம் ஸர்வபாசாபஹாநி:। என்னும் சுருதிவாக்கியத்தால் பரமேசுவரனை அறிந்தவர்கள் எல்லாபாசத்தினின்று விடுபடுகிறார் எனக் கூறியிருத்தலால் யாகம் முக்தியின் பொருட்டன்றே ஸத்பிராம்மணதிகள் செய்தல்வேண்டும் பத்ததிசைக்கேதுவாம் இந்திராதிபோகத்திற்குறித்தாம் ஜ்யோதிஷ்டோமாதியாகங்களால் க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி என புண்யம் குன்றிய விடத்தில் பூலோகத்தை அடைவாரென சுருதிமுகத்தால் கேட்கப்படுதலால் இந்திரலோகாந்திரபிராப்தி முக்திக்கேதுகரமன்றே தஸ்யைவம் விதுஷோ யஜ்ஞஸ்யாத்மா யஜமாந: ஶ்ரத்தா பத்நீ ஶரீரமித்மம் என்னும் சுருதிவாக்கியத்தால் யாகத்திற்கு ஆத்மா பரமேசுவர சிரத்தாபரஸ்ஸரமானபசுவாகவும் தனதுபத்நீயாக சறீரமாகவும் தனது மார்பு சமித்தாகவும் யாகாங்ககல்பனங்கூறப்பட்டிருத்தலால் இவைஅந்தர்யஜநஜதிஅந்தர்நிஷ்டதர்மங்களே யன்றோ அபரசுருதியின் விஷயத்தை பரவித்தையாகிய சிவாகமங்கள் [illegible] – என சுட்டியுணர்த்தியது இக்கருத்தை நோக்காது ஆடுமுதலிய பிராணிபேதங்களை உயிர் செகுத்து யாகஞ்செய்து உளன்புசித்து வயரோம்புவதால் யாது பயன் இதற்கேப்பத்திருவள்ளுவனாயனாரும் அவிசொறிந்தாயிரம் வேட்டலினொன்றுயிர் செகுத்துண்ணாமைநன்று என்னும் வாக்கியத்தால் ஆத்மாக்களை வதை செய்து ஆயிறம் யாகஞ்செய்தவனை நோக்க உயிரைக்கொன்று தின்னாதிருப்பவன் விசேஷனாவனெனக் கூறியிருக்கின்றார் இஃதன்றினுமக்கு ஜன்மகுந்திரத்வ

ங்கூறியனும்பிரமாணமாகிய பராசர ஸ்மிருதியில் அச்வாலம்பம் கவாலம்பம் ஸந்யாஸம் பலபைத்ருகம் । தேவராச்ச ஸுதோத்பத்தி: கலௌ பஞ்ச விவர்ஜயேத் । என்னும் வாக்கியத்தால் அசுவமேதம் கோமேதம் ஸன்யாசம் பலபைதிருகம் தமயன்தம்பி ஸம்ஸாரத்தினிடம் பிரவேசித்து பிள்ளையுண்டாக்குதல் இவ்வைந்தும் கலியுகத்தில் கூடாதென நீக்கியிருக்க கலிபுருஷனைஸன்யாசி உருக்கொண்டு சிவநிந்தைபுரியவெளிப்பட்டனும்மை ஸ்மார்த்தனெனப் புகழ்ந் தோதுவ தெங்கனம் வேதாகமபுராணஇதிஹாஸங்களாகிய ஸத்ப்ரமாணங்களை அப்பிராமாண்யமாக்கமுயன்று சைவமதமேபொய்யெனப்புறக்கணித்து அத்வைதஸ்தாபனஞ்செய்யவந்த கலிபுருஷரூபமான ஒப்புத்தரே ஸ்மிருதியாயினும் னும்மஸன்னியாசத்தை அங்கீகரித்திருக்கின்றதா கலிஸன்யாஸங்கூடாதெனஸ்மிருதி கண்டித்தொதிக்கியிருக்கஸ்மிருத்யுக்தானுஷ்டானியாமென இவர் வெளிப்படுதல் குற்றமேயன்றோ பதிவாக்காகிய வேதாகமாதிஸச்சாஸ்திரத்தில் அப்பிராமாண்ய புத்திவகித்து சிவநிந்தை புரிந்து அன்யசாஸ்திரத்திற்கு பிரமாணம் நிலைநாட்டவந்த ஏ புத்தரே நீர் பிரமாணமாக்கொண்ட ஸ்மிருதியேனும் மைசிவநிந்தகனுகிய நாத்திகராய்பிருஷ்டத்வஞ்செய்துவிட்டது னும்மவருக்கு ஸ்மிருதியால் கிடைக்கப்பெற்ற அனுகூலம் யாதென்பதை ஈண்டெடுத்து விளக்குவீராக ஸ்மிருதி பதிவாக்காகிய வேதாகமானுகுண்யமாய்கூறியுள்ள பிரமாணங் கிராஹ்யமும் விரோதித்த விடத்தில் அக்கிராஹ்யமென்பதை நீர் இன்னும்அறியீர் ச்ருதிஸ்ம்ருதி விரோதே து ச்ருதிரேவ பலீயஸீ என்னும் ஞாய சாஸ்திர வாக்கியத்தால் வேதத்திற்கும் ஸ்மிருதிக்கும் விரோதம் வந்தால் வேதமேபிரமாணம் ஸ்மிருதி அப்பிராமாண்யமெனக் கூறியிருத்தலால் வேத விருத்ததர்மம் ஸ்மிருதியிலமைந்துள்ளதென்பதேயன்றோ இங்ஙனம் வெளிப்படுகின்றது அன்றேல்விரோதம் வருதல் யாங்ஙனம் சண்டாளோऽபி முநி: ச்ரேஷ்ட: சிவ இத்யாலபேத் ய: தேந ஸஹ ஸம்வஸேத் தேந ஸஹ ஸம்வதேத் தேந ஸஹ ஸம்புஞ்ஜீத — என்னும் முண்டகோபநிஷத்வாக்கியத்தால் சண்டாளனுயிருப்பினும் சிவா எனச்சொன்னல் அவனோடே பேசவேண்டும் அவனோடு வஸிக்கவேண்டும் அவனோடுபுசிக்கவேண்டுமெனக்கூறி யி

ருத்தலால் சிவம் மங்கலனாதல்பற்றி அமங்கலமுடையார் சிவத்யானஞ்செய்யினும் புனிதராவாரென்பது வேதக்கருத்தாதலால் இவற்றை நீற்றுநின்ற ஸ்மிருதிவேதாகமங்களுக் கைக்யபத்தியமாமென்பதை யாவரொப்புவர் சைவமதமே பொய்யென வாதிக்க வந்த நீவீர் அமங்கள முடையாரென்பதில்யாதுதடை சண்டாளரும் சிவதியானத்தால் உயர்ந்தோராகிறார் புத்தப்பிராமணர் சிவநிந்தையால் சண்டாளராகிறார் ஶிவ ஏகோ த்⁴யேய: ஶிவங்கர: ஸர்வமந்யத்பரித்யஜ்ய ஸமாப்தாத²ர்வஶிகா என்னும் உபநிஷித்வாக்கியத்தால்சிவபெருமானொருவரே தியானிக்கத்தக்கவர் பர்றவர்பரித்யஜிக்கத்தக்கவரெனக் கூறியிருத்தலால் வேதங்களால் பரித்யஜிக்கப்பட்டவஸ்துவிற்குஸமிருதிஸர்வோத்கிஷ்டபிரமாணஞ்சாதிப்பதால் ஸ்மிருதிவேதவிருத்தமென்பதுதெற்றென விளங்கும் த்⁴யாயீதேஶாநம் ப்ரத்⁴யாயிதவ்யம் ஸர்வமிதம் ப்³ரஹ்மவிஷ்ணுருத்³ரேந்த்³ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்³ரியாணி ஸஹ பூ⁴தைர் ந காரணம் காரணாநாம் தா⁴தா த்⁴யாதா காரணம் து த்⁴யேய: ஸர்வைஶ்வர்யஸம்பந்ந: ஸர்வேஶ்வர: ஶம்பு⁴ராகாஶமத்⁴யே - என்னும் அதர்வசிகா உபநிஷத்வாக்கியத்தால் பரமேசுவரரே தியானிக்கத்தக்கவர் பிர்யாவிஷ்ணு உருத்திரேந்திராதிகள் அவராலுண்டாக்கப்பட்டவராதலால் இவர்களும் இந்திரியங்களும் பூதங்களும் காரணமன்று இவற்றுல் காரணரேயேதியானிக்கவேண்டும்ஸர்வஐசுவரியத்துடன்கூடினவ்ராயும் ஆகாசமத்தியவர்த்தியாயுமுள்ள சம்புவையேதியானிக்கத்தக்கதெனகூறியிருத்தலால் ஸ்மிருதி ஜகத்காரணவஸ்துவான பரமேசுவரரை இழந்து அன்யவஸ்துக்களுக்குக்காரணங்கூறியிருத்தலால்வேதவிருத்ததர்மமன்றெனபதெங்ஙனம் பொருந்தும் ஸ்மிருதியில் ஹிரண்யகர்பாதி வஷ்டிசளும் வைசுவாநராக்னி உபாஸ்தையும் விசேமெனக்கொண்டு சுருத்யந்தர்கதமானசிவோபாஸ்த்தையை மறந்துங்கூறியதின்றுதலால் இவ்வுபாஸனையற்ற ஸ்மிருத்யனுஷ்டானம் கேவலம் கர்மபரமாயொதுக்கப்பட்டு இவை வேதாகம நிஷ்டதர்மமன்றுதலால் இவர்கள் கேவலதாந்திரீகரென ஓதுக்கப்படுவார் மஹோபநிஷத் - ஏகோ ஹ வை நாராயண ஆஸீந்ந ப்³ரஹ்மா நேஶாநோ நாபோ நாக்³நீஷோமௌ -

ஹிரண்யகர்ப்பம் பஶ்யத ஜாயமானம் - என்னும் வாக்கியத்தால், தேவர்களுக்கெல்லா முதன்மையாயும் விசுவாதிகராயும் மஹர்ஷித்வமுடையவராயுமுள்ள பரமேசுவரர் ஹிரண்யகர்ப்பனை உண்டாக்கினுரெனக்காணப்படுதலால் ஹிரண்யகர்ப்பபிரதானகாரணவாதமுடையமன்வாதிஸ்மிருதிகள் வேதத்துட்பொருளுணர்த்தும்மெய்னூலாமாறெங்கனம் இவற்றுளிவற்றை கேவல தந்திரமெனவும் இத்தந்திரானுஷ்டானிகளாகிய சிவநிந்தர்களுக்குநரகபதனம் வேதாகமபுராண இதிஹாஸங்களால்கூறப்பட்டுள்ளது ஒப்புத்தரே வேதமே சிவாகமம் இவ்விரண்டும் பிரும்ம ஞானத்திற்கு இரண்டுநேத்திரம்போன்றதென்பதை நீரின்னுமறியீர் வேதம் தடஸ்தமாய்பிரும்மஞ்ஞானமாகியசிவஞானத்தைபிரகாசிக்கிறதும் சிவாகமம்ஸ்வரூபலக்ஷணையாய்பிரும்மஞ்ஞானத்தை பிரகாசிப்பிக்கிறதுமாய் தடஸ்தத்தைநோக்க ஸ்வரூபம் விசேஷமாதல்பற்றி வேதம் அபரவித்தையும் சிவாகமம்பரவித்தையுமாய் மேம்பட்டுநிற்கும இங்கனம் தந்திரமென்பது வைதிக தந்திரம் உபநிஷித்தந்திரம் சிவாகமதந்திரம் சாக்ததந்திரம் காருட தந்திரம் பைரவதந்திரம் பூததந்திரம் ஸ்மிருதிதந்திரம் முதலிய தந்திரங்கள் படித்தாய் நிற்றலின் தந்திரமென்பதுவேதமுதல்ஸ்மிருதி இறுதியாகவுள்ள யாவற்றிற்கும் பொதுப்பெயர் இவற்றுள்சைவசித்தாந்தத்தைநோக்கலாகும் பாசுபதந்தாழ்ந்தது இவற்றைநோக்க காபாலிகாதந்திரங்கள் தாழ்ந்தது இவற்றைநோக்க பாஞ்சராத்திரம் தாழ்ந்தது இவற்றைநோக்ககாருடந்தாழ்ந்தது இவற்றைநோக்கஸ்மிருதிதந்திரம்தாழ்ந்தது ஸ்மிருதிக்கு கீழிட்ட தந்திரமின்றுதலால் ஸ்மிருதிக்கு மேலிட்ட தந்திர நிஷ்டதர்மமுடையார் ஆஸ்திகரும் ஸ்மிருத்யுக்த தந்திரநிஷ்டர்கள் நாஸ்திகருமாய் பிரமாணவாயிலாய் வெளிப்படுபவர் ஸாங்கியகாபிலமன்வாதி ஸ்மிருதிகள் ஜகத்ஜன்மாதிகாரணமான சிவபெருமானை அறவேயொழித்து ஹிரண்யகர்ப்பாதிகளை பிரதானகாரணமாக்கிவைசுவாநராக்னியே பரம்பொருளென அக்னிஉபாஸ்தைகூறுவதால் வைசுவாநராக்னிஅசேதனமுடையதுபற்றி இவர்களைகேவலம்கர்மமேபிராதான்யமென்னும் நாஸ்திகராய்ஒதுக்கப்படுவார் [illegible]

ப்ரதிஷ்டிதாம் வேத — என்னும் சுருதி வாக்கியத்தால் இந்த வை சுவாநராக்கினியை புருஷனுக்குள் வைக்கப்பட்டிருக்கிறதெனக் கேட்கப்படுவதாய் இவை ஜாடராக்னி பரமேயாகும் இதுமட்டோ அயமக்நிர்வைச்வாநரோ யோயமந்த: புருஷே யேநேதமந்நம் பச்யதே யதிதமத்யதே தஸ்யைஷ கோஷோ பவதி யமேதத் கர்ணாவபிதாய ச்ருணோதி ஸ யதோத்க்ரமிஷ்யந் பவதி நைநமேதம் கோஷம் ச்ருணோதி — என்னும் ஜாடராக்னி பிரயோகங்களில் காணப்படுதலின் வைசுவாநராக்னி உபாஸனை ஜாடராக்னி பரமென்பதே திண்ணம் அக்நிர்தேவதா வாஸ்யாச்வேச்வாநஸ்ஸா: [illegible] ஸகவாஸம் நிவர்த்தேச்வாநரோ தூஜாத — என்னும் சுருதி வாக்கியத்தால் அக்னி தேவதாத்மகமாயிருத்தல் வேண்டும் அந்ததேவதாத்மகமான அக்னியும் த்வாதசாந்தஸ்தானத்திலிருந்து ஸங்கிரஹித்தல் வேண்டுமெனக்கூறியிருத்தலால் வைசுவாநராக்னி என்பது பொருந்தாது பரவித்தையாகிய சிவாகமத்தில் ஜ்ஞாநாநலம் ந்ருலோத்தத்ர ஸமயார்யாந் தஸ்தேவ்ரதம் ஹ்ருத்கண்டேச்வரீ சக்த்யா த்ஸ்தேஷு ந்நயாநலம் ஆதஸாக்ஷவமிதியாஜ்ய தத்த்ஜவஹ்நி [illegible] தநவிந்யஸ்யேமோ வே [illegible] ஸ்யாஹாவேதாஹவேச — என்னும் வாக்கியத்தால் அந்த நிஷ்டபிரரூபமான ஞானக்கினியை ஹிருதயபுண்டரகத்திலிருந்து ஸுஷும்னமார்க்மாய்த்வாதசாந்த ஸ்தானத்திலுள்ளதே ஜஸமுகத்தை அந்தமார்க்கத்தினுல் எடுக்க இந்மஅக்ள் ஸர்வகர்மாக்களுக்கும் போக்யமாகுமெனக்கூறியிருத்தலாலும் அகோரசிவாச்சாரியார் பரவித்யாபாஷ்யத்தில் — ஹ்ருத்தாந்நஸ்த்ர காகாரம் ஸம்ஹாரமுத்ரயா வஹ்நேர்த்ருஷீகவா ஸுஷும்நயாம்நாஸத்ந்நா வினிஷ்க்ராஸ்ய தஹாந ப்ரஹாரவம்ஸ்யாக்வாஸ்ட்பொஜுரேஉகேந பலேணிஸ்யாய ஓம் ஹாம்வஹ்நிசேதந்யாய நம: ஸ்யாநம் விஹ்ஞேஸ்ஸுதநம் ரவேம்வேதந்யதிஹாவயேத் ஸவர்பக்ஷ்ப தம்ஸவர்ணாயஹாரிஷ்டவ்ருவதர்கம் சுவ்ருக்தவேஸாமாஸ்ந்ருச்ச தந்யவிஶ்ருஹம் உதிஷ்யுக்வாவாசஜ்யேஸ்ஸ்ஹுளவிந்யஸ்ய வஸம் ஹிதயாஸவமஜ்ய — என்னும் வாக்கியத்தால் வைசுவாநராக்னியாகிய ஜாடராக்னியை தாரகாகாரமாய் ஸம்ஹாரமுத்திரையோடு பூரகத்தால் கிரகித்து சுஷும்னையில்